வெளியீடு 23-10-98 Issued 23-10-98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 3, 1998 – தொகுதி 43– எண் 1

Friday the 3rd April, 1998 – Volume 43 – No. 1

பேரவைச் செயலகம், சென்னை - 600 009

sembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

418/99

3–4–1998

# உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| (i) | தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| (ii) | Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| (iii) | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | xiii-xiv |
| (iv) | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| *1.* | **வினாக்கள்-விடைகள்--** | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-43 |
| *2.* | **தகவல் கோரல்--** | |
| | ஜெயின் கமிஷன் இறுதி அறிக்கையை வெளியிடாமல் இருக்க மத்திய அரசை முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா நிர்ப்பந்திப்பதாகக் கூறப்படுதல் | 44-46 |
| *3.* | **அறிக்கைகள் அளித்தல்--** | |
| | (அ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு | 46 |
| | (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 46 |

| | | |
|---|---|---|
| 6. வேளாண்மைத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு. |
| 7. பொதுப்பணித் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. துரைமுருகன் :** பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள். |
| 8. போக்குவரத்துத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம். |
| 9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. பகம்பொன் தா. கிருட்டிணன் :** நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள். |
| 10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :** தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை. |
| 11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. கா. நா. நேரு :** உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள். |
| 12. பால்வளத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. க. சுந்தரம் :** பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு. |



| | | |
|---|---|---|
| 13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :** தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்). |
| 14. சட்டத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. ஆலடி அருணா :** சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல். |
| 15. கைத்தறித் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி :** கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு. |
| 16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம் :** பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர். |
| 17. வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :** வனம், சின்கோனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம். |
| 18. வீட்டு வசதித் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :** வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி. |

| | | பக்கங்கள் |
|---|---|---|
| 4. | விதி 110-ன் கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்-- | |
| | (அ) மின் பற்றாக்குறையை முன்னிட்டு தொழிற்சாலைகள் கடைப்பிடிக்க வேண்டிய வாரவிடுமுறை நாட்கள் குறித்து மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் அறிக்கை | 47-50 |
| | (ஆ) தமிழகத்தில் பூண்டி நீர்த்தேக்கத்திற்கு கிருஷ்ணா நதிநீர்வரத்து பற்றிய பொதுப்பணித் துறை அமைச்சரின் அறிக்கை | 100-102 |
| 5. | வரவு-செலவுத் திட்டம், 1998-99, பொது விவாதம்--தொடர்ச்சி | 51-131 |
| | 1. திரு. சி. சண்முகம் | 51-56 |
| | *2. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் | 56-66 |
| | *3. டாக்டர் க. கிருஷ்ணசாமி | 67-72 |
| | 4. திரு. வீ. தமிழ்மணி | 72-78 |
| | 5. திரு. எஸ். திருநாவுக்கரசு | 78-99 |
| | 6. திரு. த. பூவேந்தன் | 102-105 |
| | *7. திரு. இரா. தாமரைக்கனி | 106-121 |
| | 8. திரு. ம. அப்துல் லத்திப் | 122-131 |
| 6. | அரசினர் தீர்மானம்-- | |
| | விதி 32-ஐத் தளர்த்துதல் | 131 |
| 7. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 132-133 |


218453

D
Y211,31'N98
N98 . 43.1



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. முதலமைச்சர் | : | **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள். |
| 2. கல்வி அமைச்சர் | : | **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர். |
| 3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

| | |
|---|---|
| **6. Minister for Agriculture** | : **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture. Agricultural Engineering. Agro Service Co-operatives. Horticulture. Sugarcane Cess and Sugarcane Development. |
| **7. Minister for Public Works** | : **The Hon. Thiru Duraimurugan:** Public Works. Irrigation including Minor Irrigation and Programme Works. |
| **8. Minister for Transport** | : **The Hon. Dr. K. Ponmudi:** Transport. Nationalised Transport. Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| **9. Minister for Highways** | : **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :** Highways and Ports. |
| **10. Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** | : **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language. Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| **11. Minister for Food, Public Distribution System and Co-operation** | : **The Hon. Thiru K. N. Nehru:** Food. Price Control and Civil Supplies. Public Distribution System. Co-operation and Statistics. |
| **12. Minister for Milk** | : **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development. Slum Clearance and Accommodation Control. |



| | |
|---|---|
| **13. Minister for Labour** | : **The Hon. Thiru A. Rahman Khan:** Labour. Census. Employment and Training. Iron and Steel Control. Newsprint Control and Wakf. |
| **14. Minister for Law** | : **The Hon. Thiru Aladi Aruna:** Law. Courts. Prisons. Legislation on Weights and Measures. Registration of Companies. Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| **15. Minister for Handlooms** | : **The Hon. Thiru N. K. K. Periasamy:** Handlooms. Textiles and Environmental Pollution Control. |
| **16. Minister for Backward Classes** | : **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:** Backward Classes. Most Backward Classes and Denotified Communities. Indians Overseas. Refugees and Evacuees. |
| **17. Minister for Forest and Printing** | : **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest. Cinchona. Stationery and Printing and Government Press. |
| **18. Minister for Housing** | : **The Hon. Thiru K. Pitchandi:** Housing. Rural Housing Development. Town Planning and Urban Development. |
| **19. Minister for Rural Industries and Registration** | : **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries. Registration and Stamp Act and Nutritious Meals. |
| **20. Minister for Information and Publicity** | : **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity. Film Technology and Cinematography Act. |

19. **ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. **செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம்.

21. **கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன் :**
கால்நடைப் பராமரிப்பு.

22. **சமூக நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் :**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. **சுற்றுலாத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் :**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. **கதர்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. **மீன் வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** : **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** : **The Hon. Prof. K. Anbazhagan :**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** : **The Hon. Thiru Arcot N. Veerasamy :**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** : **The Hon. Thiru Nanjil K. Manoharan :**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** : **The Hon. Thiru Ko. Si. Mani :**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

| | | |
|---|---|---|
| 21. **Minister for Animal *Husbandry*** | : | **The Hon. *Pulavar P. M. Senguttuvan:*** *Animal Husbandry.* |
| 22. **Minister for Social Welfare** | : | **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | : | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. **Minister for Tourism** | : | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. **Minister for Khadi** | : | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 26. **Minister for Fisheries** | : | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

திரு. ரா. சேதுநாதன்

திரு. கு. மனோகரன்

திரு. வ. வேலுசாமி

திரு. சி. ஞானசேகரன்

திரு. நா. பெரியசாமி

திரு. முகம்மது கோதர் மைதீன்

*செயலாளர்*

திரு. டி. சாலமன் ஜெயபால்

| | | | |
|---|---|---|---|
| 17. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 18. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 19. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 20. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 23. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 25. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 29. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 30. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| 31. | திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| 32. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 33. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 35. | திருமதி இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 36. | திரு. நா. நடராஜன், பி.ஏ. | .. | தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. லி. | .. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. | .. | செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ. அ. | .. | பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. | நத்தம் |
| 19. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | .. | வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. | ஆலங்குளம் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன்,<br>பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன்,<br>பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன்,<br>பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன்,<br>டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திரு. இரா. வெங்கடேசன்,<br>எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 6. | திரு. கி. சாயிநாதன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திருமதி வி.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன்,<br>பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன்,<br>எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின்<br>சிறப்புத் தனிச் செயலர் |
| 12. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள்,<br>எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 13. | திரு. க. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 14. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின்<br>சிறப்பு நேர்முக<br>உதவியாளர் |
| 15. | திரு. க. சம்பத்ராஜன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |

| | | |
|---|---|---|
| 21. | ஆல்பன், டாக்டர் வே. | திருவட்டாறு |
| 22. | ஆவுடையப்பன், திரு. இரா. | அம்பாசமுத்திரம் |
| 23. | ஆறுமுகம், திரு. தி.ப. | திருச்செங்கோடு |
| 24. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | அண்ணா நகர் |
| 25. | ஆனந்தன், திரு. பால. | வந்தவாசி (செ.வ.) |
| 26. | இரகுமான்கான், திரு. அ. | இராமநாதபுரம் |
| 27. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | மேலூர் |
| 28. | இராசமாணிக்கம், திரு. பி. | ஒரத்தநாடு |
| 29. | இராசன், திரு. வி. பி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 30. | இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. | ஆண்டிமடம் |
| 31. | இராமசாமி, டாக்டர் வை. | பண்ருட்டி |
| 32. | இராமசாமி, திரு. கே. ஆர். | திருவாடனை |
| 33. | இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். | கம்பம் |
| 34. | இராமச்சந்திரன், திரு. சி. இரா. | தொண்டாமுத்தூர் |
| 35. | இராமச்சந்திரன், திரு. மா. | திருவோணம் |
| 36. | இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 37. | இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 38. | இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். | பள்ளிப்பட்டு |
| 39. | இராமஜெயம், திரு. ந. பூ. | மயிலாப்பூர் |
| 40. | இராஜ்ரெட்டி, திரு.ச. | தளி |
| 41. | இராஜேந்தர், திரு. டி. | பூங்கா நகர் |
| 42. | இளங்கோ, திரு. கோ. | அவினாசி (செ.வ.) |
| 43. | ஈஸ்வரன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 44. | உதயசூரியன், திரு. தா. | சங்கராபுரம் |
| 45. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | தஞ்சாவூர் |
| 46. | கணேசன், திரு. ஐ. | எடப்பாடி |
| 47. | கணேசன், திரு. கே. சி. | ஜெயங்கொண்டம் |
| 48. | கருணாநிதி, கலைஞர் மு. | சேப்பாக்கம் |
| 49. | கருப்பசாமி, திரு. சொ. | சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 50. | கருப்பண்ண உடையார், திரு. ந. | பாபநாசம் |
| 51. | கருப்புசாமி, திரு. டி. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 52. | கன்னையன், திரு. க. | தொட்டியம் |
| 53. | காஞ்சனா கமலநாதன், டாக்டர் | கிருஷ்ணகிரி |
| 54. | காந்தி, திரு. ஆர். | இராணிப்பேட்டை |
| 55. | கிருஷ்ணசாமி, டாக்டர் க. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 56. | கிருஷ்ணன், திரு. எஸ். வி. | நாங்குநேரி |
| 57. | கிருஷ்ணன், திரு. சீ. வெ. | வேடசந்தூர் |
| 58. | குண்டன், திரு. டி. | உதகமண்டலம் |
| 59. | குத்தாலம் பி. கல்யாணம், திரு. | குத்தாலம் |
| 60. | குமாரதாஸ், டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 61. | குழந்தை தமிழரசன், திரு. | விருத்தாசலம் |
| 62. | கோதண்டம், திரு. ஏ. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 63. | கோபால், திரு. பா. | மேட்டூர் |
| 64. | கோபு, திரு. சி. | அணைக்கட்டு |
| 65. | கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 66. | கோவிந்தன், திரு. ப. | தாரமங்கலம் |

111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கு.ர.கோ. .. சேலம்-1
126. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு. எஸ். வி. .. பேராவூரணி
130. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
131. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
132. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
133. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
134. துரைமுருகன், திரு. .. காட்பாடி



135. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
136. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
137. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
138. நடராஜன், திரு. த. .. செஞ்சி
139. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
140. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)
141. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
144. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
145. நேரு, திரு. கா.ந. .. லால்குடி
146. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
147. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
148. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
149. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
154. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
155. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
157. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

| | | |
|---|---|---|
| 67. கோவிந்தன், திரு. வெ. | .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 68. சக்ரபாணி, திரு. ஆர். | .. | ஒட்டன்சத்திரம் |
| 69. சண்முகம், திரு. கோ. | .. | திருப்பத்தூர் |
| 70. சண்முகம், திரு. சி. | .. | ஆலந்தூர் |
| 71. சண்முகம், திரு. ம. | .. | கிணத்துக்கடவு |
| 72. சந்தானம், திரு. லா. | .. | சோழவந்தான் |
| 73. சந்திரசேகரன், திரு. சி. | .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 74. சந்திரசேகரன், திரு. துரை. | .. | திருவையாறு |
| 75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. | .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 76. சம்பத், திரு. ஏ.ஜி. | .. | முகையூர் |
| 77. சரஸ்வதி, திருமதி ஆர். | .. | தாராபுரம் (செ.வ.) |
| 78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. | .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 79. சாமிநாதன், திரு. மு.பெ. | .. | வெள்ளக்கோவில் |
| 80. சிங்காரவேலு, திரு. வி.பி. | .. | வால்பாறை (செ.வ.) |
| 81. சிவபுண்ணியம், திரு. வை. | .. | மன்னார்குடி |
| 82. சிவராமன், திரு. ஆர். | .. | திருப்பத்தூர் |
| 83. சிவராஜ், திரு. சு. | .. | ரிஷிவந்தியம் |
| 84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். | .. | பனமரத்துப்பட்டி |
| 85. சிவானந்தம், திரு. ஆர். | .. | ஆரணி |
| 86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. | .. | திருத்தணி |
| 87. சின்னய்யா, திரு. வெ. | .. | திருமயம் |
| 88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். | .. | விருதுநகர் |



| | | |
|---|---|---|
| 89. சுகவனம். திரு. இ.ஜி. | .. | பர்கூர் |
| 90. சுடலைமுத்து, திரு. அ. | .. | போடிநாயக்கனூர் |
| 91. சுதர்சனம், திரு. டி. | .. | பூந்தமல்லி |
| 92. சுந்தரம், திரு. க. | .. | பொன்னேரி (செ.வ.) |
| 93. சுந்தரம், திரு. ந. | .. | காரைக்குடி |
| 94. சுந்தரம், திரு. பி.ஆர். | .. | ராசிபுரம் |
| 95. சுந்தர், திரு. கே. | .. | உத்திரமேரூர் |
| 96. சுப்பராயன், திரு. கே. | .. | திருப்பூர் |
| 97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. | .. | திருவள்ளூர் |
| 98. சுப்பிரமணி, திரு. பி.என். | .. | ஆற்காடு |
| 99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. | .. | திருநெல்வேலி |
| 100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | .. | மொடக்குறிச்சி |
| 101. சுரேஷ் ராஜன், திரு. என். | .. | கன்னியாகுமரி |
| 102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. | .. | மருங்காபுரி |
| 103. செங்கை சிவம், திரு. | .. | பெரம்பூர் (செ.வ.) |
| 104. செல்லக்குமார், டாக்டர் அ. | .. | தியாகராயநகர் |
| 105. செல்வம், திரு. ரெ. | .. | குளித்தலை |
| 106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. | .. | கொளத்தூர் (செ.வ.) |
| 107. செல்வராஜ், திரு. து. | .. | உடுமலைப்பேட்டை |
| 108. சேகரன், திரு. ஆர். ஆர். | .. | ஓமலூர் |
| 109. சேதுநாதன், திரு. ரா. | .. | திண்டிவனம் |
| 110. சைதை கா. கிட்டு, திரு. | .. | சைதாப்பேட்டை |

158. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
159. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
160 புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
161. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
162. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
163. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
164. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
165. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
166. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா)
167. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
168. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
171. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
172. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
173. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. கோ. சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி. கே. .. பெண்ணாகரம்
178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
179. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



180. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
181. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
182. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம். (செ.வ.)
183. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
184. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
185. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
186. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
188. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
189. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
190. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
191. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
192. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
193. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
194. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
195. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
196. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
197. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
198. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
199. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
200. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
201. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
202. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

203. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்
204. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்
205. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)
206. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்
207. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்
208. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி
209. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்
210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என். எஸ். .. காங்கேயம்
211. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு
212. வல்லரசு, திரு. பி.என். .. உசிலம்பட்டி
213. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்
214. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்
215. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்
216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. வீரபாண்டி
217. வீரப்பன், திரு. கே.கே. .. கபிலர்மலை
218. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்
219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
220. வெங்கடாசலம், திரு. ஜி. எல். .. பாலக்கோடு
221. வெங்கடேசன், திரு. ச. க. .. மதுராந்தகம்
222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். .. காவேரிப்பட்டினம்
223. வெங்கிடு, திரு. ஜி. பி. .. கோபிச்செட்டிப் பாளையம்
224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)



225. வேணு, திரு. கி. .. கும்மிடிப்பூண்டி
226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
227. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்
228. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு
229. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)
230. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
231. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்
233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி
234. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
235. ஆன் டி மான்டி, திருமதி .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

**திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்**

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 20, ஈஸ்வர - திருவள்ளுவர் ஆண்டு, 2029
## 1998 ஏப்ரல் 3, வெள்ளிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை*
*முறைகாக்கும் முட்டாச் செயின்."*

*நீதி வழுவாமல் ஓர் அரசு நடைபெற்றால் அந்த அரசை அந்த நீதியே காப்பாற்றும்.*

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா எண் 111. திரு. செங்கை சிவம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**141—**

### அரசு ஊழியர் இறுதிச் சடங்கிற்கு உதவித் தொகையை உயர்த்துதல்

***6431—திரு. செங்கை சிவம்:**

*மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பணியில் அரசு ஊழியர் மரணம் அடைந்தால் இறுதிச் சடங்கிற்கு வழங்கப்படும் ரூ. 2,000-த்தை உயர்த்தி ரூ. 5,000-ஆக வழங்கப்படுமா?*

(ஆ) இந்தத் தொகை மரணம் அடைந்த அரசு ஊழியர் குடும்பத்தாருக்கு வழங்கப்படும் குடும்ப நல நிதி ரூபாய் ஒரு இலட்சத்தில் இருந்து பிடித்தம் செய்யாமல் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதிச் சடங்கு உதவித் தொகையை ரூ. 2,000-லிருந்து ரூ. 5,000-ஆக உயர்த்தியதற்காக நன்றி தெரிவிக்கும் அதேநேரத்தில், 1971-ல்தான் நம்முடைய முதலமைச்சர், குடும்ப நல நிதி என்று ஆரம்பித்து பிறகு அது படிப்படியாக உயர்ந்து இன்றைக்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இதனை மத்திய அரசில் Group Insurance என்ற அடிப்படையில் ஊழியர்களுக்கு ரூ. 1 லட்சம் வழங்குகிறார்கள். ஈமச் சடங்கிற்காகத் தரப்படும் தொகையை மட்டும் அரசு பிடித்தம் இல்லாமல் முழுமையாக வழங்குகின்றார்கள். எனவே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து பிடித்தம் செய்யக்கூடிய இந்தத் தொகையைப் பிடிக்காமல் இருக்க முன்வருவார்களா என்றும், அது மட்டுமல்லாமல் இங்கு நிறைய ஓய்வூதியம் பெறும் குடும்பங்களைக் கண்டு சேர்க்கின்ற வகையில் வேறு எந்தச் சலுகைகளாவது அரசால் வழங்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, 1971 ஆம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றபோது, இந்தக் காலகட்டத்திலேதான் [illegible] அந்தக் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் [illegible] அரசு ஊழியர் அவர்களுடைய மாத ஊதியத்தில் இருந்து ஒரு ரூபாய் மாதாமாதம் பிடித்தம் செய்யப்பட்டு அரசு ஊழியர் இறக்க நேரிடும்போது அந்தக் குடும்பத்திற்கு 10,000 ரூபாய் ஒட்டுமொத்தத் தொகையாக அப்போது வழங்கப்பட்டது. பின்னர், எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியில் மூன்று ரூபாயாகப் பிடித்தம் செய்யப்பட்டு 20,000 ரூபாயாக அந்தத் தொகை உயர்த்தப்பட்டது. 1989 ஆம் ஆண்டு மீண்டும் இந்த அரசு பொறுப்பேற்றபோது அந்தத் தொகை ஐந்து ரூபாயாக மாதந்தோறும் பிடிக்கப்பட்டு 10,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது. பிறகு 1991 ஆம் ஆண்டு நடந்த ஆட்சியில் அந்தத் தொகை 10 ரூபாயாக உயர்த்தப்பட்டு 60,000 ரூபாயாக வழங்கப்பட்டது. தற்போது 10 ரூபாய் பிடிக்கப்பட்டு இதுவரையிலே அந்தத் தொகை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இப்போது 20 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. காரணம், 1995-96 ஆம் ஆண்டில் இந்த 10 ரூபாய் பிடித்தத்தின் வாயிலாக அரசுக்கு வரவாக வந்தது ரூ. 9,93,30,313 ஆனால், இறந்த அரசு ஊழியர்களுடைய குடும்பத்திற்குத் தரப்பட்ட தொகை ரூ. 22,91,11,088. இப்படி 9 கோடி ரூபாய் வரவும், 22 கோடி ரூபாய் செலவுமாக ஆயிற்று. 1996-97-ல் கூட, வரவு 9 கோடியே 20 இலட்சத்து சொச்சம் செலவு 20 கோடியே 21 இலட்சம் என்ற அளவிற்கு ஆகியிருக்கின்றது. எனவேதான், இந்த 10 ரூபாய் என்பதை 20 ரூபாய் என்று ஆக்கினால் வரவுக்கு மீறிய இந்தச் செலவு இரண்டு அல்லது மூன்று கோடி ரூபாயோடு நிற்கும் என்பதற்காக 20 ரூபாய் என்று ஆக்கப்பட்டிருக்கின்றது. இந்நிலையில், ஏற்கெனவே அரசு ஊழியர்கள் இறந்தால் 2,000 ரூபாய் உடனடியாக அவர்களுடைய ஈமச் சடங்கிற்காகத் தரப்பட்டது. அதை இந்த அரசு 5,000 ரூபாய் என்று 21-1-1997-ல் உயர்த்தி ஆணை வெளியிட்டிருக்கின்றது. ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கும்போது அந்த 5,000 ரூபாயை இந்த ஒரு இலட்சம் ரூபாயில் பிடித்துக்கொள்வதை நிறுத்திவிட வேண்டுமென்றும், பிடித்தம் செய்யக் கூடாது என்பதும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை. அந்தக் கோரிக்கையை நான் சொன்ன இந்தக் கணக்கின் அடிப்படையிலே ஏற்க இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினரே அறிவார் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரணமுற்ற அரசு ஊழியர்களுக்கு வழங்கும் தொகையை ரூ. 2,000-லிருந்து ரூ. 5,000-ஆக உயர்த்தியிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. அந்த ஐந்தாயிரம் ரூபாயையும் இறுதிச் சடங்கு நிகழ்ச்சி அன்றே கொடுக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

|1998 ஏப்ரல் 3

முற்பகல் 9-35

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிக் கொடுக்க வேண்டுமென்றுதான் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எங்கேயாவது தவறு நேர்ந்தால், தாமதம் ஏற்பட்டால், அதை அரசுக்குத் தெரிவித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு ஊழியர்கள் மரணம் அடைந்த பின்னால் அவர்களுடைய வாரிசுகள் வேலையில்லாமலும், ஆதரவு இல்லாமலும் தத்தளிக்கின்ற சூழ்நிலையில், கருணை அடிப்படையில், அரசு அந்த வாரிசுதாரர்களுக்கு வேலை கொடுக்கின்றது. ஆனால், அப்படிக் கொடுக்கப்படுகின்ற அந்தப் பணியானது கல்வித் துறையிலே எட்டு ஆண்டுகளிலிருந்து பன்னிரண்டு ஆண்டுகள் வரை ஆகின்றது. இதிலே துறைக்குத் துறை மாறுபாடு இருக்கிறது. இன்னும் பல ஆண்டுகள் ஆகியும்கூட, பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர்களுடைய வாரிசுதாரர்கள் வேலை கிடைக்காமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணை வினாவா? நீங்கள் Lecture அடித்துக் கொண்டிருக்காதீர்கள். கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம், ஓர் ஆண்டுக்குள் எப்படியாவது, இறந்துபோன அரசு ஊழியர்களுடைய வாரிசுதாரர்களுக்கு வேலை அளிக்க ஆவன செய்யப்படுமா என்று கேட்டபோது, அதற்குக் 'கருணைக்கு எல்லை இல்லை' என்று மிக அழகான வார்த்தையைப் போட்டு முதல்வர் அவர்கள் பதில் சொன்னார்கள். எனவே, முதல்வர் அவர்களுடைய கருணைப் பார்வை எல்லா அமைச்சர்களுக்கும் சென்று, எல்லாத் துறையினருக்கும் சென்று, வாரிசுதாரர்களுக்கு ஓர் ஆண்டிற்குள் வேலை கொடுப்பதற்கு உத்தரவிடுவார்களா என்று தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி கொடுக்கப்படுகின்ற சூழ்நிலையில், பணியிடம் காலியில்லாதபோது



1998 ஏப்ரல் 3|

கொடுப்பதற்கு இயலாது. பணியிடம் காலியாகும் நேரத்தில் எல்லாம் வாரிசுதாரர்களுக்கு முன்னுரிமை தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் இறந்தால், இறுதிச் சடங்கிற்குப் பணம் தருவதுபோல, மற்றவர்கள் யார் யார் இறந்தால் இறுதிச் சடங்கிற்குப் பணம் வழங்கப்படுகிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை, எளிய குடும்பத்தில், குடும்பத் தலைவர் இப்படி இறக்க நேர்ந்தால் அதற்கும் ஒரு தொகை வழங்கப்படுகிறது. இதைப்பற்றித் தனிக் கேள்வி கேட்டால் மேலும் சில விவரங்களை வழங்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களில் அரசு ஊழியர்கள் மரணம் அடைந்தால் ஈமச் சடங்கிற்கு எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது? அரசு ஊழியர்கள் இறந்த பிறகாவது, அவர்களுடைய ஈமச் சடங்கிற்குக் கொடுப்பது தாராளமாக இருந்தால் நன்றாக இருக்கும். குடும்பத்திலே உள்ளவர் இறந்துவிட்டால், குடும்பத்திலே உள்ளவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இப்போது இருக்கிற விலைவாசியில் இறந்தவருக்குப் புதுத் துணி வாங்க, குடும்பத்தில் உள்ளவர்களுக்கு புதுத் துணி வாங்க, மாலை வாங்க, உறவினர்களுக்கு சாப்பாடு போட வேண்டியதற்குச் செலவு. இறந்துவிட்டார் என்ற செய்தியை மற்ற உறவினர்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு ஆகும் போக்குவரத்துச் செலவு. இறந்தவரை அடக்கம் செய்வதற்கான செலவு. இதை எல்லாம் கணக்குப் பார்த்தால் 9,200 ரூபாய் வரை ஆகிறது. ஆகவே, இதைப் பத்தாயிரம் ரூபாயாக உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எந்தக் கணக்கில் 9,200 ரூபாய் செலவு ஆகிறது என்று சொல்லுகிறீர்கள்?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலம் வரையிலும் 2,000 ரூபாயாக இருந்ததை, இப்போது 5,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். அதற்கு மேலும் செலவு ஆகும் என்றால், எப்படி என்றாலும் பிடித்துச் செய்யப் போகும் தொகைதான் அது. ஆகவே, அதை வழங்குவது பற்றி அரசு ஆலோசிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் இறந்த பின்பு அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலே வேலை வழங்கப்படுகிறது. காலக்கெடு வைத்து, வரிசைக்கிரமமாக அவர்களுக்கு வேலை கொடுக்கப்படுகிறது. ஆனால், சில சந்தர்ப்பங்களிலே, அரசு ஊழியர்கள் இறக்க நேரிடும்போது, அவர்களுடைய வாரிசுகள் தாயும் இல்லாமல், தகப்பனும் இல்லாமல் அனாதைகளாகி விடுகின்ற சூழ்நிலை இருக்கிறது. தாயும், தந்தையும் இல்லாத அப்படிப்பட்ட வாரிசுதாரர்களுக்கு வரிசை அடிப்படை என்று இல்லாமல், முன்னுரிமை கொடுத்து அவர்களுக்குப் பணி கொடுக்க அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய இந்தப் பிரச்சினை குறித்தும் அரசு ஆலோசிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி இலாகாவிலே பணியாற்றிய ஒருவர் பணியிலே இருக்கும்போது இறக்க நேரிட்டால், அவருடைய வாரிசுகளுக்கு அந்த இலாகாவிலே கருணை அடிப்படையிலே வேலை தரப்படுகிறது. ஆனால், அப்படி அந்த இலாகாவிலே வேலை காலியில்லாது இருந்து, வேறு துறையிலே வேலை காலியிருந்தால், அந்த இடத்தைப் பூர்த்தி செய்வதற்கு, இந்த வாரிசுதாரர்களை நியமிக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை கல்வி இலாகாவிலே பணிபுரிந்த நேரத்தில் இறந்துவிட்டார் என்றால், அவருடைய மகனோ அல்லது மகளோ, கருணை அடிப்படையில் அந்த வேலையைப் பெறுவதற்குத் தகுதி





பெற்றிருந்தால்தான், அந்தத் துறையிலே அவர்களை வேலைக்கு அமர்த்த முடியும். அப்படியில்லை, அவர்கள் வேறு துறைக்குத்தான் தகுதியுள்ளவர்கள் என்றால், அதைப்பற்றித்தான் அரசு யோசிக்கும்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 142, திரு. கே. கே. வீரப்பன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**142—**

**மூடப்பட்டுள்ள எரிசாராயத் தொழிற்சாலையைத் திறத்தல்**

***10030—திரு. கே. கே. வீரப்பன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், மோகனூரிலுள்ள சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் அமைந்துள்ள எரிசாராயத் தொழிற்சாலை இரண்டாண்டுகளுக்கு மேலாக மூடப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஆலையைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் வடிப்பாலை, Distillery தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் இசைவோடு 23-4-1997 முதல் தொடர்ந்து நல்லமுறையில் இயங்கி வருகிறது.

**திரு. கே. கே. வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே, 1997-லேயிருந்து இயங்கி வருகின்றது என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். உற்பத்திச் செலவைவிடக் குறைந்த மார்க்கெட் இருந்த காரணத்தால் இரண்டாண்டுகளாக மூடி வைத்திருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 1989-லே பொறுப்பேற்று இருந்தபோதுதான், மோகனூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கும்,

[1998 ஏப்ரல் 3

உடுமலைப் பேட்டைக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கும். எரிசாராயத் தொழிற்சாலை தொடங்குவதற்கான அனுமதியை வழங்கினார்கள். இன்றைக்கு நிரந்தர மார்க்கெட் இல்லாது இருக்கிற காரணத்தால், தொழிற்சாலையிலிருந்து வரும் எரிசாராயத்தை வைத்து வெளிநாட்டு மதுபானங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தொடங்கினால் இலாபகரமாக இருக்கும். அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலே இந்த வடிப்பாலைகள் (Distilleries) நட்டத்திலேதான் இயங்கி வருகின்றன. சொல்லப்போனால், 1996-97 ஆம் ஆண்டில் 2 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டது; இப்போது 1997-98-லேதான் தோராயமாக 1 கோடி ரூபாய், இந்த வடிப்பகத்திற்கு இலாபம் கிட்டியிருக்கிறது. அதைப்போல, உடுமலைப்பேட்டை அருகிலே உள்ள அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலும் இதே நிலைமைதான் இருக்கிறது. கடந்த ஆண்டு 245 இலட்சம் ரூபாய் நட்டம்; இந்த ஆண்டு 110 இலட்சம் ரூபாய் இலாபம் என்கிற அளவுக்கு நிலைமை அங்கே உருவாகியிருக்கிறது. தொடர்ந்து இந்த இலாபம் இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற அந்தக் கூற்றினை ஆராயலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிசாராயத்தின் தேவையை முன்னிட்டு, தனியார்கள் எரிசாராயம் தயாரிப்பதற்கு லைசன்ஸ் கொடுக்கப்படுமா, அப்படி லைசன்ஸ் கொடுக்கப்படுவதாக இருந்தால், இதுவரை அரசின் ஆய்விற்கு எத்தனை விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன என்பதைத் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி கேட்டால், விவரம் வழங்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். எஸ். பொன்முடி.

**திரு. எஸ். எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நுகர்வோர்களில் அதிகமாக வரி செலுத்துவோர்



1998 ஏப்ரல் 3]

மதுபானம் அருந்துபவர்களே. குறிப்பிட்ட சில வகைகளை விற்பனை செய்வதால் தரம் குறைவாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். பல ரகங்களை தமிழ்நாட்டுக்குக் கொண்டுவருவதன் மூலம், தரமான மதுபானம் கிடைக்க வழி இருக்கிறது. அரசுக்கும் அதிக வருமானம் கிடைக்க வழி இருக்கிறது. இது அனுமதிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியின் அடிப்படையில் அதுபற்றி அக்கறை செலுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு ஆலைகளில் பணிபுரிகிற ஊழியர்களுக்கு மார்ச் 31 ஆம் தேதியுடன் ஊதிய உயர்வு காலம் முடிவடைகிறது. எனவே, இது சம்பந்தமாக அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. திரு. பா. துரைசாமி.

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள எறையூர் சர்க்கரை ஆலையில் ஓர் எரிசாராயத் தொழிற்சாலையை அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஊரிலே இருக்கிற சர்க்கரை ஆலையிலும் இப்படித் தொழிற்சாலை தொடங்கப்படுமா என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டே போகலாம். என்னிடத்திலே நம்முடைய அரசின் சார்பிலே உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளான - நாமக்கல், அதைப்போல அமராவதி — இந்த ஆலைகளைப் பற்றித்தான் விவரங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சர்க்கரை ஆலை பற்றியும் சொல்ல விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 143, திரு. கு.ர.கோ. தனபாலன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

[1998 ஏப்ரல் 3

143—

**கல்வி வளர்ச்சிக்கு உலக வங்கி நிதியுதவி**

***8588—திரு. கு.ர.கோ. தனபாலன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்தியாவிற்கு உலக வங்கி மூலம் கல்வி வளர்ச்சிக்கு நிதி வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், தமிழ்நாட்டிற்கு எவ்வளவு நிதி வழங்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இந்தியாவில் உள்ள 19 மாநிலங்களில் பட்டயத் தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சிக்காகச் சுமார் 1528.80 கோடி ரூபாய், கடனாக வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இதில் தமிழ்நாட்டிற்கு 75.6 கோடி ரூபாய் நிதி, திட்டக்காலமான பிப்ரவரி 1992 முதல் ஜுன் 1999 வரை ஒதுக்கப்பட்டுள்ளது. நாம் முறையாகச் செலவிட்ட காரணத்தால் அந்த 75.6 கோடி என்பது, பின்னர் 95 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 144, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

144—

**துவக்கப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்குதல்**

***11549—திரு. ஜி. கே. மணி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 ஏப்ரல் 3]

(அ) தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி, சத்தியநாதபுரம் ஊராட்சி, கொட்டாயூர் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): 1997-98 ஆம் ஆண்டு முதல் கொட்டாயூர் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 145, திரு. பா. கோபால், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

145—

**அனல் மின் நிலையத்தை விரிவாக்குதல்**

***6787—திரு. பா. கோபால்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அனல் மின் நிலையத்தை மேலும் 210 மெ.வா. திறன் வாய்ந்ததாக விரிவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பரிசோதனை நிலையில் உள்ளது.

**திரு. பா. கோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அனல் மின் நிலையம் 840 மெ.வா. திறன் கொண்டது. மேட்டூர் அனல் மின் நிலையம் அகில இந்திய அளவில்

மின் உற்பத்தியில் தொடர்ந்து விருது பெற்று வருகின்றது. அதற்குத் தேவையான தண்ணீர் வசதி, நிலக்கரி கொண்டு வருவதற்கான இரயில் வசதி ஆகியவை இருப்பதனால், நமது அரசு உடனடியாக அந்தத் திட்டத்தைத் தொடங்க முன்வருமா எனத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல, அகில இந்திய அளவில் மேட்டூர் அனல் மின் நிலையம் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது என்பதற்காக, மத்திய அரசாங்கத்தினுடைய விருதைப் பெற்றிருப்பது உண்மை. இருந்தாலும்கூட, அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியைக் கொண்டுசெல்வதில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. வட மாநிலங்களிலே இருந்து வருகின்ற நிலக்கரியை சென்னைத் துறைமுகத்திற்குக் கொண்டுவந்து, அங்கிருந்து மறுபடியும் இரயிலிலே ஏற்றி மேட்டூர் வரையிலே அனுப்ப வேண்டியிருக்கிறது. இதனாலே கூடுதல் செலவு ஆகிறது. இருந்தாலும் கூட, இன்னொரு பிரிவை நிர்மாணிப்பதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் செலவு, இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு அரசு அதுபற்றி ஆராய்ந்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. பெ. சாமிநாதன்.

**திரு. மு. பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது. நேற்றுவரை. தமிழகத்தில் மின்சாரப் பற்றாக்குறை எவ்வளவு மெகாவாட் உள்ளது? அதேபோல, கடந்த 1991 ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஆட்சியில் எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்ய முயற்சி எடுக்கப்பட்டது என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று வரையில் நமது மின் பற்றாக்குறை 300 மெகா வாட். 1991-லே இருந்து 1996 வரை கடந்த ஆட்சிக் காலத்திலே எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது என்ற கேள்விக்கு, பதில், அந்தக் காலகட்டத்திலே மின்சார உற்பத்திக்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சாரத் துறை, மின்சார விநியோகத்தில்





அலட்சியம் காட்டியதன் காரணத்தால்தான், இப்படி மின்வெட்டு ஏற்படுகின்றது என்று கூறப்படுவது உண்மையா? அதுமட்டுமல்லாமல், அமைச்சர் அவர்கள், தேர்வு நேரமாக இருக்கின்ற காரணத்தினால் இரவு நேரங்களில் மின்வெட்டு இல்லாமல் இருக்கும்; இனிமேல் மின்வெட்டு இருக்காது என்று சொன்னார்கள். ஆனால், எங்கள் காட்டுமன்னார்குடி பகுதியில் நேற்று பகல் முழுவதும் மின்சாரம் இல்லை என்று புகார் வந்தது. அதேபோல், தொடர்ந்து ஒரு வாரமாக இப்படியே இருக்கின்றது. இதை நீக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 300 மெகா வாட் மின் பற்றாக்குறை இருக்கிறது என்று சொன்னேன். இரவு நேரங்களிலே படிப்பதற்கு வசதி செய்து தரப்படும் என்றும் சொல்லி இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நேற்றும், கடந்த வாரமும் பகலிலே மின்சாரம் இல்லை என்று சொல்கிறார்கள். பகலிலே மின்சாரம் இல்லாவிட்டாலும், படிப்பதற்கு வசதியாக இருக்கும். இரவிலேதான் மின்சாரம் கட்டாயம் கொடுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 146, திரு. லா. சந்தானம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**146—**

**துணை மின் நிலையம் அமைத்தல்**

**•7848—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதியில் ஏற்படும் மின்சாரத் தடையை நீக்க, அங்கு துணை மின் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சோழவந்தான் தொகுதியில் எவ்வித மின் தடையுமின்றி மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதியிலே வாடிப்பட்டியிலே ஒரு துணை மின்நிலையம் அமைக்கப்படும் என்று சென்ற நிதிநிலை அறிக்கையிலே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருந்தார்கள். அது என்ன ஆயிற்று என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடிப்பட்டியிலே ஒரு துணை மின் நிலையம் அமைக்க 9-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆராயப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 147, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**147—**

### திருப்புவனத்தைத் தனி வட்டமாக்குதல்

***8776—திரு. கே. தங்கமணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியத்தைத் தனி வட்டமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், திருப்புவனம் ஒன்றியத்தைத் தனி வட்டமாக்குவது குறித்து செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) ஆகையினாலே, இக்கேள்விக்கு இடம் இல்லை. என்றாலும், நான் குறிப்பிட விரும்புவது, நிதிநிலை காரணமாக ஓராண்டிற்கு புதிய வட்டங்கள் மற்றும் புதிய வருவாய்க் கோட்டங்கள் போன்ற நிர்வாக அமைப்புகளை உருவாக்குவதில்லை என்று 20-6-1997 அன்று ஒரு முடிவை அரசு எடுத்துள்ளது. இருப்பினும், உறுப்பினர் ஆசையோடு



கேட்கிற காரணத்தினாலே நான் அவருக்குத் தெரிவிக்கின்றேன். உங்களது கோரிக்கையை ஆய்வு செய்வோம்; ஆவன செய்வோம்.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம் மிகப்பெரிய தாலுகாவாக இருக்கிறது. அதோடு மட்டுமல்ல, திருப்புவனம் ஒன்றியத்தைப் பொறுத்தவரையில், 46 ஊராட்சிகளும் ஒரு பேரூராட்சியும் இருந்து, கிட்டத்தட்ட 1.25 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையும் இருக்கக்கூடிய ஒரு பெரிய ஒன்றியமாக இருக்கிறது. மக்கள் தலைநகரம் மானாமதுரைக்கு வரவேண்டுமென்றால் 40 கிலோமீட்டர் தொலைவைக் கடந்து வர வேண்டும். ஆகவே, 20-6-1998-க்குப் பிறகாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைத் தனி வட்டமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் அளித்த சுருக்கமான பதிலைப் போல, இப்போதும் தெரிவிக்க விரும்புகிறேன். ஆவன செய்வோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 148, திரு. து. செல்வராஜ், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**148—**

### கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தல்

***4433—திரு. து. செல்வராஜ்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதியில் தளி, ஜல்லிப்பட்டி, பூலாங்கிணறு போன்ற 26 கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாகச் செயல்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. குடிநீர்த் தட்டுப்பாடு அதிகம் உள்ள பூலாங்கிணறு பகுதியில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என. தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் திரும்பூர் கேணியை நீர் ஆதாரமாகக் கொண்டு பூலாங்கிணறு கூட்டுக் குடிநீர்த் திட்டம், தளி, ஜல்லிப்பட்டி மற்றும் பூலாங்கிணறு உட்பட 26 கிராமங்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால், அது பிறகு அதிகரிக்கப்பட்டு, 16 மணி நேரம் இயங்கி வந்ததை 24 மணி நேரமாக மாற்றம் செய்து அந்தத் திட்டம் கொஞ்சம் பரவலாக்கப்பட்டது. இருப்பினும், இதனை மேலும் விரிவுபடுத்துவதற்கான நீர் ஆதாரம் போதாது என்பதோடு, தொழில்நுட்ப சாத்தியக் கூறுகளும் இல்லை என்பதால் நிறுத்தப்பட்டது. ஆனாலும், அந்தப் பகுதியைச் சேர்ந்த 56 கிராமங்களை இணைத்து ஒரு திட்டம் தயாரிக்கலாம் என்று முடிவெடுத்திருக்கிறோம். அரசு அதைப் பரிசீலித்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

**திரு. என். எஸ். ராஜ்குமார் மன்றாடியார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில், குடிநீர் உந்து நிலையங்களில் தனி மின்சார விநியோக வசதி இருந்தும், எல்லா உந்து நிலையங்களிலும் சீரான மின்சாரம் ஒரே சமயத்தில் கிடைப்பதில்லை. எனவே, அனைத்து உந்து நிலையங்களிலும் தனியாக ஜெனரேட்டர் வசதியை ஏற்படுத்தி, தங்கு தடையின்றி நீர் விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப்பெரிய திட்டங்களுக்கு ஒருசில இடங்களில்





ஜெனரேட்டர் வைக்கப்பட்டிருக்கிறது. ஜெனரேட்டர் வாங்குவது என்பது கடினமல்ல. ஆனால், அதை நிர்வகிப்பதுதான் சிரமமாக இருக்கிறது. மேலும், தேவைக்கேற்ப இப்போது சரி செய்யப்பட்டு வருகிற காரணத்தாலும். உடனடியாக சீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிற காரணத்தாலும் தற்போதைக்கு இது தேவையில்லையென்று அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 149, திரு. எம். முத்துராமலிங்கம். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**149—**

## கள்ளிக்குடி நகருக்குக் குடிநீர் வசதி

***4871—திரு. எம். முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் நகருக்கு வைகை ஆற்றிலிருந்து வழங்கப்படும் குடிநீரை கள்ளிக்குடி நகர் வரை நீட்டித்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு திருமங்கலம் நகரத்திற்கு வைகை ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டு வருகிறபோது—அன்றைய மதிப்பீடு ஒரு கோடி ரூபாய்—1990 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் அந்தக் குடிநீர் வழங்கப்பட்டது. நாளுக்குநாள் ஜனத்தொகை வளர்ந்து வருகிற இந்த நிலையில் திருமங்கலம் நகர மக்களுக்கே போதிய குடிநீர் இல்லாத நிலையிலே அந்தத் திட்டம் இருக்கிற காரணத்தால் திருமங்கலம் நகர மக்களுக்கு முழுமையாகவும், அதன் அருகேயுள்ள கள்ளிக்குடிக்கு இந்தக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தவும் மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து வழங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தற்போது அரசினுடைய நிலையில் ஒரு புதிய கொள்கையை வகுத்து. அதன் அடிப்படையில் புதிய திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. தற்போதைய மக்கள் தொகைக்கும், அதாவது 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக்கும், 30 ஆண்டுகள் கழித்து எவ்வளவு மக்கள் அதிகரிப்பார்களோ அந்த அடிப்படையிலும், அதாவது கிராமங்கள் என்றால், தலா 40 லிட்டர் தண்ணீர் கொடுக்கக்கூடிய அளவுக்கு அங்கே, ஊற்றிலே நீர் இருந்தால்தான் அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. எனவே, ஒரு திட்டத்தை அறிவித்து நடைமுறைபடுத்துகிறபோது, மீண்டும் மீண்டும் அதை விரிவுபடுத்தலாமா என்ற கேள்வி எழுப்பப்படுமானால், ஆரம்பத்திலேயே இந்தத் திட்டம் சரிவரப் பயன்படாமல் போய்விடும் என்பதற்காகத்தான் தொழில்நுட்ப வல்லுநர்கள் இதை இப்போது செய்யக்கூடாது என்று சொல்வதை ஏற்று சில திட்டங்கள் விரிவுபடுத்தப்படாமல் இருக்கின்றன. ஆனால், தனியாகத் திட்டங்கள் தயாரிப்பதில் தடை இல்லை; பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே வைகை ஆற்றிலிருந்து திருப்பரங்குன்றம் நகருக்கு, குடிநீர் வந்து கொண்டிருந்தது. இந்தத் திட்டம் 30 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்டதன் காரணமாக, தினந்தோறும் 1/2 மணி நேரம்தான் தண்ணீர் வருகிறது. ஆகவே, அங்கே தேவைக்கேற்ப குடிநீர் வழங்குவதை அதிகரிக்க, அரசு விரைவாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அதிகரித்துக் கொடுக்கிற சூழ்நிலை இல்லை என்று சொன்னேனே தவிர, புதிதாகத் தண்ணீர் வழங்குகிற திட்டங்கள் பரிசீலனையில் இல்லை என்று சொல்லவில்லை; அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. பி. சிங்காரவேலு.





**திரு. வி. பி. சிங்காரவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கோவைக்கு வருகை தந்தபோது, ஆழியாறு அணையிலிருந்து, அங்காகுறிச்சிக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். அந்தத் திட்டம் விரைவாக நிறைவேற்றப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 150, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**150—**

### கால்வாயைச் சீரமைத்தல்

***6493—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், நாட்டார் கால்வாயைச் சீரமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையினை நான் படிக்க, தாங்கள் அனுமதிக்க வேண்டுகிறேன். வைகை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பார்த்திபனூர் மதகு அணையிலிருந்து பிரியும் இடது பிரதானக் கால்வாய் மற்றும் மேல நாட்டார் கால்வாய், கீழ நாட்டார் கால்வாய் ஆகிய கால்வாய்களைப் புனரமைப்புச் செய்ய 163.61 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்தக்காரர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த நிகழ்வுக்கு உலக வங்கியும் ஒப்புதல் அளித்து விட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு—இந்தத் திருத்திய விடையின் நகல் ஒன்றை என்னிடம் முதலிலேயே கொடுத்துவிட வேண்டும்.

[1998 ஏப்ரல் 3

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. எனது இராமநாதபுரம் மாவட்டத்தில், நாட்டார் கால்வாய், கீழ நாட்டார் கால்வாய். மேல நாட்டார் கால்வாய் என்று மூன்று கால்வாய்கள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கீழ நாட்டார் கால்வாயையும், மேல நாட்டார் கால்வாயையும் மராமத்துச் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளதாக அறிவித்திருக்கிறார்கள். இந்த நாட்டார் கால்வாய் என்பது மானாமதுரை தொகுதியில், என்.எச்.49-ல் கிருங்காகோட்டைக்கு அருகிலிருந்து பிரிந்து. பரமக்குடி தொகுதியினுடைய மேற்குப் பகுதியிலே பாயக்கூடியது. அதை நீண்டகாலமாக மராமத்துச் செய்யாத காரணத்தால், இன்றைக்கு அது இருந்த இடம் தெரியாமல் தூர்ந்து போய். புதையுண்ட கால்வாயாக அந்தக் கால்வாய் இருக்கிறது. சுமார் 20 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் வைகைப் பாசன வசதியின்றி இருக்கிற காரணத்தால், தகுதியும் திறமையும் வாய்ந்த அமைச்சரவர்கள், கருணை உள்ளம் கொண்ட முதல்வரிடமிருந்து நிதியைப் பெற்று, இந்த நிதி ஆண்டிலேயே அந்தக் கால்வாயைச் சீரமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, இந்த மூன்று கால்வாயும், இப்போது அவர் கூறுகின்ற கால்வாயோடு உட்பட்டு வராவிட்டால். அதுகுறித்து அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்திலுள்ள, கீழ்பவானி பாசன வாய்க்கால் 40 ஆண்டுகளுக்கு மேலாகவும், மேட்டூர் வடகரை, இடகரை வாய்க்கால் 30 ஆண்டுகளுக்கு மேலாகவும் காளிங்கராயன் வாய்க்கால் 30 ஆண்டுகளுக்கு மேலாகவும் தூர் எடுக்காமல் இருக்கக்கூடிய சூழ்நிலையை மாற்றியமைக்க மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் 36 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு இருப்பதாகக் கூறியிருந்தார்கள். அதை இந்த ஆண்டு நிறைவேற்றிக் கொடுப்பார்களா என்பதை. தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியிடத்திலே இப்படிப்பட்ட கால்வாய்களைத் தூர் வாருவதற்காக நாம் கடன் பெற்றிருக்கிறோம். 1140 கோடி ரூபாய் நாம் மொத்தம் வாங்கிய கடன். அதிலே 807 கோடி ரூபாய் காவிரிப் பாசனம் நீங்கலாக மற்ற பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே. கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய்க்கு மேலே இருக்கிறது. ஆனால், காவிரியின் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால், பிரச்சினைக்கு உட்பட்ட பகுதிகளிலே சீரமைப்புப் பணிகளைச் செய்யவில்லை. அதுகுறித்து அரசாங்கம் மேல்முறையீடு செய்து கொண்டிருக்கிறது. ஒரு பக்கம் வழக்கு நடக்கட்டும், மறுபக்கம் நாங்கள் கால்வாய்களைச் சீரமைக்கிற பணிகளைச் செய்கிறோம் என்று தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அதிலே வெற்றி பெறுவோம் என்று கருதுகிறேன்.



1998 ஏப்ரல் 3]

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 151, திரு. எஸ். டேவிட் செல்வின், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**151—**

### மருதூர் கால்வாயைச் சீரமைத்தல்

***7338—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தொகுதியிலுள்ள மருதூர் கீழக்கால்வாயில் வினாடிக்கு 800 கன அடி தண்ணீர் திறந்துவிடத்தக்க வகையில் கால்வாயின் அமைப்பு, ஆழம், அகலம் மற்றும் தளம் ஆகியவற்றைச் சீரமைத்து கரைகளைப் பலப்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி ஆற்றில், மருதூர் கீழக்கால்வாய் சுமார் 8 ஆயிரம் ஏக்கர் பாசனப் பரப்பளவு கொண்டது. மருதூர் கீழக்கால்வாயில் வினாடிக்கு 300 கன அடி தண்ணீர் திறக்கக்கூடிய அளவிற்கு அதனுடைய அளவு தற்போது இருந்து வருகிறது. எனவே, அந்தத் தண்ணீர், முதல் குளமான திருவைகுண்டம் கசப்பா

குளத்திற்குப் போகும்போது அதன் அளவு 50 கன அடி என்ற அளவில்தான் போய்ச் சேருகிறது. அந்த அளவிற்குக் கால்வாயில் பழுது ஏற்பட்டு இருக்கிறது. ஆங்காங்கே உடைப்புகள் ஏற்பட்டு இருக்கின்றன. எனவே, கடைசி குளமான பெருங்குளத்திற்குத் தண்ணீர் போகவேண்டும் என்று சொன்னால், ஒரு மாத காலத்திற்கும் மேலாக ஆகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மறுபரிசீலனை செய்து, மருதூர் கீழக்கால்வாயில் உள்ள 8 ஆயிரம் ஏக்கர் பாசனப் பரப்பினைக் கணக்கில் கொண்டு, 800 கன அடி தண்ணீரைத் திறக்கக்கூடிய அளவுக்கு, கால்வாயை அகலப்படுத்தி, ஆழப்படுத்தி, அதில் உள்ள பழுதுகளை நீக்கித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள 8 அணைக்கட்டுகளில், 7-வது அணைக்கட்டு மருதூர் அணைக்கட்டு. அதிலே மேலக்கால்வாய் மற்றும் கீழக்கால்வாய் என்று, 2 கால்வாய்கள் இருக்கின்றன. கீழக்கால்வாய் 16 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. அது 400 கன அடி தண்ணீரை ஏந்திச் செல்லக்கூடிய 'கெப்பாசிட்டி' உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, 7788 ஏக்கர் அல்லது 8000 ஏக்கர் பாசனம் பெறுகிறது. இந்த அளவுக்குள்ள ஏக்கருக்குக் கிட்டத்தட்ட 194 கன அடி போதும். கால்வாய்க்கு, அந்த கெப்பாசிட்டி இருந்தால் போதும். 400 கன அடி தண்ணீரை ஏந்திச் செல்லக்கூடிய கெப்பாசிடி இந்த கீழக்கால்வாய்க்கு உண்டு. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். 12 ஆயிரம் ஏக்கருக்குப் . பாசனம் தருகின்ற திருவைகுண்டம் அணைக்கட்டினுடைய கால்வாய்களுக்கு 500 கியூசெக்ஸ்தான். ஏற்றுக்கொள்ளக்கூடிய கெப்பாசிட்டி இருக்கிறது. ஆகையினாலே, பழுதுபட்டுப் போய் இருக்கிற அந்தக் கால்வாய் சில இடங்களிலே உடைந்து போயிருக்கிறது. அதனால், மீண்டும் தண்ணீர் ஆற்றுக்குள் வந்துவிடுகிறது. அதற்காக இப்போது 104 லட்ச ரூபாய்க்கு ஒரு திட்டத்தைப் போட்டு, அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் பணிகளைச் செய்தால், தண்ணீர் சரியாகக் கடைமடைக்குப் போய்ச் சேரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி ஆற்றுப் பாசனத்திலே உள்ள அனைத்து வாய்க்கால்களும்,





அதனுடைய வாய்க்கால்களினுடைய கெப்பாசிடிகளை இழந்து, இன்றைக்கு 400 கியூசெக்ஸ் தண்ணீர் செல்லவேண்டும் என்றால், அங்கே 200 கியூசெக்ஸ், அல்லது 150 கியூசெக்ஸ்தான் செல்லக்கூடிய நிலையில் அந்த வாய்க்கால்கள் அனைத்தும் பழுதுபட்டு இருக்கின்றன. எனவே, உடனடியாக அவற்றைப் பராமரித்துத் தருகின்ற வகையில், போர்க்கால அடிப்படையிலே அரசு விரைந்து செயல்பட்டு, விவசாயிகளுக்கு உதவ முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல, தாமிரபரணி ஆற்றுப் பாசனத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள கால்வாய்கள் பழுதடைந்திருக்கிற நிலைமையை அரசு அறியும். எனவே, ஒவ்வொரு கால்வாயையும் தூர்வாரி, ஆழப்படுத்தி, கரைகளைப் பலப்படுத்தவேண்டும் என்பதற்காகத்தான், ஒவ்வொரு கால்வாய்க்கும் தனித் திட்டம் ஒன்று தீட்டப்பட்டு, அதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, முடிவு செய்யப்பட்டு, வேலைகள் ஆரம்பிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே நன்றாக அறிவார்கள். அவர்களுடைய தொகுதியில் இருக்கிற கன்னடியன் கால்வாய்க்கும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, வேலைகள் ஆரம்பிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். டேவிட் செல்வின்.

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வைகுண்டம் வடகால்வாயில் 500 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அங்கே 500 கன அடி தண்ணீரைத் திறந்தாலும், கடைசிக் குளமான கோரம்பள்ளம் குளத்திற்கு 12 மணி நேரத்திலே போய்ச் சேர்ந்துவிடும். அதேநேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, கீழக்கால்வாயில் 400 கன அடி தண்ணீரைத் திறந்தால், கடைசிக் குளமான பெருங்குளத்திற்குப் போய்ச் சேருவதற்கு ஒரு மாத காலம் ஆகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மருதூர் கீழக்கால்வாய்க்கு—இருக்கின்ற அந்தத் திட்டத்தில், வல்லநாடு வரையிலும்தான் இதுவரை சேர்க்கப்பட்டு இருக்கிறது. அதற்குப் பிறகுதான் அதிகமான கரைகள் பழுதுபட்டு உடைப்பு, ஏற்படுகிறது. ஆழ்வார்கள்குளம், மணக்கரை போன்ற பகுதிகளில் கரைகள் மிகவும் பலவீனப்பட்டு இருக்கின்றன. எனவே, மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் மருதூர் கிழக்கால்வாயில்—தனிக் கவனம் செலுத்தி, அதையும் சரி செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நேரடியாகக் கேள்விக்கு வந்திருக்கலாம். அவருடைய கேள்வியின் உள்நோக்கம் என்னவென்றால். இந்தக் கிழக்கால்வாயிலே இருந்து 13, 14 குளங்களுக்குத் தண்ணீர் பாயவேண்டும். அவருக்குத் தேவையானது. கடைசியிலே இருக்கிற பெருங்குளம், சிவகளை குளத்திற்குத் தண்ணீர் போகவேண்டும். என்பதுதான். ஆனால், அந்தக் கால்வாயினுடைய பாசன முறை எப்படி இருக்கிறது என்றால், ஒரு குளம் நிரம்பியபிறகு, அடுத்த குளத்திற்குப் போகும். அது நிரம்பியபிறகு, அடுத்த குளத்திற்குப் போகும். அப்படி மருதூர் கிழக்கால்வாயில் மிகப் பெரிய குளங்களாக இருக்கக்கூடியவை திரு. வைகுண்டம் கசப்பாகுளம் மற்றும் பேரூர் குளம். இந்த இரண்டும் கிட்டத்தட்ட 400 ஏக்கர் பாசனத்தைக் கொண்டதாக இருக்கிறது. இன்னொருபுரம் பட்டர் குளம். அதற்குப் பிறகு, செந்திலான் பண்ணைக் குளம். அதற்குக் கீழே மேலக் குளம், கீழக் குளம், பீக்கன்குளம், அதற்குக் கீழே பட்டர்குளம், இசவன் குளம். .ரங்கநாதபேரி குளம், கைலாசபேரி குளம், நெடுங்குளம், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு பெருங்குளம், சிவகளை குளத்திற்குப் போகவேண்டும். இந்தக் கஷ்டத்தை உணர்ந்துதான் 1989-லே கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு பட்டர் குளத்திற்கு முன்னாலே ஒரு கால்வாய் எடுத்து 'பை-பாஸ் சானல்' செய்து கொடுத்தார்கள். இந்த வேலை எங்கள் ஆட்சி போனதற்குப் பிறகு பாதியிலேயே நின்றுவிட்டது. மீண்டும் கலைஞர் ஆட்சி வந்திருக்கிறது. மீண்டும் இதற்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அந்தப் பணிகளை - ரிப்பேர் செய்வதற்காக ரூ. 144 லட்சம்—அதாவது அவர் சொல்கிற அந்தப் பணிக்கு நாங்கள் செலவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆசை அந்த பை-பாஸ் சானல் பணிகளை வேகமாக நடத்த வேண்டுமென்பது; அதை அரசு நடத்தும்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முகம்மது கோதர் மைதீன்.

**திரு. முகம்மது கோதர் மைதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவி தொகுதியிலே இருக்கக்கூடிய கன்னடியன் கால்வாயைத் தூர் வாருவதற்காக இப்போது அதற்கான திட்டங்கள்



எல்லாம் தீட்டப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். பொதுவாக, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கக்கூடிய எல்லா கால்வாய்களும் சிறப்பாக இருக்க வேண்டுமென்கிற ஒரு நல்ல எண்ணத்தைக் கொண்டவர்கள். ஆகவே, பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியிலே இருக்கக்கூடிய பாளையம் கால்வாய், கோடகன் கால்வாய், திருநெல்வேலியில் இருக்கக்கூடிய கால்வாய் ஆகியவற்றை உடனடியாகத் தூர் வாருவதற்கு வேண்டிய முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்திருக்கிற பாளையம் சானல் ரீச் 2, பாளையம் சானல் ரீச் 1 - அதாவது பாளையம் சானல் ரீச் 1-க்கு ரூ. 135 லட்சமும், பாளையம் சானல் ரீச் 2-க்கு ரூ. 105 லட்சமும் அரசு ஒதுக்கியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 152, திரு. ம. சண்முகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**152—**

**நெகமத்திற்குப் பேருந்து இயக்குதல்**

**•3475—திரு. ம. சண்முகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சியிலிருந்து ஏரிப்பட்டி, கொல்லப்பட்டி, கரப்பாடி வழியாக நெகமத்திற்கு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோரிக்கையில் கூறப்பட்டுள்ள வழித்தடத்தில் அமைந்துள்ள கிராமங்கள் அனைத்திலும் பகுதிவாரியாக, அரசு மற்றும் தனியார் பேருந்துகளின் மூலமாக, பயணிகளது அடர்விற்கேற்ப, போதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதால் அரசு போக்குவரத்துக் கழகம் கூடுதல் பேருந்து இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவிலேயிருந்து இப்போது அரசுப் பேருந்து ஒன்று இந்தக்

கிராமங்களை உள்ளடக்கி ஏரிப்பட்டி வரை வந்து செல்கிறது. ஏரிப்பட்டி வரை வந்து செல்கின்ற அந்த நகரப் பேருந்தை புறநகர்ப் பேருந்தாக மாற்றி, பொள்ளாச்சி வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கேற்ப, 13-8-1997 முதல் வழித்தட எண் 12கே3 என புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பொள்ளாச்சி-கிணத்துக்கடவு 2 நடையும், கிணத்துக்கடவு-ஏரிப்பட்டிக்கு 2 நடையுமாக, கொண்டம்பட்டி தேவனாம்பாளையம் வழியாகச் சென்று கொண்டிருக்கின்றன. கிணத்துக்கடவு-நெகமத்திற்கு 3 நடை சென்று கொண்டிருக்கின்றன. கிணத்துக்கடவு, ஏரிப்பட்டிக்கு ஒரு நடை சென்று கொண்டிருக்கிறது. அதேபோல், கிணத்துக்கடவு, நெகமத்திற்கு 3 நடையும், கிணத்துக்கடவு-ஏரிப்பட்டிக்கு ஒரு நடையும், கிணத்துக்கடவு, நெகமம் ஆகிய பகுதிகளிடையிலே தாமரைக்குளம், தேவனாம்பாளையம் வழியாக 4 நடையும், கிணத்துக்கடவு, சிங்காரம்பாளையம் பிரிவு வழியாக 2 நடையும் சென்று கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கோரியிருக்கின்ற பகுதிகளில் எல்லாம் பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. அங்கே பயணிகளுடைய அடர்வைப் பொறுத்து அவருடைய கோரிக்கைகள் ஏற்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. பி. இராசன்.

**திரு. வி. பி. இராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் 2 வழித் தடங்களில் பேருந்துகள் விடுவதற்கு எங்களுக்கு ஒத்துழைப்புத் தந்தார்கள். இந்த ஆண்டு ஒரு வழித் தடத்திலாவது ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் பேருந்து விடுவதற்கு அனுமதி வழங்குவார்களா என நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இரண்டு வழித் தடங்கள் விடப்பட்டதே ஏறத்தாழ 1000-க்கு மேற்பட்ட புதிய வழித் தடங்கள் விடப்பட்டிருக்கின்றன. பொதுமக்களிடமிருந்து தேவைகள் இருப்பின், அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. ப. ஆறுமுகம்.

**திரு. தி. ப. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் இரண்டு வழித் தடங்கள் என்று அமைச்சரவர்கள் அனுமதித்திருந்தார்கள். ஒரு வழித்தடம் திருச்செங்கோடு சட்டமன்றப் பேரவை உறுப்பினரால் கோரப்பட்டதை அனுமதித்து, மற்றொரு வழித் தடத்திற்கு நான் கோரிக்கை விடுத்தும், நமது தமிழக அரசு போக்குவரத்துக் கோட்ட மேலாண்மை இயக்குநரைப் பலமுறை நேரில் சென்று கேட்டும், இன்னமும் அதை முடித்துக் கொடுக்கவில்லை. எனவே, அதை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கைகள் வைத்து, அவை நிறைவேற்றப்படாமல் இருக்குமேயானால், அவை உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 153. திரு. குத்தாலம் பி. கல்யாணம். மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**153—**

## கம்பர் கோட்டத்தைப் புதுப்பித்தல்

**•2709—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் ஒன்றியத்திலுள்ள கம்பர் பிறந்த தேரழுந்தூரில் "கம்பர் கோட்டம்" புதுப்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1998 ஏப்ரல் 3

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தேரழுந்தூரிலுள்ள கம்பர் கோட்டம் தற்சமயம் நல்ல நிலையில் உள்ளதாலும், நன்கு பராமரிக்கப்பட்டு வருவதாலும், புதுப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவிச் சக்கரவர்த்தி கம்பர் கோட்டம் செல்லும் வழியில் ஒரு நுழைவு வாயில் ஏற்படுத்தித் தரப்படுமா என்பதையும், ஆண்டுதோறும் கம்பர் விழா பெரிய அளவில் அரசின் சார்பிலே நடத்தப்படுமா என்பதையும் கேட்டு, இவற்றையெல்லாம் கம்பருக்குக் கிடைத்த சடையப்ப வள்ளலைப் போல, கம்பர் கோட்டத்திற்கு சடையப்ப வள்ளலாக இருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பர் கோட்டம் அமைக்கப்பட்டதே தமிழ்நாட்டில் இருக்கிற 9 கோயில்களிலிருந்து நிதியுதவி பெற்றுத்தான். அதற்கு மேலும் அரசே 8 லட்சம் ரூபாய் கொடுத்து, ஏறத்தாழ ரூ. 22,96,246 செலவில், 1994-வது ஆண்டில் கட்டி முடிக்கப் பட்டிருக்கின்றது. இந்த ஆண்டில் அதற்கெனத் தனி நிதி இல்லாத காரணத்தால், அதற்குச் செய்யப்படுகிற எந்தச் செலவும் அரசு மானியத்திலிருந்தோ, வேறு நிலையிலிருந்தோதான் செய்யப்பட வேண்டும். எனினும், அவருடைய கோரிக்கையின்படி கம்பர் விழா தொடர்ந்து நடத்தப்பட்டால்தான் தேரழுந்தூரின் சிறப்பு எழும் என்பதை மனதில்கொண்டு, கண்டிப்பாக இந்தக் கம்பன் விழா நடத்தப்படும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நுழைவு வாயில் போன்றவற்றை நிர்மாணிக்க முடியுமா என்பதை, இருக்கின்ற நிதிவசதியைப் பொறுத்துத்தான் உறுதி செய்ய முடியும். எனினும், விழா நடத்தப்படும் என்பதை மட்டும் உறுதி செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கம் தென்னரசு.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககாலப் பெண்பாற் புலவர் மாசாத்தியார் பிறந்த ஒக்கூரிலே அவருக்கு ஒரு நினைவுச் சின்னம் இருப்பதைப்போல, ஏனைய



1998 ஏப்ரல் 3 ]

சங்ககாலப் புலவர்கள் பிறந்த ஊர்களைக் கண்டறிந்து அங்கே அவர்களுக்கு நினைவுத் தூண்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா? ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய சங்கத் தமிழ் நூலிலே இன்றைய மகிபாலன்பட்டிதான், 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற உலகத் தத்துவத்தைச் சொன்ன கணியன் பூங்குன்றனார் பிறந்த பூங்குன்றம் என்ற செய்தியை நமக்குச் சொல்லி இருக்கிறார்கள். எனவே, அங்கே சிறப்பாக நினைவுச் சின்னம் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக் கொண்டபடி ஏற்கெனவே சங்ககாலப் புலவர்களுடைய பிறந்த ஊர்களைக் கண்டறிந்து அவர்கள் சங்க இலக்கியங்களிலே யாத்துத் தந்த பாடல்களை அங்கே கல்வெட்டுக்களிலே படைத்து, நினைவுச் சின்னங்கள் பெரும்பாலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஏதேனும் விடுபட்டிருக்குமேயானால், அரசு உடனடியாகக் கவனித்து, அவற்றை முழுமையாக நிறைவு செய்யும். அதேபோல், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சங்கத் தமிழ் எழுதுகிறபோது மூன்றாகப் பிரிக்கப்படுவதற்கு முன்னால் இருந்த முகவை மாவட்டத்தின் ஒரு பகுதியில் இருக்கிற மகிபாலன்பட்டி என்று சொல்கின்ற இடத்தை பூங்குன்றம் என்றுதான் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில்தான் கணியன் பூங்குன்றனார் என்ற பெயர் வந்திருக்கின்றது என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். எனவே, அதையும் நினைவில் கொண்டு, பூங்குன்றத்தை ஒரு முழுமையான பார்வையில் நிறைவு செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. இராமலிங்கம்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பரை ஆதரித்த சடையப்ப வள்ளல் வாழ்ந்த ஊர் திருவெண்ணைநல்லூர் என்கிற கதிராமங்கலம். அது என்னுடைய தொகுதியிலுள்ள ஊர். அதிலே நினைவகம் தற்போது சிறிய அளவில் இருக்கிறது. அதைப் புதுப்பித்து, குறைந்த அளவு ரூ. 10 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு சமுதாயக் கூடமாக அதை மாற்றித்தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திருவெண்ணைநல்லூரில் அந்த மண்டபம் சிறப்பாகப் பேணப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், பெரிய அளவிலே கம்பர் விழா சிறப்பாக திருவெண்ணைநல்லூரில் நடத்தப்பட்டு வருகிறது. எனினும், மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று அந்த மணிமண்டபம் பார்வையிடப்பட்டு உரிய முறையில் புதுப்பொலிவுக்கு உள்ளாக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 154, திரு. கோ. மோகனதாசன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.*

**154—**

**திருக்கோவில்களின் மூலம் பள்ளிகளுக்கு நிதியுதவி**

**•8382—திரு. கோ. மோகனதாசன்:**

*மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அறநிலையத் துறை மூலமாக திருவெண்காடு என்ற ஊரிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கு (ஆண்கள், பெண்கள்) பழனி, திருச்செந்தூர் போன்ற திருக்கோவில்களில் உள்ள உபரி நிதிகள் மூலமாக நிதியுதவி செய்ய அரசு முன்வருமா?*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*இல்லை.*

**திரு. கோ. மோகனதாசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியாகிய திருவெண்காட்டில் அறநிலையத் துறை மூலமாக ஓர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியும், ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. நிதி வசதி இல்லாத காரணத்தால், கட்டட வசதி இல்லாமல் இருக்கிறது. ஆனால், கல்வி சிறப்பாக நடைபெற்று வருகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பழனி, திருச்செந்தூர் போன்ற கோயில்களில் உள்ள உபரி நிதி மூலமாக அப்பள்ளிகளுக்கு*



*நிதியுதவி செய்து, அந்தப் பள்ளிகளை மேலும் உயர்த்துவதற்கு ஆவன செய்வார்களா என மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.*

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு இடங்களில் அறநிலையத் துறைக்குச் சொந்தமான 37 கல்வி நிறுவனங்கள் இருக்கின்றன. அவற்றில் திருவெண்காட்டில் இருக்கின்ற இந்த இரண்டு நிறுவனங்களும் அடங்கும். எனினும், கல்வி நிறுவனங்கள் ஏற்கெனவே தொடங்கப்பட்டபோது ஆங்காங்கு இருக்கின்ற கோயில்களுடைய நிதியை வைத்துத்தான் தொடங்கப்பட்டன. காலப்போக்கில் அவை முழு வசதி பெறாமல் இடர்ப்பாடான நிலைமையில் இருக்கின்றன. எனினும், ஏற்கெனவே நிலைபெற்று இருக்கின்ற பள்ளி மற்றும் கல்லூரிகளை முழுமையாகச் சிறப்புச் செய்யவும், அவற்றில் எல்லா வகையான அடிப்படை வசதிகளை அமைத்துத் தரவும் இந்த அரசு முன்வரும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 155, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

**155—**

**சவ்வரிசி ஆலை அமைத்தல்**

**•9488—திரு. சி. ஞானசேகரன்:**

*மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாமக்கல் மாவட்டத்தில், மரவள்ளிக் கிழங்கு அதிகமாகப் பயிராகும் பகுதிகளான இராசிபுரம், நாமகிரிப்பேட்டைப் பகுதிகளில் கூட்டுறவுத்துறை மூலம் சவ்வரிசி ஆலை அமைக்க அரசு முயற்சிகள் மேற்கொள்ளுமா?*

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*இல்லை.*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நாமக்கல் மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு அதிகமாகப் பயிரிடப்படுகின்ற காரணத்தாலே இராசிபுரம், நாமகிரிப்பேட்டை போன்ற பகுதிகளிலே கூட்டுறவு சவ்வரிசி ஆலை அமைப்பது மிக மிக அவசியமான ஒன்றாகும். ஏற்கெனவே, ஓமலூர் போன்ற பகுதியில்தான் இருக்கிறது. அப்படி இருக்கிறபோது கூட்டுறவுத் துறையின் வாயிலாக - இப்போது உலக வங்கியிலும். நபார்டிலிருந்தெல்லாம் நிறைய பணம் வந்து கொண்டு இருக்கிறது. அந்தப் பணத்தையெல்லாம் பயன்படுத்தி நீங்கள் கூட்டுறவுத் துறையின் மூலமாக - சில தொழிற்சாலைகளை உருவாக்கினால்தான் அந்த இடத்திலே இருக்கக்கூடிய இளைஞர்களுக்கோ, மற்றவர்களுக்கோ வேலைவாய்ப்புக் கிடைக்கும். அந்த வேலைவாய்ப்புக் கிடைக்கின்ற வகையிலும், வாழ்வதற்கு வழிகாட்டுகின்ற வகையிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து அந்தப் பகுதியிலே கூட்டுறவு சவ்வரிசி ஆலையை அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றுபட்ட சேலம் மாவட்டத்தில் ஆத்தூருக்கு அருகில் இருக்கின்ற பாப்பநாயக்கன்பட்டியிலே ஒரு கூட்டுறவு ஆலை நிறுவுவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறது. அதற்கான மொத்தச் செலவினம் ரூ. 1,148 இலட்சம். இதிலே தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தால் வழங்கப்படும் 918 இலட்சத்திலே அரசு மூலதனமாக 229 இலட்சமும் 60 சதவீதம் கடனாக 689 இலட்சமும் வழங்கப்படும். அத்துடன் அரசு நிதியிலிருந்து மூலதனமாக ரூ. 144 இலட்சம் வழங்கப்படும். எஞ்சிய தொகை ரூ. 86 இலட்சம் உறுப்பினர்களிடமிருந்து வசூல் செய்யப்படும். அதிலே இதுவரை மிகக் குறைவாக ரூ. 56,700 தான் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பணி அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த ஆலை தொடங்கப்படுமானால், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிச்சயமாக நிறைவேறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதி சம்பந்தப்பட்ட கேள்வியைக் கேட்டதற்கு மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர், அவர்கள்





பாப்பநாயக்கன்பட்டியிலே ஒரு சவ்வரிசி ஆலை துவக்குவதற்கு ஆய்விலே இருக்கிறது; அதற்கு பணம் எல்லாம் திரட்டப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். இந்த சவ்வரிசித் தொழிலைப் பொறுத்தவரையில், அதிலே சம்பந்தப்பட்டவர்கள் என்ற முறையில் அமைச்சருடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். இந்த சவ்வரிசித் தொழிற்சாலைகள் எல்லாம் பழைய முறையிலே நடந்து கொண்டிருக்கின்றன. தற்பொழுது சவ்வரிசித் தொழிலைவிட ஸ்டார்ச் தயாரிக்கும் தொழிலை தாய்லாந்து நாட்டினுடைய தொழில் நுட்ப உதவியுடன் புதிதாக ஆரம்பித்திருக்கின்றார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் இந்தத் தொழிலில் தாய்லாந்து நாட்டினுடைய தொழில் நுட்பத்தைப் பெற்று, நவீன அரிசி ஆலையைப் போல, இந்த நவீன சவ்வரிசி ஆலையை அமைப்பதற்கு முயற்சி செய்தால் இந்தத் திட்டத்தை நல்லமுறையிலே செயல்படுத்த முடியும் என்று தெரிவித்துக் கொண்டு, அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையிலே ஆலை நிறுவுவது என்பதில் அதற்குத் தேவையான நிதியாதாரத்தைப் பெருக்கித் தருவது மட்டும்தான் கூட்டுறவுத் துறையினுடைய பணி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற தொழில்நுட்பம் குறித்த அந்தப் பணி எல்லாம் Industries Department-ஐச் சார்ந்தது. நாங்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை நிச்சயமாக அவர்களுக்குத் தெரிவிப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 156, திரு. குழந்தை தமிழரசன். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**156—**

**பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்குதல்**

***8186—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் வட்டம், மு. பரூர் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) விருத்தாசலம் வட்டம், மு. பரூர் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்க ஆணையிடப்பட்டுள்ளது.

(ஆ) 6-8-1997 முதல் இவ்விடுதி தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே துணை வினா என்ன இருக்கிறது?

முற்பகல் 10-20

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி எழும்பியவுடன், அந்தக் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி திறக்கப்பட்டது. அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிதாகத் திறக்கப்பட்ட அந்த விடுதிக்கு விரைந்து கட்டடம் கட்டித் தரப்படுமா? அதோடு இந்த நிதியாண்டிலேயே எனது தொகுதிக்கு உட்பட்ட மங்கலம்பேட்டை, இருப்புக்குறிச்சி ஆகிய கிராமங்களில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி அமைத்துத் தரப்படுமா? அமைத்துத் தரவேண்டும். அதற்கு ஆவன செய்வீர்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிதிநிலையை அனுசரித்துப் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த. நடராஜன்.



**திரு. த. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப்பள்ளி உள்ள எல்லா இடங்களிலும் இவ்வரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகள் தொடங்க முன்வருமா? என்னுடைய செஞ்சித் தொகுதியிலுள்ள மேல்சித்தாமூர், வீரணாமூர், கள்ளப்புலியூர், ஆவணியூர், உலக்கூர் ஆகிய கிராமங்களிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கு மாணவர் விடுதி தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 942 விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. போதிய நிதிநிலை வசதிகள் இல்லாத காரணத்தால் வாடகைக் கட்டடங்களில் இந்த விடுதிகள் இயங்கி வருகின்றன. சுமார் 150 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்ற விடுதிகள் 792. மேலும், இலவச பஸ் பாஸ் திட்டத்தின் மூலமாக மாணவர்கள் அதிகமாக விடுதிகளில் சேர்ந்து படிப்பதற்குரிய வாய்ப்புகள் இல்லாத காரணத்தால், புதிதாக விடுதிகள் ஆரம்பிக்கப்படுவதைக் குறைத்துக் கொண்டு படிப்படியாக அதிகக் கட்டடங்கள் கட்டவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த அரசு அந்தப் புதிய விடுதிகளைக் குறைத்திருக்கிறது. இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 25 புதிய விடுதிகளைத் துவங்குவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை விதிமுறைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 157, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**157—**

**பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் தொழில் தொடங்கக் கடனுதவி**

***11427—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 ஏப்ரல் 3

(அ) அரக்கோணம் பகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் தொழில் தொடங்க உடனடியாகக் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) அரசு ஆவன செய்யும்.

(ஆ) கடன் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றால் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் விதிமுறைகளின்படி கடனுதவி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அரக்கோணம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அதிலும் படிப்பு அறிவு இல்லாத மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தால் பிற்படுத்தப்பட்ட மக்கள் அரசிடம் கடன் கேட்டு விண்ணப்பம் செய்து இன்றுவரை கடன் கிடைக்கவில்லை. 1996 ஆம் ஆண்டு இறுதியில் அனுப்பப்பட்ட மனுக்கள் மீது இன்றுவரையில் கடன் வழங்கப்படவில்லை. வேலூர் மாவட்டத்தினுடைய பிற்படுத்தப்பட்டோர் நல அதிகாரி அவர்களிடம் கேட்கும்போது, சென்னையிலிருந்து ஒரு குழு வந்து அது பரிசீலனை செய்த பிறகுதான் கடன் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், இன்றுவரையில் அந்தக் குழு வரவில்லை. எனவே, விதிமுறைகளின்படி கடன் வழங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். அந்த விதிமுறைகளினால் தான் காலதாமதமும், மனு தள்ளுபடியும் ஆகிறது. எனவே, அந்த விதிகளைத் தளர்த்தி அந்தப் பிற்படுத்தப்பட்ட மக்கள் கடன் பெறுவதற்கு, அதிலும் குறிப்பாக நெசவாளர்கள் கடன் பெறுவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் இதுநாள் வரையில் கடன் வேண்டி விண்ணப்பித்தவர்களில் நிலுவையிலுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை 852. 13-5-1996-க்குப் பின்னர்



1998 ஏப்ரல் 3]

இன்றுவரையில் மேற்படி கழகத்தின் மூலமாகக் கடன் உதவி கோரி விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 366. இதுநாள் வரையில் கடன் உதவி பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை 154. வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை 133.71 லட்சம் ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் குழுவின் தலைவராக நியமித்து, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் மற்றும் வங்கி அதிகாரிகளை வைத்துத்தான் அந்தப் பயனாளிகளுடைய விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து, அதன் அடிப்படையில் கடன் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வ. அப்துல் நாசர்.

**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலம் கடன் பெறக் கூடியவர்கள், புதிதாகத் தொழில் தொடங்க வசதி இல்லாத நிலையில்தான் அவர்கள் கடன் பெறுகிறார்கள். அப்படிக் கடன் பெறுகின்ற நேரத்திலே அவர்களுக்குச் சொத்து ஜாமீன் மற்றும் இதர விதிமுறைகளெல்லாம் மிகவும் கடுமையாக இருக்கின்ற காரணத்தினால், பிற்படுத்தப்பட்டவர்கள் அதில் கடன் பெற்றுப் பயனடைய முடியவில்லை. எனவே, அரசு அந்த விதிமுறைகளைத் தளர்த்தி, எளிதாகக் கடன் பெறக்கூடிய வகையிலே அதை மாற்றித்தர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் தொகையின் அளவு ரூ. 50,000-க்கு உட்பட்டு இருந்தால் விண்ணப்பதாரர் இரண்டு அரசு அலுவலர்களிடமிருந்து பிணைக் கையெழுத்துப் பெற வேண்டுமென்று உள்ளது. கடன் தொகையின் அளவு ரூ. 50,000-க்கு மேல் இருந்தால் அசையாச் சொத்தினை வங்கியில் பாதுகாப்பு உத்தரவாதம் கருதி அடமானம் வைத்திட வேண்டும். தேவைப்பட்ட கடன் தொகை மூலம் வாங்கிய சொத்துக்களையும், சம்பந்தப்பட்ட வங்கியிடம் அடமானம் வைத்தாக வேண்டுமென்று விதிகள் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையினை விரைவாக செயல்படுத்துவதற்குப் பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 158, திருமதி ஏ. ஆர். வேடம்மாள். மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.*

**158—**

**வனத்துறைக்கென ஓய்வு விடுதி கட்டுதல்**

***10717—திருமதி ஏ. ஆர். வேடம்மாள்:**

*மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மொரப்பூரில் வனத் துறை மூலமாக வனத் துறைக்கென ஓய்வு விடுதியினைக் கட்டிடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) ஆம்.*

*(ஆ) அரசு ஆணை எண் 213, சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை, நாள் 9-6-1997-ல் ரூபாய் 6.60 லட்சம் செலவில் மொரப்பூரில் வன ஓய்வு விடுதி கட்டுவதற்கு ஒப்பளிக்கப்பட்டு பொதுப்பணித் துறை மூலம் கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் பணி ஆரம்பிக்கப்படும்.*

**திருமதி ஏ. ஆர். வேடம்மாள்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. பெ. சு. திருவேங்கடம்.*

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு, அரசுக்குப் பல கோடி ரூபாய் வனத் துறை மூலமாக, சந்தனக் கட்டை மூலமாக இலாபம் வருகின்றது. ஆனால், 100 ஆண்டுகளுக்கு முன்னதாகக் கட்டப்பட்ட தங்கும்*





*விடுதிதான் அங்கே மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. அதனால், புதிதாக ஜமுனாமருதூரில் வனத் துறையின் மூலமாக ஒரு விடுதி கட்டுவதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே வனத் துறையில் ஏறத்தாழ 119 வன ஓய்வு இல்லங்கள் இருக்கின்றன. அவைகளில் சில பழுதடைந்திருக்கின்றன. அரசினுடைய நிதிநிலையை அனுசரித்து, படிப்படியாக முன்னுரிமை அடிப்படையில் அவையெல்லாம் பழுதுபார்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்.*

**திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஏற்காடு பகுதியிலே வனத் துறை மூலமாக ஏராளமான வருமானம் வனத்துறைக்கு வந்து கொண்டிருக்கிறது. ஆனால், ஏற்காடு பகுதியிலே வனத்துறைக்கான ஓய்வு விடுதி இல்லை. அங்கிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவிலே இருக்கக்கூடிய காவேதிக் என்ற பகுதியிலேதான் வனத் துறை அலுவலகம் ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு பாழடைந்த நிலையிலே இருக்கிறது. ஏற்காடு, சுற்றுலாப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், ஏற்காடு நகர் மத்தியிலேயே அதற்குரிய இடம் இருக்கின்ற காரணத்தினால் அங்கே ஓர் ஓய்வு விடுதி கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலம் மண்டலத்தில் ஏற்கெனவே 15 வன ஓய்வு இல்லங்கள் முன்பு கட்டப்பட்டு, இப்பொழுது பராமரிக்கப்பட்டு வருகின்றன. புதிதாகக் கட்டுவதற்கு நிதிநிலை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திருமதி ஆர். சரஸ்வதி.*

**திருமதி ஆர். சரஸ்வதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எங்கெங்கு, மொத்தம் எவ்வளவு வனத்துறை ஓய்வு இல்லங்கள் உள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வனத் துறை மூலம் சென்னை மண்டலத்தில் 8 ஓய்வு இல்லங்களும், வேலூர் மண்டலத்தில் 20 ஓய்வு இல்லங்களும், சேலம் மண்டலத்தில் 15 ஓய்வு இல்லங்களும், திருச்சி மண்டலத்தில் 10 வன ஓய்வு இல்லங்களும், மதுரை மண்டலத்தில் 9 இல்லங்களும், கோவை மண்டலத்தில் 44 வன ஓய்வு இல்லங்களும், திருநெல்வேலி மண்டலத்தில் 13 வன ஓய்வு இல்லங்களும், ஆக மொத்தம் வனத்துறையில் 119 வன ஓய்வு இல்லங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 159, டாக்டர் அ. மணி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**159—**

## தொழிற்பேட்டை அமைத்தல்

***9972—டாக்டர் அ. மணி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டையில் "சிட்கோ" தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ): உளுந்தூர்பேட்டையில் தற்சமயம் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் இல்லை.

**டாக்டர் அ. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உளுந்தூர்பேட்டை ஒன்றியத்தில் ஒரு சிட்கோ தொழில் வளாகம் தொடங்கப்பட வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கோரிக்கை வைக்கப்பட்டு, அந்தக் கோரிக்கை என்னால்கூட சமீபத்திலே மாண்புமிகு அமைச்சரவர்களிடத்திலே நேரடியாகக் கொடுக்கப்பட்டது. அந்தப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி என்று அரசால் அறிவிக்கப்பட்டு எந்தவிதமான தொழில் வளர்ச்சியும் இல்லாமல் அங்கேயுள்ள மக்கள் தங்களுடைய அன்றாடப் பிழைப்புக்குக் கூலி வேலை செய்கின்ற நிலையிருக்கிறது. காரணம், அந்தப் பகுதி ஒரு





வறட்சியான பகுதி என்பதனாலேயே விவசாயம் அறவே அங்கு இல்லை. எனவே, இந்த நிலையிலே இந்தப் பகுதியிலே ஒரு தொழிற்பேட்டை தொடங்குவதற்காக....

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வினாவிற்கு வரவேண்டும்.

**டாக்டர் அ. மணி:** உளுந்தூர்பேட்டை ஒன்றியத்திலே உள்ள ஆசனூரிலேயிருந்து அருகேயுள்ள இரயில்வே கிராசிங் வரையிலே கிட்டத்தட்ட 100 ஏக்கர் நிலம் இதற்காகத் தேர்வு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அந்த இடங்கள்கூடப் பார்வையிடப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, சிட்கோ தொழில் வளாகம் அமைக்கும் இந்த நிலையை மறுபரிசீலனை செய்து அமைச்சர் அவர்கள் உடனடியாக உத்தரவு பிறப்பிப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல ஆசனூரிலே கடந்த ஆண்டு தொழிற்பேட்டை அமைப்பதற்காக அரசிடத்திலே நிலம் கோரியதிலே 244 ஏக்கர் நிலம் ஆசனூரிலே எடுத்துக்கொள்ளலாம் என்றும் அதற்காக 81 இலட்சம் ரூபாய் வழங்க வேண்டுமென்றும் கோரியதற்கிணங்க எங்களது துறையினுடைய பொறியாளர்களை அனுப்பிப் பார்த்ததிலே அது சதுப்பு நிலமாக இருக்கிறது. தொழிற்பேட்டைகள் அமைப்பதற்குரிய வாய்ப்பு இல்லையென்று தெரிவித்திருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல அந்தப் பகுதியிலே இருக்கின்ற 4, 5 இடங்களில்—நான் வரிசையாக அந்த ஊர்களைச் சொல்ல விரும்பவில்லை—சிறு தொழில் கூடங்கள் கட்டப்பட்டு அத்தனையும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இருந்தாலும், அவர்களுடைய கோரிக்கை வருகின்ற ஆண்டிலே நிதிநிலையைப் பொறுத்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ஜெ. மணிக்கண்ணன்.

**திரு. ஆ. ஜெ. மணிக்கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்ப்பேட்டைக்கு அருகில் திருநாவலூர் ஒன்றிய எல்லைக்குப் பக்கத்திலுள்ள இடத்தில் பழைய விமானதளம்

ஒன்றிருக்கிறது. அதிலுள்ள புறம்போக்கு நிலம் ஏறக்குறைய 2,500 ஏக்கர் சும்மா இருந்து கொண்டிருக்கிறது. சாலை வசதிகள், அடிப்படை வசதிகள் எல்லாம் சரியான முறையிலே இருக்கின்றன. அங்கே தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்த விவரங்களை எங்களுக்குத் தெரிவிப்பார்களேயானால் அரசு அதை எடுத்து அங்கே தொழிற்பேட்டை அமைக்கக்கூடிய நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. எம். விஜயகுமார்.

**திரு. கே. எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலில் பின்தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் நூற்பாலைகளுக்கு அவை எஸ்.எஸ்.ஐ. யூனிட் எனப் பதிவு செய்யப்பட்டிருந்தால் விற்பனை வரி deferral scheme-ன்கீழ் ஆதாயம் மறுக்கப்படுகிறது என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? ஆம் எனில், இக்குறை எப்போது நிவர்த்தி செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்துத் தனிக் கேள்வி கேட்கவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை வட்டம், கஸ்தூரிபாளையம் ஊராட்சியிலும் சிட்கோ அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பணிகள் தொடங்கப்படாமல் இருக்கின்றன. எப்போது பணிகள் தொடங்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலே தமிழகத்திலே பல்வேறு இடங்களிலே, தொழிற்பேட்டைகள் அமைப்பதற்குரிய சூழ்நிலைகள் இல்லாத இடங்களிலேகூட, தொழிற்பேட்டை அமைப்பதற்காகச் சிலருடைய சுயலாபத்திற்காக அங்கே இடங்கள் கையகப்படுத்தப்பட்டன. வெள்ளக்கோவிலிலே நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது, இன்னும் மாநிலத்திலே பல்வேறு இடங்களிலே அரசு விலைக்கு வாங்கியிருக்கின்ற நிலங்களிலே தொழிற்பேட்டை அமைக்கக்கூடிய சூழ்நிலையில்லை.





ஒரு விண்ணப்பம்கூட இதுவரை கிடைக்கவில்லை. அதனால், தொழிற்பேட்டை அமைக்கின்ற நிலையில்லை. அங்கே, தொழில் முனைவதற்கு முனைவர்கள் தயாராக இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால், நிச்சயமாக அது பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 160, திரு. அ. லெ. சுப்பிரமணியன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

## 160—

### திருநெல்வேலி மற்றும் கிருஷ்ணாபுரத்தைச் சுற்றுலா மையமாக்குதல்

***6414—திரு. அ. லெ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அதிகப் பரப்பளவில் அமைந்துள்ளதும், அற்புதமான கலை அழகுள்ள சிற்பங்கள், கல்தூண்கள் அமைந்துள்ளதுமான நெல்லையப்பர்-காந்திமதி திருக்கோயில் அமைந்துள்ள திருநெல்வேலி நகரத்தையும் அதற்கருகிலுள்ள கலையழகு மிக்க கிருஷ்ணாபுரத்தையும் சுற்றுலா மையமாக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி, பயணிகளை அதிக அளவில் ஈர்க்கும் தலங்களில் ஒன்றாகும். எனவே, புதிதாக அறிவிக்க வேண்டிய தேவையில்லை. வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி திருக்கோவில், கவின்மிகு சிற்பங்களைக் கொண்ட கிருஷ்ணாபுரம் ஆகியவை சுற்றுலாப் பயணிகளை ஏற்கெனவே கவர்ந்தவை. சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதும், விளம்பரப்படுத்துவதும் சுற்றுலாத் துறையின் பணியாகும். இதில் இப்பகுதியும் சேர்க்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### ஜெயின் கமிஷன் இறுதி அறிக்கையை வெளியிடாமல் இருக்க மத்திய அரசை முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா நிர்ப்பந்திப்பதாகக் கூறப்படுதல்

**திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பாயின்ட் ஆஃப் ஆர்டரா?*

**திரு. கே. சுப்பராயன்:** Point of Clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. கே. சுப்பராயன்.*

*முற்பகல் 10-35*

***திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியாவையே மிகப் பெரிய அளவிற்குப் பாதித்த ஒரு விஷயமாக ஜெயின் கமிஷனுடைய அறிக்கை வந்தது நமக்குத் தெரியும். அது ஓர் இடைக்கால அறிக்கை என்றுகூடக் கருதாமல், அரசியல் துறையிலே நிதானத்திற்குப் பெயர் பெற்ற காங்கிரஸ் கட்சி நிதானமிழந்து, ஆசைவயப்பட்டு ஒரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்திய காரணத்தால், மத்திய அரசில் ஐக்கிய முன்னணி அதிகாரத்தையிழந்து தேர்தல் நடைபெற்றதும், அந்தத் தேர்தலின் மூலம் கோடிக்கணக்கான ரூபாய், பொதுமக்களுக்குச் செலவு ஏற்பட்டதும் நமக்குத் தெரியும். இப்போது முழு அறிக்கை மத்திய அரசிடம் கொடுக்கப்பட்டுவிட்டது. ஆனால், முழு அறிக்கை கொடுக்கப்பட்டுவிட்ட நிலையிலும் அதிகாரபூர்வமாக அது வெளியிடப்படவில்லை. நான் தங்கள் அனுமதியோடு ஒரு விஷயத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இதைக் காண்பிக்க விரும்புகிறேன். (உறுப்பினர் wall poster ஒன்றை அவையில் காண்பித்தார்.) தினமணி ஒரு wall poster வெளியிட்டிருக்கிறது. அந்த wall poster-இல் "கருணாநிதி மீது குற்றம் இல்லை, ஜெயின் இறுதி அறிக்கை" என்று இருக்கிறது....*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன், நீங்கள் இதை முதலிலேயே என்னிடம்—என்னுடைய அறைக்கு வந்து—காண்பித்திருக்க வேண்டும்.



**திரு. கே. சுப்பராயன்:** அறையிலே வந்து சொன்னேன். அவையிலே வந்து காண்பித்துக்கொள்ளலாம் என்று இருந்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இதை என்னிடம் காண்பிக்கவில்லை, விஷயத்தைச் சொன்னீர்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையிலே காட்டலாம் என்பதற்காகத்தான் நான் தங்களிடம் அறையிலே காண்பிக்கவில்லை. விஷயத்தைச் சொல்லிவிட்டு, அவையிலே சொல்லலாம் எனபதற்காக இங்கே கொண்டு வந்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இதையும் காண்பித்திருக்க வேண்டும். அதுதான் முறை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடுதான் காண்பிக்கிறேன். ஆகவே, இப்படி விவரங்கள் வந்திருக்கின்றன, நான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருந்தாலும், என்னிடம் அறையிலே நீங்கள் அதைக் காட்டியிருக்க வேண்டும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு இந்த Wall Poster-ஐக் காட்ட விரும்புகிறேன். (உறுப்பினர் Wall Poster ஒன்றை அவையிலே காண்பித்தார்) அதில் "கருணாநிதி மீது குற்றம் இல்லை, ஜெயின் இறுதி அறிக்கை" என்று இருக்கிறது. இதை தினமணி வெளியிட்டுப் பின்னர் திரும்பப் பெற்றுக்கொண்டது ஏன் என்று புரியவில்லை. ஜெயின் அறிக்கை மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது. ஜெயின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட நிலையிலும் அதை வெளியிடவில்லை என்றால், அதிகாரபூர்வமாக அது வெளியிடப்படக்கூடாது என்ற நாகரீகமற்ற நிர்ப்பந்தம் மத்திய அரசுக்கு வந்திருக்கிறதா? அதுவும் டெல்லி சென்று திரும்பியிருக்கிற முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று பத்திரிகையாளர்களிடம் சொல்கிறபோது, ஜெயின் கமிஷன் அறிக்கை வந்துள்ளதே, அதுபற்றி என்ன கருதுகிறீர்கள் என்று கேட்டபோது, ஆட்சிக்கலைப்புக்கு மட்டும் நீட்டி முழக்குகிற ஜெயலலிதா அவர்கள், இந்த விஷயம் பற்றி எனக்கு ஒரு விவரமும் தெரியாது என்று சொல்கிறார். ஆனால் இந்த முழு விவரமும் தெரிந்து மத்திய அரசை நிர்ப்பந்தித்து, தி.மு.க. அரசின் மீது குற்றம் சாட்டியது வரலாற்றில்

மிகப்பெரிய blunder என்பது முழு அறிக்கைமூலம் நிரூபிக்கப்பட்டுவிட்டது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அவர்களை வெளியிடவிடாமல் நிர்ப்பந்திக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். எனவே, மாநில அரசுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, மத்திய அரசுக்கு இப்படிப்பட்ட நிர்ப்பந்தம் இருக்கிறது என்கிற விவரம் ஏதாவது தெரியுமா? அப்படி மாநில அரசுக்குத் தெரியுமானால், நாட்டுமக்களுக்கு அதுபற்றி அறிவிக்க வேண்டும் என்று தங்கள்மூலம் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு எத்தனையோ நிர்ப்பந்தங்கள் இருக்கின்றன என்பது தெரியும். இந்த நிர்ப்பந்தம் இருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது. எனவே, வேறு தகவல் என்னிடத்திலேயில்லை. திரு. சுப்பராயன் அவர்கள் இங்குச் சொன்ன தகவலைத் தவிர வேறு தகவல் எனக்குத் தெரியவில்லை. அது பற்றி விசாரிக்கப்படும்.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. ம. அப்துல் லத்தீப், சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1997-98-ஆம் ஆண்டிற்கான சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் ஒன்பதாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. கே.எம். விஜயகுமார், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

**திரு. கே.எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1997-98 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்தொன்றாவது முதல் முப்பத்தைந்தாவது வரையிலான அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.





## 4. விதி 110-ன்கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்

### (அ) மின்பற்றாக்குறையை முன்னிட்டு தொழிற்சாலைகள் கடைப்பிடிக்க வேண்டிய வார விடுமுறை நாட்கள் குறித்து மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையை வைக்க வேண்டும் என்று அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகின்றது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றினை இந்த அவைக்கு வைக்க அனுமதி அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தற்பொழுது மின்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்தப் பற்றாக்குறை சுமார் 500 மெகாவாட் ஆகும்.

இந்தப் பற்றாக்குறையைச் சமாளிக்க மகாராட்டிர மாநில அரசுடன் பேச்சுவார்த்தை நடந்தது. அந்த மாநிலம் 200 மெகாவாட் மின்சாரம் கொடுக்க ஒப்புக்கொண்டுள்ளது. 27-3-1998 முதல் 100 மெகாவாட் கிடைக்கிறது. விரைவில் இது 200 மெகாவாட் ஆகும்.

மத்திய அரசின் மின் நிலையங்களில் இருந்து கூடுதல் மின்சாரம் பெற அந்த அரசின் உதவியையும் நாடினோம். அவர்களும் நமக்கு உதவி செய்ய முன் வந்தனர். ஆகவே, தற்பொழுது நெய்வேலியில் இருந்து 95 மெகாவாட் கூடுதலாக மின்சாரம் கிடைக்கிறது. கிழக்கிந்தியாவில் இருந்து இன்னும் 300 மெகாவாட் தர மத்திய அரசு முன் வந்தது. ஆனால் ஆந்திர மாநிலத்தின் வழியே வரும் Power Grid Corporation-இன் உயர் அழுத்த மின்பாதை ஏற்கெனவே முழுத்திறன் அடைந்துள்ளது. ஆகவே 300 மெகாவாட் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. Power Grid Corporation-இன் மின்பாதைத் திறன் அதிகப்படுத்தப்பட்டாலொழிய மத்திய அரசு கொடுக்க முன்வந்த 300மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைக்காது. ஆக தமிழ்நாட்டில் 200 மெகாவாட் அளவிற்கு மின் பற்றாக்குறை தொடர்கிறது. இந்த நிலையைச் சமாளிக்கக் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன:

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1998 ஏப்ரல் 3

சுழல் முறையில் வார விடுமுறை: உயர் அழுத்தத் தொழிற்சாலைகள் பல்வேறு மாவட்டங்களில் சுழல் முறையில் வார விடுமுறை மேற்கொள்வதன் மூலம் சுமார் 100 மெகாவாட் அளவிற்கு மின் பற்றாக்குறையைச் சமாளிக்க இயலும். இதுபற்றி 26-3-1998 அன்று தொழிலதிபர்களுடன் விவாதிக்கப்பட்டது. அவர்கள் இந்த யோசனையை வரவேற்றனர்.

இதன்படி குறிப்பிட்ட தொடர் உற்பத்தி மற்றும் அத்தியாவசிய உற்பத்தித் தொழிற்சாலைகள் தவிர மற்ற அனைத்துத் தொழிற்சாலைகளும் பின்வருமாறு வார விடுமுறை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவார்கள்:—

| | |
|---|---|
| சென்னை மாவட்டம் | ஞாயிற்றுக்கிழமை |
| திருவள்ளூர் மாவட்டம் | திங்கட்கிழமை |
| காஞ்சிபுரம் மாவட்டம் | திங்கட்கிழமை |
| சேலம் மாவட்டம் | செவ்வாய்க்கிழமை |
| நாமக்கல் மாவட்டம் | செவ்வாய்க்கிழமை |
| ஈரோடு மாவட்டம் | செவ்வாய்க்கிழமை |
| விழுப்புரம் மாவட்டம் | செவ்வாய்க்கிழமை |
| கடலூர் மாவட்டம் | செவ்வாய்க்கிழமை |
| திருவண்ணாமலை மாவட்டம் | செவ்வாய்க்கிழமை |
| திருநெல்வேலி மாவட்டம் | புதன்கிழமை |
| தூத்துக்குடி மாவட்டம் | புதன்கிழமை |
| கன்னியாகுமரி மாவட்டம் | புதன்கிழமை |
| விருதுநகர் மாவட்டம் | புதன்கிழமை |
| வேலூர் மாவட்டம் | வியாழக்கிழமை |
| தர்மபுரி மாவட்டம் | வியாழக்கிழமை |
| மதுரை மாவட்டம் | வியாழக்கிழமை |



1998 ஏப்ரல் 3] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

| | |
|---|---|
| கோயம்புத்தூர் மாவட்டம் | வெள்ளிக்கிழமை |
| உதகமண்டலம் மாவட்டம் | வெள்ளிக்கிழமை |
| திருச்சி மாவட்டம் | சனிக்கிழமை |
| கரூர் மாவட்டம் | சனிக்கிழமை |
| பெரம்பலூர் மாவட்டம் | சனிக்கிழமை |
| தஞ்சாவூர் மாவட்டம் | சனிக்கிழமை |
| திருவாரூர் மாவட்டம் | சனிக்கிழமை |
| நாகை மாவட்டம் | சனிக்கிழமை |
| புதுக்கோட்டை மாவட்டம் | சனிக்கிழமை |
| தேனி மாவட்டம் | சனிக்கிழமை |
| திண்டுக்கல் மாவட்டம் | சனிக்கிழமை |
| இராமநாதபுரம் மாவட்டம் | சனிக்கிழமை |
| சிவகங்கை மாவட்டம் | சனிக்கிழமை |

தொழிற்சாலைகளுக்கு தன்பயன் (Captive sets) மின் உற்பத்தி நிறுவனம் பயன்படுத்த ஊக்கம் அளித்தல்:

பல தொழிற்சாலைகள் தன்பயன் (Captive sets) மின் உற்பத்தித் திறன் கொண்டுள்ள ஜெனரேட்டர்கள் வைத்துள்ளன. தற்பொழுது இவை அந்தத் திறனைத் தங்களுக்குத் தேவையான நேரத்திலேயே பயன்படுத்துகின்றன. இந்தத் திறன் முழு நேரமும் பயன்படுத்தப்பட்டால் மின் பற்றாக்குறையைச் சமாளிக்க மிகவும் உதவியாக இருக்கும். இந்த யோசனையும் 26-3-1998 அன்று தொழிலதிபர்களுடன் விவாதிக்கப்பட்டது. அவர்கள் இதற்கான சலுகைகளைக் கோரினர். குறைந்தது (4 எம்.வி.ஏ) மில்லியன் வோல்ட் ஆம்பியர் திறன் உள்ள தங்கள் தன்பயன் உற்பத்தி திறனை ஒவ்வொரு நாளும் காலை 6-00 மணியிலிருந்து மாலை 6-00 மணிக்குள் குறைந்தது 8 மணி நேரம் பயன்படுத்தினால் 30-6-1998 வரை கீழ்க்கண்ட சலுகைகள் வழங்க முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது:—

(a) Total exemption from electricity generation tax to industries using captive generating sets using furnace oil (as is being already extended to units using High Speed diesel).

(அ) அதிவேக டீசல் போல் உலை எண்ணெய் (Furnace oil) உபயோகிக்கும் மின் உற்பத்தி ஆலைகளுக்கும் மின் உற்பத்தி வரியில் இருந்து முழு விலக்கு அளிக்கப்படும்.

(b) Demand charges will be levied on the basis of actual recorded demand instead of sanctioned demand, provided the recorded demand is at least 20% less than the average recorded demand during 1997-98.

(ஆ) தேவைக் கட்டணம் (Demand Charge) அனுமதிக்கப்பட்ட தேவைக் குறியீட்டுக்குப் பதிலாக, உபயோகிக்கப்பட்ட குறியீட்டின் பேரில் (Recorded demand), அது 1997-98-ல் இருந்த சராசரி உபயோகத்தைவிட 20 சதவிகிதமாவது குறைவாக இருக்கும்பட்சத்தில், வசூலிக்கப்படும்.

மேற்கூறிய நடவடிக்கைகளின் மூலம் தமிழ்நாட்டில் தற்காலிகமாக உள்ள மின் பற்றாக்குறையை 30-6-1998 வரை சமாளிக்க இயலும். இதற்கிடையே ஆந்திர மாநிலத்தில் உள்ள தனி மின் பாதையை 'பவர்கிரிட் கார்ப்பரேஷன்' வலுப்படுத்த வேண்டும் என்று கோரி மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறோம்.

அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் எந்த அளவிற்கு மின்சாரத்தைச் சிக்கனப்படுத்த முடியுமோ அந்த அளவிற்குச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டுமென்று இம்மாமன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-45*

**Thiru C. Gnanasekaran:** Hon. Speaker, Sir, one clarification.

**Hon. Speaker:** No clarification. விதி 110-ன் கீழான அறிக்கைக்குப் பின் விளக்கம் எதுவும் கிடையாது. திரு சி. சண்முகம்.

**திரு.சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Speaker நினைத்தால் கொடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Speaker உங்களை இங்கு வந்து உட்காரச் சொல்கிறார். திரு. சி. சண்முகம், பேசுங்கள்.





21845 3

## 5. வரவு-செலவுத் திட்டம் 1998-99, பொது விவாதம்—தொடர்ச்சி

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. சி. ஞானசேகரன் தலைமை)**

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல இங்கே ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நிதிநிலை அறிக்கையைத் தந்த தலைவர் அவர்களுக்கு முதலில் நான் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

முதற்கட்டமாக எனது ஆலந்தூர் தொகுதியிலே, சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகளுக்குப் பின் போராட்டத்தின் விளைவாக இன்றைக்கு கலைஞருடைய ஆட்சியிலே பாதாளச் சாக்கடைத் திட்டத்தை உருவாக்கித் தந்த நமது கலைஞர் அவர்களுக்கு எனது மக்கள் சார்பாக நன்றியைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் கத்திப்பாராவிலிருந்து பூந்தமல்லி வரையில் 4 வழிப் பாதை அமைத்து விபத்துக்களைத் தடுக்கின்ற வகையில் போக்குவரத்திற்கு வழி செய்து தந்த தலைவருக்கு நான் இந்த மாமன்றத்தில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆலந்தூர் தொகுதியிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம் 1972-ஆம் ஆண்டு முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே துவக்கப்பட்டு, அது சிறப்பான முறையில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மின்சாரத் தடை காரணமாக, சரியான முறையில் குடிநீர் அங்கே விநியோகம் செய்யப்படாமல் இருப்பதன் காரணமாகப் பிரச்சனைகள் வருகின்றன. நேரில் அமைச்சர் அவர்களைச் சந்தித்துக் கேட்டபோதும், இன்றைக்குக் கேள்வி நேரத்தின்போது கேட்டபோதும், அங்கே ஜெனரேட்டர் மூலம் மின்சார வசதி செய்து கொடுத்தால் சுவையான தண்ணீர் கிடைக்கும் என்று கேட்டேன். ஜெனரேட்டர் வாங்குவதில் தடையேதும் இல்லை, ஆனால் அதைப் பராமரிப்பதில்தான் சங்கடங்கள் இருக்கின்றன என்றார் மாண்புமிகு அமைச்சர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜெனரேட்டரை வாங்கிக் கொடுத்தால் போதும். ஊழியரை அமர்த்தி அதைப் பராமரிப்பதற்கு நகராட்சியில் ஒரு தீர்மானத்தைப் போட்டு நாங்களே பராமரித்துக் கொள்கிறோம் என்ற உறுதியைத் தருகிறேன். அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து, அங்கே குடிப்பதற்குத் தண்ணீர் தடையில்லாமல்

D
Y2 L 31 N98 N98. 43. 1

[திரு. சி. சண்முகம்] [1998 ஏப்ரல் 3

கிடைப்பதற்கு ஜெனரேட்டரை வாங்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மக்களுக்குச் சொல்லி பல அரிய கருத்துக்களை இங்கே நான் எடுத்துச்சொல்ல முடியும். இங்கே பலர் பேசும்போது மாண்புமிகு முதலமைச்சரை மனதாரப் புகழ்ந்து பேசினார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஏழையெளிய மக்கள், கிராமத்திலுள்ள விவசாய மக்கள், கூலி வேலை செய்யும் மக்கள் எல்லாம் எப்போது கலைஞருடைய ஆட்சி வரும், தங்களுடைய பெண்களுக்குத் திருமணம் எப்போது நடக்கும் என்று ஏங்கிய காலம் உண்டு. ஆட்சிப் பீடத்திற்கு வந்த இந்த 2 ஆண்டு காலத்தில் 60,000 பெண்கள் பயன்பெறுகின்ற அளவிலே திருமண உதவித் திட்டத்தின் மூலம் உதவி செய்திருக்கிறார்கள். 10,000 ரூபாய் ஒவ்வொரு பெண்ணின் திருமணத்திற்காக இலவசமாகத் தந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைத் தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்து, எப்படியாவது தம் பெண் குழந்தைகளை 8-வது வகுப்புவரை படிக்கவைக்க வேண்டும் என்ற ஒரு பெரிய எண்ணத்தை மக்களிடையே இந்த நிதிநிலை அறிக்கை மூலமாகத் தந்திருக்கிறார்கள்.

கல்வி அறிவு இல்லாதவர்கள் தமிழ்நாட்டில் இருக்கக்கூடாது. தமிழ்நாட்டில் பிறக்கின்ற குழந்தைகளெல்லாம் படிக்க வேண்டும். கல்வியினுடைய திறமை மேலோங்கி இருக்க வேண்டும். பெருந்தலைவர் காமராஜர் மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களால் சத்துணவுத் திட்டம் என்று ஆக்கப்பட்டு, இன்றைக்குக் கலைஞர் அவர்களால், முதலமைச்சர் அவர்களால் உண்மையான முட்டையோடு கூடிய சத்துணவு கொடுப்பது மட்டுமல்ல; அவர்களுக்குச் சீருடை வழங்குதல்; ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களுக்கு முழுமையாகப் பாடப்புத்தகங்களை வழங்குதல்; இதுபோன்ற பல அரிய திட்டங்களின் மூலமாகத் தமிழ்நாட்டிலே பிறக்கின்ற குழந்தைகள் அத்தனையும் படிக்க வேண்டுமென்ற உணர்வோடு, பெற்றோர்களுக்கு அதிகமான பாரம் இல்லாமல், 'ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன் நான்; பிள்ளைகளை எப்படிப் படிக்க வைக்க முடியும்' என்று நினைக்கின்ற குடும்பங்களிலே, அந்தப் பிள்ளைகளுக்கு எந்தவிதக் குறையும் இல்லாமல், உணவு கொடுத்து, உடையும் கொடுத்து, புத்தகங்களையும் கொடுத்து படிக்க வைக்கின்ற வகையில், நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்ற திட்டங்களைப் பார்க்கின்றபோது, ஏழை மக்களெல்லாம் மனதார வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.



1998 ஏப்ரல் 3] [திரு. சி. சண்முகம்]

முற்பகல் 10-50

அதுமட்டுமல்ல, இந்த நிதிநிலை அறிக்கையிலுள்ள 49 பக்கங்களையும் படிக்கும்போது, இது வரி இல்லாத நிதிநிலை அறிக்கை மட்டுமல்ல; வரியை நீக்கியிருக்கின்ற ஒரு நிதிநிலை அறிக்கையாக இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. நிதிநிலை அறிக்கை வருகிறது என்றாலே- நான் 40 ஆண்டு காலம் அரசியலிலே இருக்கிறேன் - மக்கள் என்ன நினைப்பார்கள்: மண்ணெண்ணெய்க்கு வரி வருமா, விறகுக்கு வரி வருமா என்று பலவாறாக ஏழை மக்களெல்லாம் சிந்திக்கின்ற காலம்போய், இப்பொழுது கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், முதல்வர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், நிதிநிலை அறிக்கை எப்போது வரும்; அதன் மூலமாகப் பொருட்களின் விலை எப்படிக் கட்டுப்படுத்தப்படும்; அதன் மூலமாக ஏழையெளிய, பாட்டாளி மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களின் விலை எப்படிக் கட்டுப்படுத்தப்படும்; அந்த வகையில் நிதிநிலை அறிக்கை எப்படி அமையும் என்று எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிற காலமாக இப்போது அமைந்துள்ளது. அந்தவகையில் பார்க்கும்போது - இன்று நேரம் இல்லாத காரணத்தால் பட்டியல் போட்டுக் கொள்ளாமல் பொதுவாகச் சொல்கிறேன் - இன்றைக்கு அத்தியாவசியப் பொருட்களான உணவுப் பொருட்களுக்கெல்லாம் வரி நீக்கம் செய்யப்பட்டு, வரியே இல்லாத அளவிற்கு உணவுப் பொருட்களின் விலை கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆனால், முதல்வர் அவர்களுக்கு ஒரு விண்ணப்பம். இப்படி விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி நீங்கள் அறிவிப்புச் செய்திருக்கின்றீர்கள். ஆனால், வியாபாரப் பெருங்குடி மக்கள் இதனைச் செம்மையான முறையில் செயல்படுத்தவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு. காரணம், இன்றைக்கு ஒரு ரூபாய் வரி அதிகப்படுத்தப்பட்டால், மறுநாள் காலையிலேயே கடையிலே இருக்கின்ற பொருட்களுக்கு ஒரு ரூபாய் அதிகமாக வைத்து - கடையிலே பழைய ஸ்டாக் இருந்தால்கூட - வியாபாரிகள் விற்பார்கள். ஆனால், இன்றைக்கு நிதிநிலை அறிக்கையிலே இவ்வளவு வரிகளெல்லாம் தள்ளுபடி செய்யப்பட்டும்கூட, ஓட்டல் அதிபர்கள் 'இட்லி விலையை நான் ஒரு அணா குறைத்துவிட்டேன்' என்று அறிக்கை விடவில்லை. வியாபாரிகள் 'நான் இன்னென்ன பொருட்களை இன்னென்ன விலைக்கு விற்கிறேன்' என்று குறிப்பிடவில்லை. அந்தவகையில், இந்தத் திட்டப் பயன்கள் பொதுமக்களுக்குப் போய்ச்

சேருகின்ற வகையில், வியாபாரிகள் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறன். அந்த வகையில் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

மேலும், 1989-ஆம் ஆண்டு நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, இந்த அவையிலே காவல் துறை மானியத்திலே பேசும்போது குறிப்பிட்டேன். காவல் துறையிலே Police Reforms Commission என்று அமைக்க வேண்டும்; அதன் மூலம் காவல் துறையைச் சீர்படுத்தவேண்டும் என்று முதல்வர் அவர்களிடத்தில் ஒரு விண்ணப்பம் வைத்திருந்தேன். அதையும் இந்த நோத்திலே அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசுவதற்கான அனுமதியை நான்தான் கொடுக்க வேண்டும். நேற்று மூன்று, நான்கு நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். அதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். (குறுக்கீடு) சரி பேசுங்கள்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் பேசவே ஆரம்பிக்கவில்லை. இருந்தாலும், என்னுடைய தொகுதியின் தேவைகள் சிலவற்றை இந்த மாமன்றத்திலே வைப்பதற்கு உங்களது அனுமதியைக் கேட்டுக் கொள்கிறேன். குரோம்பேட்டையில் உள்ள பொது மருத்துவமனையில் பிணவறை இருக்கின்றது. அது சரியான முறையில் பராமரிக்கப்படாமல் உள்ளது. அங்கே குளிர் பதன வசதி செய்யப்பட வேண்டும். அந்த மருத்துவமனைக்கு அருகில் தேசிய நெடுஞ்சாலை அமைந்திருப்பதாலும், அந்த மருத்தவமனை பொது மருத்துவமனையாக இருப்பதாலும், அங்கே ஏ.சி. செய்யப்பட்ட ஒரு பிணவறையை அமைத்துத் தருமாறு அமைச்சர் அவர்களை நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, 1972-ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஒரு பெரிய திட்டத்தைப் போக்குவரத்துத் துறைக்காகக் கொண்டு வந்தார்கள். அது என்னவென்றால், தென்பகுதியிலேயிருந்து வருகின்ற பேருந்துகளுக்கும், பெங்களூர் சாலையில் வருகின்ற பேருந்துகளுக்கும் கத்திப்பாரா சந்திப்பிலே ஒரு பேருந்து நிலையத்தை அமைத்து, அங்கிருந்து சிட்டிக்குள் வேறு பேருந்திலே செல்கின்ற அளவில், மாநகரத்தினுடைய போக்குவரத்து நெரிசலைத் தடுக்கின்ற வகையில் ஒரு பெரிய திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.



அதற்குப் பிறகு வந்த அரசாங்கம் அதைச் செய்யவில்லை. தலைவர் அவர்கள், நிச்சயமாக அந்தப் பேருந்து நிலையத்தை, கத்திப்பாரா சந்திப்பில், ஆலந்தூர் தொகுதியில், ஏற்படுத்தித் தருவார்களானால், அங்கே போக்குவரத்து நெரிசலைத் தடுப்பதற்கு வழி உண்டாகும்.

முற்பகல் 10-55

அடுத்து ஒரு விஷயம். பத்திரிகையாளர்கள் நிறையப் பேர், இந்த அரசு செய்கின்ற திட்டங்களைச் சரியான முறையிலே விளம்பரம் செய்வதில்லை என்பது என் மனக்குறை. ஒரே ஒரு சின்ன உதாரணம். பல ஆண்டுகளாக, சென்னை மாநகராட்சி கேட்பாரற்று, சுகாதார வசதி இல்லாமல், நாதியற்ற, நாற்றமெடுத்த மாநகராட்சியாக இருந்தது. இது அத்தனை பேருக்கும் தெரிந்த உண்மை. இப்போது தேர்தல் நடந்தபிறகு நம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, பல இடங்களிலே, பல அரிய திட்டங்கள் எல்லாம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால், 'தினமலர்' பத்திரிக்கையிலே, ஒரு இடத்திலே குப்பை எடுக்கவில்லை என்று செய்தி வந்திருக்கிறது. நான் அதை வரவேற்கிறேன். குற்றம் சொல்லலாம்; ஆனால், குப்பை எடுக்கவில்லை என்று செய்தியைப் போட்ட அந்தப் பத்திரிகைக்கு குப்பைத் தொட்டிகளைக் கட்டி, பல இடங்களிலே அழகுபடுத்தி, செம்மைப்படுத்தி, தூய்மைப்படுத்தி இருக்கிறார்களே, அவற்றை ஏன் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்கின்ற அந்த மனப்பக்குவம் இல்லை என்ற வருத்தத்தை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிடத்திலே பேசி முடித்து விடுகிறேன்.

மேலும், இரண்டாண்டு காலம் நடைபெற்ற இந்த ஆட்சியிலே, ஏழையெளிய மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கும் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருகின்ற நமது முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்கு அரிய பல திட்டங்களையெல்லாம் தீட்டி வந்திருக்கிறார்கள் என்றால், நாம் அதை மனமாரப் பாராட்டாமல் இருக்க முடியாது. இன்றைக்கு இதே மாமன்றத்திலே, இவ்வளவு நன்மைகளைச் செய்த முதலமைச்சர் அவர்களை, ஒருசிலர் தவறாகப் பேசக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆனால், ஒன்று மட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்களை இரவு 12 மணிக்கு, நீங்கள் தொலைபேசியில் கூப்பிட்டாலும், அவர் தன் பெயர் சொல்லி

[திரு. சி. சண்முகம்] [1998 ஏப்ரல் 3

எடுத்துப் பேசுகிற வாய்ப்பையும், அது மட்டுமல்ல; அவர் புரண்டு படுத்தாலும், ஏழையெளிய மக்களுக்கு என்ன செய்ய வேண்டும்; தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு என்ன செய்ய வேண்டும்; விடிந்தால், என்ன திட்டத்தைக் கொண்டுவரலாம் என்ற எண்ணத்தையும் பெற்றிருக்கிறார்களே தவிர, புரண்டு படுக்கும்போதெல்லாம், பெட்டி வந்துவிடுமா, தாகு முடிந்துவிடுமா என்று முன்னால் இருந்தவர் எண்ணுவது போன்ற நிலைமை எல்லாம் இப்போது இல்லை. இப்படிப்பட்ட கிடைப்பதற்கு அரிய, தமிழ்நாட்டிற்காக, தமிழ் மண்ணிற்காக, தன்னையே அர்ப்பணித்த ஒரு முதலமைச்சரை இந்தத் தமிழ்நாடு பெற்றிருக்கிறது என்றால், நாம் மனமார வாழ்த்துவதோடு மட்டுமல்ல; நம் ஆயுளையும் அவருக்குச் சேர்த்து, அவர் பல்லாண்டு வாழ்ந்து, இந்தத் தமிழ்மண்ணையும், தமிழ் மக்களையும் காக்க வேண்டுமென்று சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த நிதி நிலை அறிக்கையின் மீது ஒருசில கருத்துக்களைச் சொல்லவிருக்கின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பலபேர் பலவிதமாக, பல வகையில் புகழந்து இங்கே சொன்னார்கள். எனக்கு அவ்வாறு புகழந்து சொல்லத் தெரியவில்லை. ஆகையால், அவருடைய பணி சிறக்க வேண்டும்; அவருடைய பணி சிறந்து, ஏழையெளிய மக்களுடைய குறைகளை எல்லாம் போக்க வேண்டும். குறைபாடுகளைப் போக்குவது மாத்திரமல்ல; அந்த மக்களுடைய வாழ்வுக்கு எல்லா வகைகளிலும் வழிவகை செய்யக்கூடிய அளவுக்கு அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் இருந்து நல்ல முறையிலே, சீரிய முறையிலே பணியினை ஆற்ற வேண்டுமென்று நான் ஆண்டவனைப் பிரார்த்தித்து, அவருக்கு என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வை. கோ. அவர்கள் முன்பு ஒன்றைச் சொன்னார்கள். அவர் இங்கே இல்லை; இருந்தாலும் ஒன்று சொன்னார். நான் ஜெயித்த உடனேயே, 'கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரை பாதயாத்திரையாகச் சென்று, கிராமங்கள்தோறும் சென்று, முன்னாள்



1998 ஏப்ரல் 3] [திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்]

முதலமைச்சருடைய ஊழலையெல்லாம் எடுத்துச் சொல்லி, அவர்களை மறுபடியும் வரவிடாமல் மக்கள் புறக்கணிக்க வேண்டும்' என்று நான் சொன்னேனே; அந்தக் காரணத்தினாலேதான், மக்கள் ஓட்டுப் போடாமல் புறக்கணித்து, மாண்புமிகு முதலமைச்சர் கருணாநிதி கையிலே ஆட்சியைக் கொடுத்திருக்கிறார்கள்; அது அவர்களால் வரவில்லை; அதாவது, நான் சொன்னதாலேதான், அவர்களைப் பற்றிய குற்றங்குறைகளை எடுத்துச் சொன்ன காரணத்தினாலேதான் மக்கள் ஓட்டுப்போட்டார்கள் என்று அவரே சொன்னார். அதற்குப் பிறகு, என்னுடைய பழைய தொகுதி சோழவந்தான் தொகுதி. நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு ஐயா சுப்பிரமணியசாமி அவர்கள் முள்ளிப்பள்ளம், சோழவந்தான் தொகுதியிலே பிறந்தவர். அவர்கள் கொஞ்சம் படித்தவர்; நல்ல விஷயம் தெரிந்தவர் என்றுதான் நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் அவர்கள் என்ன சொன்னார்கள். இந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை ஆட்சியைவிட்டு இறக்கும்வரை நான் ஓயமாட்டேன், அவர்களை இறக்கிய பிறகுதான் நான் தலையை மொட்டை அடிப்பேன் என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

முற்பகல் 11-00

அதன் பிறகு அவர்கள் தோல்வி கண்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. அவர்கள் உடனே மொட்டை அடித்துவிட்டார்கள். என் கனவு நனவாகிவிட்டது என்று மொட்டை அடித்துக்கொண்டார்கள். திரும்பவும் அவர்களோடு போய்ச் சேர்ந்து கொண்டு இப்போது மறுபடியும் மொட்டை அடித்துக் கொண்டார்களாம். மொட்டை அடித்துக் கொண்டுவிட்டு இந்த ஆட்சியை 356-ஐக் கொண்டு வந்து கலைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். திரு. வாஜ்பாய் அவர்கள் இருக்கிறார்களே அவர்கள் விஷயம் தெரிந்தவர்கள். விஷயம் தெரிந்தவர் என்பதால் நான் ஆட்சியைக் கலைக்கமாட்டேன் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று சொல்லக்கூடியவர்களை மக்கள் இனிமேல் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். நாம் என்ன தவறு செய்தோம்? ஜெயின் கமிஷனிலே ஒன்றும் இல்லை. அப்போது கலைத்ததே தப்பு. மீண்டும் நாம் வந்திருக்கிறோம். ஆக எந்தத் தவறுமே இல்லாதபோது, இவ்வளவு விஷயம் தெரிந்தவர்கள் எல்லாம் பாராளுமன்றத்திலே போய்த் தவறானவற்றைக் கூறி இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இனிமேல் ஓட்டுப் போடக்கூட மக்கள்

கஷ்டப்படுவார்கள். 1 வருடம், 1½ வருடம், 2 வருடங்களுக்கு ஒருமுறை தேர்தல் வந்து கொண்டேயிருந்தால் என்ன ஆகும்? நான் சொல்லவில்லை. மக்கள் சொல்கிறார்கள் அக்கா, இனிமேல் யாராவது கலை என்று சொல்லிக்கொண்டு வந்தார்கள் என்றால் நாங்கள் கல்லை விட்டுத்தான் எறிவோம் என்று - இந்த அளவுக்கு நாட்டிலே நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன.

அடுத்து பழைய கலெக்டர், அந்த அம்மாள் மிகவும் நல்ல பெண். கொஞ்சம் விஷயம் தெரிந்தவரும் கூட. அவர்கள் எதிலோ கையெழுத்துப் போடவில்லை என்பதற்காக அவர்கள் முகத்திலே ஆசிட்டை ஊற்றினார்கள். அதைச் சரி செய்வதற்காக, தொடைக்கறியை அறுத்து அவர்கள் முகத்திலே ஒட்டியிருக்கிறார்கள். நான் விஜயா மருத்துவமனைக்குச் சென்று பார்த்தேன். நான் சென்றவுடனேயே அவர்கள் அப்படியே அக்கா என்று என்னைக் கட்டிப்பிடித்து அழுது, நானும் அழுதுவிட்டு வந்தேன். இப்போது அவர்களும் அங்கே சேர்ந்துவிட்டார்கள். இது என்ன கொடுமை? இதுதான் அரசியலா என்று பெண்கள் கேட்டிருக்கிறார்கள். நான் அந்தப் பெண்களிடம் நீங்கள்தானே அவர்களை அழகு என்பீர்கள், அந்த அழகு முகத்திலே இப்போது தொடைக்கறியை அறுத்து ஒட்டியிருக்கிறார்கள் என்று சொன்னதற்கு இப்போது அந்த அம்மாவும் அங்கே சேர்ந்துவிட்டார்களே என்று அந்தப் பெண்கள் கேட்டிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் என்னவோ தட்டக்காட்டிலே பிள்ளைகள் விளையாடுகிற மாதிரி, சின்னப் பிள்ளைகள் வீடுகட்டி விளையாடுகிற மாதிரி, சடுகுடு விளையாடுகிற மாதிரி இருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே இவர்கள் எல்லாம் இப்படிப் பேசுகிறார்கள் என்றால் அது நியாயத்திற்குப் புறம்பாக இருக்கிறது என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அப்போது நாங்கள் எல்லாம் ஆளுகின்ற கட்சி, அந்த இடத்தில் நாங்கள் இருந்தோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே இருப்பார்கள். விடாமல் சொல்வார்கள், மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி என்று. நீங்கள் எந்த நேரம் சொன்னீர்களோ இப்போது மாநிலத்தில் சுயாட்சி வந்துவிட்டது. மத்தியிலே கூட்டாட்சி தான் வருகிறது. நிரந்தர ஆட்சியைக் காணோம். நீங்கள் அப்போது சொன்னது பலித்திருக்கிறது. (குறுக்கீடு) கூட்டணி ஆட்சிதான். கூட்டாட்சி தான் கூட்டணி ஆட்சி. இன்றைக்கு.. (மணியடிக்கப்பெற்றது)





**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டாட்சி என்பது வேறு, கூட்டணி ஆட்சி என்பது வேறு. பல கட்சிகள் சேர்ந்து அமைப்பது கூட்டணி ஆட்சி. கூட்டாட்சி என்பது Federal set-up. அதற்கும், இதற்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, கூட்டணி ஆட்சி என்று சொல்வதற்கு கூட்டாட்சி என்று சொல்லிவிட்டேன். பிறகு இந்த உள்ளாட்சிகளுக்குப் பல அதிகாரங்கள் கொடுக்க வேண்டுமென்று உள்ளாட்சி மன்றங்களிலே பணியாற்றக்கூடியவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இரண்டு செட்-அப் தான் இருக்க வேண்டும். பழைய காலத்தில் நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கும்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே எதிர்க்கட்சியில் இருந்தபோது பஞ்சாயத்து போர்டில் பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அந்தப் பஞ்சாயத்துத் தலைவர்கள் மூலமாக ஒரு சேர்மனைத் தேர்ந்தெடுத்தார்கள்.

இப்போது இடையிலே கவுன்சிலர்கள் என்று வந்த காரணத்தினாலே தான், என்னைப் போன்று மாட்டேன் என்று சொன்னவர்களை எல்லாம் பிடித்துக் கொண்டு போய் போட்டியில்லாமல் கையெழுத்து வாங்கி, சேர்மனாக ஆக்கியிருக்கிறார்கள். அது என்னவோ எனக்குப் பிடிக்கவில்லை. அதற்கு என்ன காரணம் என்று சொன்னால் இப்போது அதிகாரமே கிடையாது. அப்போது 29 அதிகாரங்கள் அன்றைக்கு என்ன இருந்தது? பள்ளிக்கூடத்திற்கு ஆசிரியர்களை நியமிப்பது எல்லாம் யூனியன் கையிலே தான் இருந்தது. பள்ளிக்கூடம் கட்டுவது யூனியன் கையில்தான் இருந்தது. Primary Health Centre-க்கு டாக்டர்கள் நியமிப்பது எல்லாம் யூனியன் கையில்தான் இருந்தது. விவசாய இலாக்காவில் பணியாற்றக்கூடியவர்கள் அத்தனை பேரையும் நியமிப்பது கூட யூனியன் கையில்தான் இருந்தது. இன்றைக்கு எதுவுமே இல்லை. இப்போதுகூட ஒரு கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். 70 இலட்ச ரூபாய் பஞ்சாயத்துக்களுக்குப் போகிறது. மீதம் உள்ளது 30 இலட்ச ரூபாய். அந்த 30 இலட்ச ரூபாயில் 15 இலட்ச ரூபாய் மாவட்டங்களுக்கு; 15 இலட்ச ரூபாய் யூனியன்களுக்கு. முன்பெல்லாம் ஒரு மரியாதைக்காக அந்த வேலைகளைச் செய்தார்கள். ஆனால் இன்றைக்கு கவுன்சிலர்களாக வந்தவர்கள், பஞ்சாயத்திலே பொறுப்புக்கு வந்தவர்கள்

என்ன சொல்கிறார்கள் என்றால், பஞ்சாயத்துத் தலைவருக்கு 300 ரூபாயாம். 5,000 ஓட்டு வாங்கி வெற்றி பெற்று வந்த எங்களுக்கு 200 ரூபாயாம், இது என்ன நியாயம் என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். சேர்மனுக்கு 500 ரூபாய் என்கிறார்கள். நான் வாங்குவதில்லை. ஏனென்றால் நான் இங்கே வாங்குவதாலே சேர்மனுக்கு கொடுக்கிற 500 ரூபாயை நான் வாங்குவதில்லை. நான் வாங்கமாட்டேன் என்று சொல்லிவிட்டேன்.

முற்பகல் 11-05

அந்தப் பஞ்சாயத்து கவுன்சிலர்கள் இருக்கின்ற வரைக்கும், பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு எப்படி 300 ரூபாய் கொடுக்கின்றீர்களோ அதைப்போல அவர்களுக்கும் 500 ரூபாய் என்று கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு வேறு வழியில்லை. நான் அவர்களிடம் என்ன சொல்லியிருக்கிறேன் என்றால், 'நீங்கள் ஒன்றும் நினைக்க வேண்டாம், செக் பவர் எல்லாம் பஞ்சாயத்துக்குத்தான் இருக்கிறது. பஞ்சாயத்துத் தலைவருக்குத்தான் இருக்கிறது, உங்களுக்கு ஒன்றும் இல்லை, நீங்கள் உங்கள் ஏரியாவில் கட்டடம் பற்றி ஏதேனும் வந்தால் அதை யாருக்காவது விட்டு வேலை செய்யச் சொல்லுங்கள்; வேறு மாதிரி நீங்கள் ஆசைப்படக்கூடாது' என்று நான் அந்தக் கவுன்சிலர்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதனால், அவர்களுக்கு வழங்கப்படும் 200 ரூபாய் என்பதை அதிகமாக்கி 500 ரூபாயாக உயர்த்தித்தர ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் உண்மையிலேயே பாராட்டக்கூடிய ஒரு திட்டமாகும். என்னுடைய தொகுதியில் சிருக்காரெட்டி பஞ்சாயத்தை இத்திட்டத்தின் கீழ் எடுத்திருக்கிறேன். அந்தப் பகுதி ரோட்டின் மேல் பகுதியில் இருக்கிறது. சின்னச் சின்ன கிராமங்கள் அதிலே இருக்கின்றன. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் அங்கே செயல்படுத்தப்படுவதால், அந்தப் பஞ்சாயத்தில் ஒரு கூரை வீடுகூட இருக்கக்கூடாது; சாக்கடை வசதி செய்து தரப்பட வேண்டும்; Mini-health Centre உருவாக்கப்பட வேண்டும். இப்போதே 38 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்துவாக இருந்தாலும், ஆதிதிராவிடராக இருந்தாலும், அவர்களின் கூரை வீடுகள் எல்லாம் அகற்றப்படவேண்டும்.





அடுத்து, சென்ற முறை நான் பேசும்போது—சென்ற ஆண்டு—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம், மனப்பூர்வமாக வரவேற்கிறோம். அதுபோல் காமராஜர் மறுமலர்ச்சித் திட்டத்தையும் நீங்கள் கொண்டுவரவேண்டும். அந்தத் தலைவர் என்னைப் போன்ற எத்தனையோ பேர்களை, குப்பை மேட்டிலே கிடந்தவர்களை எல்லாம் ஆளாக்கி இந்தச் சபையிலே உங்கள் முன்னாள் வந்து நின்று பேசுவதற்குரிய வாய்ப்பையும், சுதந்திரத்தையும் வாங்கிக் கொடுத்த காரணத்தினால்தான் என்னைப் போன்றவர்களுக்கு இந்த வாய்ப்பு கிடைத்தது. பணம் செலவாகும் என்று நினைக்காமல், ஒரு தொகுதியிலே இரண்டு யூனியன்களை எடுக்கும்போது, ஒரு யூனியனை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டு, இன்னொரு யூனியனை காமராஜர் மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்லோரும் என்னிடம் கேட்கிறார்கள், ஏன் சொல்லவில்லை என்று கேட்கிறார்கள். அவ்வாறு இல்லை, நான் பேசுகிறேன், தலைவர் அவர்கள் செய்வார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறேன். எனவே, தயவுசெய்து காமராஜர் மறுமலர்ச்சித் திட்டத்தை நீங்கள் அமல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயத்திற்குத் தேவைப்படும் மின்சாரத்தை நாம் இனாமாக வழங்குகிறோம். மின்சாரக் கட்டணம் எவ்வளவு வந்தாலும் அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. அந்தத் தொகையை விவசாயிகள் கட்ட வேண்டாம் என்று சொல்லிவிட்டோம். முதலில் நான்கூட எதிர்த்தேன். சில சமயங்களில் என்னால்கூட மின்சாரக் கட்டணம் கட்டமுடியாமல் போய்விடும். இனாம் மின்சாரம் வந்தது விவசாயிகளுக்குப் பெரிய வரப்பிரசாதமாக இருக்கிறது.

100 ஏக்கர் நிலம் வைத்திருப்பவருக்கும் இனாமாக மின்சாரம் கொடுக்கிறோம். ஆனால் பஞ்சாயத்தில் எரியும் விளக்குகளுக்கு பஞ்சாயத்து யூனியன் மின்சாரக் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கிறது. பஞ்சாயத்தின் வருமானம் ரூபாய் 3000 முதல் 4000 வரைதான் இருக்கிறது. அந்த விளக்குகளுக்கான மின்சாரக் கட்டணத்தை அவர்கள்தான் கட்டவேண்டுமென்று சொன்னால் அவர்கள் எங்கே போவார்கள்? ஆகையினால், தயவுசெய்து பஞ்சாயத்துகளில் எரியக்கூடிய விளக்குகளுக்கும் நீங்கள் இனாம் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று

கேட்டுக்கொள்கிறேன். பலபேர் என்னிடத்தில் சொன்னதைத்தான் நான் இங்கே சொல்லுகிறேன். நான் இனாமாக எதையும் கேட்க மாட்டேன். ஆனாலும் இங்கே நான் சொல்லுகிறேன். அவர்கள் என்னிடம் சொல்லுவது என்னவென்றால், 'வருமானம் இல்லை அக்கா, 300 ரூபாய்தான் வருமானம் வருகிறது. 1000 ரூபாய்தான் வருமானம் வருகிறது. இது பஞ்சாயத்து லைட்டுகளுக்குச் செலுத்துவதற்கே சரியாக இருக்கிறது' என்று சொல்லுகிறார்கள். சில ஊர்களில் லைட்டுகள் எரிவதில்லை. காரணம் பணம் கட்டாததுதான். ஆகவே, தயவுசெய்து, நீங்கள் விவசாயத்திற்கு எப்படி இலவசமாக மின்சாரம் கொடுக்கின்றீர்களோ, அதைப்போல பஞ்சாயத்து யூனியன்களில் எரிகின்ற லைட்டுகளுக்கும் இனாம் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் உங்களை அன்போடும் பணிவோடும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சாரக் கட்டணம் கட்டாத காரணத்தால், மின்சாரத் துறை விளக்குகள் எரிவதை தடுத்திருப்பார்களானால், அது எந்தப் பஞ்சாயத்து என்று விவரமாக எழுதிக்கொடுத்தால் அதுபற்றிப் பரிசிலித்து, ஒருக்கால் முடியவில்லை என்றால் அரசாங்கமே பொறுப்பேற்று அதைச் செய்து கொடுக்க முடியும். அதுபோல் செய்து கொடுத்திருக்கிறோம்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைச் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. பணம் கட்டமுடிவதில்லை என்றாலும், அப்படியே கட்டுவதற்கு வசதி இருக்கிறது என்றாலும், இருக்கின்ற பணத்தை வேறு வகையில் அவர்கள் செலவு செய்துகொள்ளட்டும். எனக்கு 100 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று வைத்துக்கொண்டால் அதற்கு இலவச மின்சாரம் கொடுக்கப்படும் அல்லவா. பிறகு லைட்டுகளுக்கு மட்டும் ஏன் கொடுக்கக்கூடாது? அதேபோல் பஞ்சாயத்து லைட்டுகள் எரிவதற்கு இலவச மின்சாரம் கொடுக்கவேண்டும்.

அடுத்து, கடன் வாங்கியவர்கள் அதைத் திருப்பிக் கொடுக்கக்கூடாது என்று நான் சொல்லமாட்டேன். வாங்கிய கடனைக் கட்டாயம் கட்டியாகவேண்டும். ஆனால் கடந்த 10 ஆண்டுகளாக மழை இல்லாத காரணத்தால் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடனைக் கட்டமுடியாமல் விவசாயிகள் இருக்கிறார்கள். இந்த ஓராண்டுதான்



மழை கொஞ்சம் நன்றாகப் பெய்துகொண்டிருக்கிறது. எனவே, கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்று, 10 ஆண்டுகளாக, 15 ஆண்டுகளாகக் கட்டமுடியாமல் இருப்பவர்களுக்கு, வட்டியை மட்டும் தள்ளுபடி செய்து, அதற்குப் பிறகு 3 ஆண்டுகாலம் அவர்களுக்கு அவகாசம் கொடுத்து, அந்த 3 ஆண்டுகளுக்குள்ளாக கொஞ்சம் கொஞ்சமாக, அசலை மட்டும் வசூலிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

அடுத்து, ஏற்கெனவே நான் பலமுறை இந்தச் சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறேன். அதாவது பெண்களுக்கு வேலைவாய்ப்பினைக் கொடுப்பது பற்றி நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். நாம் 'கிளஸ்டர் சிஸ்டம்' என்ற திட்டத்தைப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்காகக் கொண்டு வந்தோம். அந்தத் திட்டத்தின் மூலமாக ஒரு யூனியனில் 60 பெண்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களில் 30 பெண்களுக்கு இராட்டை நூல் நூற்க பயிற்சி, 30 பெண்களுக்கு நெசவுத் தொழிலில் பயிற்சி அளிப்பது போன்றவையெல்லாம் கொடுக்க ஏற்பாடு செய்தோம். அவர்களின் இந்தப் பணிகளுக்காக கிட்டத்தட்ட ரூ.4 இலட்சம் அளவிற்கு கட்டடங்கள் எல்லாம் கட்டிக் கொடுத்தோம். இந்த மாதிரி 10 இடங்களில் செய்ததில் 600 பேர் வேலை செய்கின்றார்கள். இந்தக் கிளஸ்டர் திட்டத்தை மாநிலம் முழுவதும் அமல்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெண்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு இன்னொரு திட்டம் ஐ.சி.டி.எஸ். திட்டம். அந்தத் திட்டத்தை நிலக்கோட்டையிலே எடுத்தோம். அந்தத் திட்டத்தில் 123 பால்வாடிகளை ஆரம்பித்தோம். அந்த 123 பால்வாடிகளில் ஓர் அமைப்பாளர், ஒரு சமையல்காரர், ஓர் ஆயா என்று நானே போட்டிருக்கின்றேன். நான் Social Welfare Board-ல் மெம்பராக இருந்ததாலே நானே போட்டிருக்கிறேன். எனவே இன்றைக்கு இந்தத் திட்டத்திலே கிட்டத்தட்ட 300, 305 பேர் வேலை பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்தத் திட்டத்தை மாநிலம் முழுவதுமுள்ள 386 யூனியன்களிலும் அமல்படுத்துவீர்களேயானால், எஸ்.எஸ்.எல்.சி மற்றும் பிளஸ் 2 வரைக்கும் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற பெண்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இதனைக் கட்டாயமாகச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பெற்றது)

[திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்] [1998 ஏப்ரல் 3

பிறகு, நீண்டகாலமாக, ஒரு கல்லூரி வேண்டும் என்றும், சிறுமலை அருவித் திட்டத்தைப் பற்றியும் நான் சொல்லாத நாளே கிடையாது. சிறுமலைத் திட்டத்தைப் பற்றிச் சொல்லும் போது 1964-ல் மழை பெய்தபோது அங்கே திருவனந்தபுரம் இரயில் கவிழ்ந்து கிட்டத்தட்ட 310 பேர் இறந்தார்கள். அப்போது நான் சோழவந்தான் கான்ஸ்டிட்யூன்சி எம்.எல்.ஏ. அந்தச் சமயத்தில் அந்தச் சம்பவத்தை இரவோடு இரவாக வந்து பார்த்தேன். அந்தச் சம்பவத்தில் 310 பேர் இறந்தார்கள். இந்தத் திட்டம் இலாபகரமான திட்டமல்ல என்றும், கோடிக்கணக்கில் செலவு ஆகும் என்றும் சொல்கிறார்கள். நாங்கள் காங்கிரஸ் காலத்திலே 10 கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டோம். பிறகு நாங்கள் வெளியே வந்துவிட்டோம். வெளியே போய்ப் பிடிக்க வேண்டும் என்று பார்க்கிறோம் இப்போது 30 வருடங்களாகப் பிடிக்க முடியவில்லை. நாங்கள் இந்த இடத்திலேதான் இருக்கிறோம். எனவே, நீங்கள் அந்தத் திட்டத்தைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய சமூகநலத் துறை அமைச்சர் திருமதி சற்குண பாண்டியன் அவர்கள் கூட கொடைரோட்டிலே டி.பி.-யிலே தங்கியிருக்கின்றார்கள் என்று என்னிடம் சொன்னார்கள். அப்போது மழை பெய்துகொண்டிருந்தது. நான் ஜீப் எடுத்துக்கொண்டு அவர்களைச் சந்திக்க ஓடி வந்தேன். அப்போது வர முடியவில்லை. காரணம் என்னுடைய உயரத்திற்குத் தண்ணீர் வந்துவிட்டது. பஸ் போக முடியவில்லை. ஆள்நடமாட்டம் இல்லை. அவர்களும் டி.பி.-ஐ விட்டு வெளியே வர முடியவில்லை. அரசாங்கம் வட்டிக் கடை நடத்தவில்லை. இலாபநஷ்டம் பார்க்கக் கூடாது. நீங்கள் இந்த சிறுமலைத் திட்டத்தை அமல்படுத்துவீர்களேயானால் நன்றாக இருக்கும். விவசாயிகள் எல்லாம் கஷ்டப்படுகிறார்கள். கிணற்றிலே தண்ணீர் இல்லாமல் மிகவும் வறுமைக் கோட்டிற்குக் கீழே போய்விட்டார்கள். இந்த அணை கட்டப்படுமானால் பல நூற்றுக்கணக்கான கிணறுகளுக்கு Percolation கிடைக்கும். அந்த ஊற்று நீர் கிடைத்தால் அது விவசாயிகளுக்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) பெண்கள் கல்லூரி வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தனியே பார்த்தும் கேட்டேன். பார்க்கலாம், பார்க்கலாம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் 'ஆகட்டும் பார்க்கலாம்' என்பார். நான் வெறும் 'பார்க்கலாம்' என்றுதான் சொல்கிறேன்.



1998 ஏப்ரல் 3] [கலைஞர் மு. கருணாநிதி]

**திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் என்றைக்கு இந்தச் சபைக்குள்ளே நுழைந்தார்களோ அன்றைக்கே இந்தப் பொன்னமாக்காவும் நுழைந்தார். அதற்காகவே, அனுதாபப்பட வேண்டுமல்லவா? எல்லா இடத்திலேயும் ஹை ஸ்கூல் வைத்திருக்கிறேன். என்னுடைய தொகுதியில் 12 ஹாஸ்டல்கள் வைத்திருக்கிறேன். காரணம் நான் ஹாஸ்டலிலே இருந்து படித்தவள். அங்குப் பிள்ளைகள் படித்தால் தெய்வ பக்தி இருக்கும்; உண்மையைப் பேசும்; நியாயத்தைக் கேட்கும், நியாயத்திற்காகப் போராடும் என்று நினைத்து 12 ஹாஸ்டல்களை வைத்திருக்கிறேன் (மணியடிக்கப்பெற்றது) கல்லூரி அமைக்க அங்கே 30 ஏக்கரா நிலம் இருக்கிறது. ஆனால் அரசில் பணப்பற்றாக்குறை காரணமாக கட்டடம் கட்டமாட்டார்கள் என்று நான் சொன்னேன். இந்தக் கல்லூரி அமைப்பது குறித்து செல்லதுரை என்பவரை—அவர் அன்னபாக்கியம் காலேஜ் வைத்து நடத்துகிறார்—போய் பார்த்தேன். அவர் மிகுந்த வசதியானவர்.

அவரைப் போய்ப் பார்த்தவுடனே அவர் 'வாம்மா, வாம்மா' என்று என்னை வரவேற்றார். நான் அவரிடம், அண்ணா, நமது தொகுதியிலே கல்லூரி கட்ட வேண்டும். அனுமதி கொடுக்கமாட்டேன் என்று சொல்கிறார்கள். கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று சொல்கிறார்கள். நீங்கள் உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அதற்கு அவர், 'இந்தாருங்கள் நான் 20 இலட்சம் ரூபாய் கொடுக்கிறேன்' என்று உடனேயே சொன்னார். அதற்கு, நான் அவரிடம், நான் பணம் வாங்க மாட்டேன், நீங்களே வைத்துக்கொள்ளுங்கள், நான் முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி சாங்ஷன் வாங்குகிறேன். சாங்ஷன் வாங்கியவுடன், கல்லூரிக்குக் கட்டடம் கட்டிக் கொடுப்போம். அப்போது, அண்ணனே வந்து அந்த இடத்தைப் பார்த்து, கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னேன்.

முற்பகல் 11-15

அதுபோல, இன்னும் பலபேர் பணம் கொடுத்திருக்கிறார்கள். திரு. ஜே. செல்லத்துரை, பெரியகுளம்—ரூ.20 இலட்சம், டாக்டர் சந்திரபோஸ், மதுரை—ரூபாய் 5 இலட்சம், தனலட்சுமி பேப்பர் மில்ஸ்—ரூபாய் 5 இலட்சம், எம்.எஸ். பாண்டிய நாடார் அண்டு சன்ஸ்—ரூபாய் 3

இலட்சம், திருவாளர்கள் பி.ஆர்.கே. ஜோசப், கதிரேசன், அகஸ்டின்—ரூபாய் 5 இலட்சம், சௌந்தரராஜா மில்ஸ், திண்டுக்கல்—ரூபாய் 5 இலட்சம், பவர் சோப் யூனிட், அம்மையநாயக்கனூர்—ரூபாய் 5 இலட்சம், போஜராஜா டெக்ஸ்டைல்ஸ்—ரூபாய் 5 இலட்சம், வேகவதி கெமிக்கல்ஸ்—ரூபாய் 5 இலட்சம், நிலக்கோட்டை நாடார் உறவின்முறை—ரூபாய் 5 இலட்சம், தியாகராசர் மில்ஸ்—ரூபாய் 5 இலட்சம், சுப்பிரமணிய பிள்ளை, நிலக்கோட்டை—ரூபாய் 50 ஆயிரம், சொர்ணமகால்—ரூபாய் 50 ஆயிரம், பழநி விஜயகுமார் மில்ஸ்—ரூபாய் 5 இலட்சம், அங்கு விலாஸ், திண்டுக்கல்—ரூபாய் 5 இலட்சம், ஆக மொத்தம் ரூபாய் 79 இலட்சம் வந்துவிட்டது. நாங்கள் கட்டடம் கட்டிக் கொடுத்துவிடுகிறோம். இலவசமாக இடம் இருக்கிறது.

Periyar-Vaigai Improvement Scheme-க்காக ஏற்கெனவே கட்டிக் கொடுத்த கட்டடம் சும்மா இருக்கிறது. அதிலே கல்லூரி நடத்தலாம். தயவுசெய்து, கல்வி மானியத்திலே இந்தக் கல்லூரிக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே சொன்ன சிறுமலை அருவித் திட்டத்திற்கும் அனுமதி அளிக்க வேண்டும்.

இங்கே மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இல்லை. எனது தொகுதியில் இரண்டு கண்மாய்களில் வேலைகளைச் செய்வதாகச் சொன்னார்கள். எனது தொகுதி வத்தலகுண்டு யூனியனிலே, தும்மலப்பட்டி அருகில் உள்ள பெரியோடைத் திட்டம். அதற்கு 45 இலட்சம் ரூபாய் சாங்ஷன் பண்ணினார்கள். பள்ளப்பட்டி பஞ்சாயத்திலே அகரம் கண்மாய்த் திட்டத்திற்கு 10 இலட்சம் ரூபாய் சாங்ஷன் பண்ணினார்கள். வேலை நடக்கவில்லை. அதற்குள் மதுரையைச் சுற்றித் தண்ணீர் வந்துவிட்டது.

இப்போது கேள்விப்பட்டேன். யாரோ வந்து கான்டிராக்ட் எடுக்கிறார்களாம். அவர்கள் மிரட்டுகிறார்களாம். 30 சதவீதம் கழித்துக் கொள்ளுங்கள் என்று அவர்கள் மிரட்டுகிறார்களாம். இப்படி ஏதேதோ பேசிக் கொள்கிறார்கள். அதையெல்லாம் விட்டு, இந்தத் திட்டத்தை, 'நமக்கு நாமே திட்டம்' மூலமாக, அந்தப் பகுதிகளிலே இருக்கிற மக்களே செய்துகொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று உங்களை அன்போடு நான் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் புதிய தமிழகம் கட்சியினுடைய கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு முதலிலே நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையில் பல ஆண்டுகாலம் புறக்கணிக்கப்பட்ட குடிநீர், சாலை வசதி, போன்ற திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

அதேபோல, பல்வேறுதரப்பட்ட சமூக மக்களையும் திருப்திப்படுத்தக்கூடிய வகையிலே பல அம்சங்கள் இதிலே நிறைந்திருக்கின்றன.

நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்படுவதில் எனக்கு ஒரு கருத்து உண்டு. இந்த மாநிலத்தில் ஆகட்டும், இந்தியாவிலே இருக்கக்கூடிய வேறு எந்த மாநிலம் அல்லது மத்திய அரசு ஆகட்டும், நிதிநிலை அறிக்கை தயாரிப்பது என்பதை இரகசியமானதாக வைத்துப் பேணக்கூடிய நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது. தமிழக முதல்வர் அவர்கள்கூட, இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு முன்னால், அரசு ஊழியர்களை அழைத்துப்பேசி அவர்களின் கருத்தை அறிந்து, அவர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதேபோல, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய பல்வேறு தரப்புமக்களையும், பல்வேறுதரப்பட்ட வர்க்கத்தினரையும் நிதிநிலை அறிக்கை தயாரிப்பதற்கு முன்பு அழைத்து, அவர்களுடைய கருத்துக்களையும் கேட்டறிந்து, திட்டங்களைத் தீட்டுவதன்மூலமாக, இதை ஒரு வெளிப்படையான நிலைக்குக் கொண்டு வருவதற்கு வாய்ப்பாகவும், அனைத்துத் தரப்பு மக்களையும் அல்லது அவர்களுடைய பிரச்சினைகளையும் கேட்டறிந்து தீர்ப்பதன்மூலமாக, அதற்கெல்லாம் நல்லதொரு தீர்வு கிடைக்கும் என்பது என்னுடைய கருத்தாகும்.

முற்பகல் 11-20

சில வரிவிதிப்புகள், சில வரி விலக்குகள் ஆகியவற்றை மட்டும் ரகசியமாக வைத்துக்கொண்டு, ஒட்டுமொத்தமாக நிதிநிலை அறிக்கைகள்

வெளிப்படையானதாக இருக்க வேண்டுமென்று, இந்த மாமன்றத்தின் வாயிலாக என்னுடைய புதிய தமிழகத்தின் சார்பாகக் கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே, தமிழ்நாடாகாட்டும், இந்தியாவாகட்டும். பொருளாதாரத்திலும். சமூகத்திலும் ஏற்றத்தாழ்வு நிறைந்த சமுதாயமாக இருக்கிறது. ஏற்றதாழ்வு நிறைந்த சமுதாயத்தில் எல்லோருக்கும் ஒரே பார்வை என்பது சமூக நீதியாகாது. இன்னும் கோடீஸ்வரர்களும். அதேநேரத்தில் தெருக் கோடியில் வாழக்கூடிய கோடானகோடி மக்களும் இருக்கக்கூடிய இந்த நாட்டில், தெருக்கோடியில் வாழ்கின்ற மக்களுக்கு ஒரு பார்வையும், கோடீஸ்வரர்களுக்கும், இலட்சாதிபதிகளுக்கும் ஒரு பார்வையும் இருக்க வேண்டும்.

இந்த பட்ஜெட்டில், சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் கழித்தும்கூட இன்னும் விவசாயத் தொழிலாளர்களாக, இன்னும் ஓலை வீடுகளிலே, குடிசை வீடுகளிலே, மண் வீடுகளிலே வாழ்ந்துகொண்டிருக்கக் கூடியவர்களாக உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மிகமிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அதிகமான முன்னுரிமை கொடுக்கப்படவில்லை அல்லது நிதி ஒதுக்கப்படவில்லை என்பது குறித்து என்னுடைய மனம் வேதனைப்படுகிறது. 15,000 கோடி ரூபாய்க்கு மேல் அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த நிதி நிலை அறிக்கையில், கடந்த ஆண்டைக்காட்டிலும் 100 கோடி ரூபாய் அதிகம் என்றாலும்கூட 430 கோடி ரூபாய் மட்டும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கியிருப்பது ஒட்டுமொத்த சதவிகிதம் என்று பார்க்கின்றபோது அது 2.9 சதவிகிதம் மட்டும் தான் வருகிறது. இன்னும் எந்தவிதமான உத்தரவாதமான ஒரு வருமானமும் இல்லாமல் வாடுகின்ற அந்த மக்களுக்கு அதிகமான கவனமும், அதிகமான நிதி ஒதுக்குதலும் செய்வதன் மூலமாகத்தான் அவர்களைப் பொதுவான ஒரு நிலைக்குக் கொண்டுவர முடியும். மற்றவர்களோடு சமநிலைக்குக் கொண்டுவர முடியும். எனவே ஒட்டுமொத்தமான ஜனத்தொகையிலே 18 சதவிகிதத்திற்கு மேலாக வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள், அதைப்போல 20 சதவிகிதத்திற்கு மேலாக வாழ்கின்ற மிகமிகப் பிற்படுத்தப்பட்ட அந்த மக்களுக்கு 2.9 சதவிகிதம் ஒட்டுமொத்தமான தொகையிலே ஒதுக்கியிருப்பது என்பது மிகமிகக் குறைவானது என்பதை நான் இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஆளுநர் உரையின்மீது பேசுகின்றபோது, குறைந்தபட்சம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், ஏழையெளிய மக்களுக்கும், மிகமிகப்





பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் ஒரு 3000 கோடி ரூபாயாவது ஒதுக்குங்கள் என்று கேட்டேன். ஆனால் அப்படி ஒதுக்காதது வேதனை அளிக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, நீண்டநெடு நாட்களாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீட்டில் முறையாக 18 சதவிகிதம் கொடுக்காததன் காரணமாக, பின்தங்கிய நிலை ஏற்பட்டிருக்கிறது. நான் அதுகுறித்து வெள்ளை அறிக்கை கொடுக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். வெள்ளை அறிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமர்ப்பிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

அதைப்போல, அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டபிறகு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவிகித இடஒதுக்கீட்டினை அமலாக்குவதிலே இருக்கக்கூடிய சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், பதவி உயர்வில் இடஒதுக்கீட்டை அமலாக்குவதற்கும் - அமைச்சரவை ஒத்துக்கொண்டபிறகு, நடவடிக்கை இல்லாமல் அந்த முடிவுகள் ஏறக்குறைய 6, 7 மாதங்கள் கிடப்பிலே போடப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன? இது எங்கு, ஏன் தேங்கியிருக்கிறது என்று தெரியவில்லை. இதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் முக்கியத் துவம் தந்து, உடனடியாக உத்தரவிட, இது அரசு ஆணையாக வெளிவர ஆவன செய்வார்கள் என்று நம்புகிறேன்.

கல்லூரிகளில் பயிலுகின்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு, கடந்த ஆண்டு 300 ரூபாய் கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டு அதை 400 ரூபாய் என்று உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் இன்று இருக்கக்கூடிய விலைவாசியினுடைய அடிப்படையில் 400 ரூபாய் என்பது போதாது. குறைந்தபட்சம் 600 ரூபாயிலிருந்து 700 ரூபாய் வரை இருந்தால்தான் மரியாதையாக...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் எழுத்து மூலமாகத் தந்த மனுவில் 500 ரூபாய்தான் கேட்டிருந்தார்கள். நான் 400 ரூபாய் என்று அறிவித்திருக்கிறேன். இப்போது 700 ரூபாய் கேட்கிறார்கள். நல்லகாலம், அவரிடத்திலே எழுத்துமூலமாக அதை வாங்கி வைத்திருக்கிறேன்.

[1998 ஏப்ரல் 3

முற்பகல் 11-25

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை, கோரிக்கை என்பது அதிகமாகக் கேட்பதற்காகச் சொல்வது. (சிரிப்பு). அது, மாணவர்கள் நல்ல முறையிலே உணவு சாப்பிடுவதன் மூலம் அவர்கள் ஆரோக்கியமாக இருப்பதற்கும். அவர்கள் படிப்பிலே கவனம் செலுத்துவதற்கும் உதவிகரமாக இருக்கும். எனவே, நான் எழுத்துபூர்வமாகக் கேட்டிருக்கக்கூடிய அந்த 500 ரூபாயையாவது இந்த ஆண்டு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

அடுத்தது, தமிழ்நாட்டிலே ஒரு கருத்து இருக்கிறது. அது ஒட்டுமொத்தமாகத் திட்டமிட்டுப் பரப்பப்படுகிறதா அல்லது என்ன என்று தெரியவில்லை. அதை தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டு இருக்கின்றேன். காய்கறி விற்கக்கூடியவர்களில் இருந்து கார் விற்பனையாளர்கள் வரையிலும் தமிழ்நாட்டில் பணப் புழக்கம் இல்லை என்ற கருத்து பரப்பப்பட்டு இருக்கிறது. அதற்கு என்ன காரணம்? அதைப் புலனாய்வு செய்து மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் மக்களுக்கும், இந்த மாமன்றத்திற்கும் விளக்க வேண்டும். அந்தப் பணப் புழக்கம் குறைந்ததற்கு என்ன காரணம் என்பதை விளக்கினால்தான் மக்கள் புரிந்து கொள்வதற்கும், அதற்குத் தக்கபடி நடந்து கொள்வதற்கும் வசதியாக இருக்கும் என்று நான் இந்த மாமன்றத்தின் வாயிலாகச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

பல்வேறு அன்றாடப் பொருட்களுக்கு வரிகளைக் குறைத்து இருக்கிறீர்கள். அதேபோல ஆடம்பரப் பொருட்களுக்கும், உடலுக்குக் கேடு விளைவிக்கக்கூடிய பான்பராக் மற்றும் மதுபான வகைகளுக்கும் வரியைக் கூட்டி இருக்கிறீர்கள். அவற்றிற்கு இன்னும்கூடக் கூட்டலாம்; தவறு கிடையாது.

அதேபோல, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குக் கடந்த ஆண்டு ஓர் அறிக்கை கொடுக்கப்பட்டு இருந்தது. சுயநிதிக் கல்லூரிகளிலே பயின்ற மாணவர்கள் பணம் கட்ட முடியாமல் வெளியேறிவிடுகிறார்கள்; எனவே, ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாகவே அந்தத் தொகை கொடுக்கப்படும் என்று அறிவித்து இருந்தாலும்கூட, இந்த ஆண்டு அதற்கு நிதி இந்த பட்ஜெட்டிலே ஒதுக்கப்படாதது ஏன் என்று தெரியவில்லை. *(மணி அடிக்கப்பெற்றது)*



1998 ஏப்ரல் 3] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

அதேபோல, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 20 விடுதிகளும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 22 விடுதிகளும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மாணவர்களுக்கு இந்த ஆண்டு எந்த விடுதியும் ஒதுக்கப்படாதது வேதனைக்குரியது; அவசியம் அவர்களுக்கு விடுதி ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

அதேபோல, என்னுடைய தொகுதியிலே ஒரு கூட்டுறவு நூற்பாலை வேண்டுமென்று தமிழக முதல்வர் அவர்களிடத்திலே எழுத்து பூர்வமாகக் கேட்டு இருக்கிறேன். ஆனால், அதற்கான நிதியோ அல்லது அறிக்கையோ இந்த பட்ஜெட்டிலே இல்லை. அவசியம் முதல்வர் அவர்கள் அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்று ஒரு கேள்விக்கு பதில் அளிக்கின்றபோது, சாதியின் பெயர்களாலே இருக்கக்கூடிய ஊர்களினுடைய பெயர்கள் மாற்றம் என்பது சுலபமான காரியம் அல்ல என்று சொன்னார்கள். சில சாதியினுடைய பெயர்கள் மதிப்போடும், மரியாதையோடும் இருக்கின்றன. ஆனால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பறையர்பள்ளம், சக்கிலியர்பட்டி என்றெல்லாம் இருப்பதை அந்த மக்கள் ஏற்றுக்கொள்ளாத மன நிலை இருக்கிறது. அதேபோல, பச்சேரிகள் என்ற பெயர்கள் இருக்கின்றன. எனவே, அந்தப் பெயர்களையாவது நீக்குவதற்கு முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல, 1989-ஆம் ஆண்டு எஸ்.சி./எஸ்.டி. மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் அடிப்படையில், தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய அந்த நஷ்டஈடுகள் 1989 ஆண்டிலிருந்தே பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்குக் கொடுக்கப்படுவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அதேபோல, 1957-ஆம் ஆண்டு சாதிக் கலவரத்திலே உயிர் நீத்த தியாகி இமானுவேல் சேகரன் அவர்களுக்கு பரமக்குடியிலே ஒரு நினைவுச் சின்னமும், சென்னையிலே ஒரு சிலையும் நிறுவ வேண்டும். 1957 ஆம் ஆண்டிலிருந்து 1998-ஆம் ஆண்டு வரையிலும் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி உயிர்நீத்த அத்தனை தாழ்த்தப்பட்ட மக்களையும் தியாகிகள் என்று அறிவித்து, எப்படி வன்னியகுல மக்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் அறிவித்து இருக்கிறீர்களோ, அதேபோல தாழ்த்தப்பட்ட

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [1998 ஏப்ரல் 3

மக்களுக்கும் அறிவித்து, நிதியினைக் கொடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொகுப்பு வீடுகளுக்கு 27 ஆயிரம் ரூபாய் கொடுத்து இருக்கிறீர்கள். அது போதாது. 10 ஆயிரம் ரூபாயாவது கொடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொண்டு, வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்; நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வீ. தமிழ்மணி.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள், நம்முடைய மக்கள் பற்றிய சிந்தனையின் மூலம் வெளியிட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்து, இந்த நிதிநிலை அறிக்கை அனைத்து மக்களாலும், பத்திரிகைகளாலும், ஆன்றோர்களாலும், சான்றோர்களாலும் பட்டிதொட்டிகளிலிருந்து பட்டணக்கரை வரையிலே பாராட்டைப் பெற்று இருக்கிறது; இந்த நிதிநிலை அறிக்கையிலே என்னுடைய கருத்துகளைச் சொல்ல விழைகிறேன்.

முற்பகல் 11-30

இந்த நிதிநிலை அறிக்கையில் தாய்மார்கள் நெஞ்சமெல்லாம் மகிழத்தக்க வகையில் அவர்கள் அன்றாடம் பயன்படுத்துகின்ற சமையல் எண்ணெய்களுக்கு வரி விலக்கு அளித்திருப்பது உண்மையில் பாராட்டத்தக்க ஒன்று. அதேபோல, மசாலாப் பொருள்களுக்கு வரி குறைத்திருப்பதும் பாராட்டத்தக்க ஒன்று. மேலும், மருத்துவத்திற்குப் பயன்படுத்துகின்ற காசினிக் கீரைக்கு வரி விலக்கு அளித்திருப்பதும் பாராட்டக்கூடிய ஒன்று. அதேபோல, கேளிக்கை பூங்காக்களிலே கேளிக்கை வரியை விதித்து, அதன்மூலம் வருகின்ற வருவாயில் 20 விழுக்காடு ஊராட்சி மன்றங்களுக்கு வழங்குவதன் மூலமாக நலிந்த ஊராட்சிகள் அதனால் பயன் பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

அடுத்து, முக்கியமாக அரசு ஊழியர்களுடைய நலனை எப்போதும் கருத்தில்கொண்ட நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், சொன்னதைச் சொன்னபடி செய்பவர் என்பதை நிரூபிக்கும் வகையில் அவர்களுக்கு 1-1-1996 முதல் முன் தேதியிட்டு மத்திய அரசு ஊழியர்களுக்கு



1998 ஏப்ரல் 3 ] [திரு. வீ. தமிழ்மணி]

இணையான சம்பளம் வழங்கியது மட்டுமல்லாமல், நகர ஈட்டுப்படியும் தந்து, வீட்டு வாடகைப் படியையும் இரட்டிப்பாக உயர்த்தித் தந்திருப்பதால் அனைத்துத் தரப்பு அரசு ஊழியர்களும் இன்றைக்கு மனதாரப் பாராட்டுகின்ற வகையில் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது. அதற்கு அடுத்தபடியாக அவர்களுக்கு நிலுவைத் தொகையிலே ஒரு பகுதி 2 தவணைகளாக வழங்கப்படும் என்று அறிவித்திருப்பதும் பாராட்டத்தக்க ஒன்றாகும்.

அதேபோல சுதந்திரப் பொன்விழா ஆண்டிலே உருவாக்கப்பட்டிருக்கின்ற இந்த சமத்துவபுரம் திட்டம் அனைவராலும் வரவேற்கப்பட வேண்டிய ஒரு திட்டம்.

மேலும், இன்றைக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள 60 வயதைக் கடந்த நெசவாளர்களுக்கு ஓய்வூதியம் 150 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக அனைத்துத் தரப்பாருக்கும், முதியோர்களுக்கெல்லாம் ஓய்வூதியத் தொகை 150 ரூபாய் வழங்கிட ஏற்கெனவே உத்தரவிடப்பட்டிருக்கிறது. இந்த நெசவாளர்களுக்கு வழங்கப்படவிருக்கின்ற இந்த 150 ரூபாயைக் கொஞ்சம் உயர்த்தி 200 ரூபாயாக வழங்க வேண்டும் என்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதிலே கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினர்களாக இருப்பவர்கள் உடனடியாக இந்த உதவித் தொகையைப் பெறுவதற்கு பல இடைஞ்சல்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அவைகளையெல்லாம் நீக்கி, அந்தச் சங்கத்திலே உறுப்பினராக இருந்து 60 வயதைக் கடந்து இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் இந்த உதவித் தொகை உடனடியாகக் கிடைப்பதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டும். அவர்கள், 60 வயதிற்கு மேலும் அந்தச் சங்கத்திலே தொடர்ந்து தொழில் செய்து கொண்டிருந்தாலும், அவர்களுக்கும் இந்த உதவித் தொகையைச் சேர்த்து வழங்குவதற்கு அரசு முன்வரவேண்டுமென்று நான் மனதாரக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தியாகிகளைப் பாராட்டுகின்ற வகையில் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும், மொழிப்போர் வீரர்களுக்கும் உதவித் தொகை உயர்த்தி வழங்குகின்ற இந்த அரசை நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். 1986-ஆம் ஆண்டு சமூக நீதிக்காகப் போராடிய அந்தப் போராட்ட வீரர்களுக்கு இன்றுவரையில் எந்தவிதமான உதவித் தொகையும் வழங்கப்படவில்லை. அதுமட்டுமல்ல, அவர்களுக்கு

உதவித்தொகை வழங்குவதற்கு நிதிநிலையிலே போதிய வசதி இல்லாமல் இருந்தாலும், அவர்களுடைய மன ஆறுதலுக்காகவாவது இந்த அரசு ஒரு வாழ்த்துப் பட்டயமாவது வழங்க முன்வரவேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கைத்தறித் துணிகள் விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடப்பது தொடர்பான பிரச்சினைக்காக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் பலரைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அவர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்காக வழி கண்டிருப்பதற்காக நான் மனதாரப் பாராட்டுகின்றேன்.

அதேபோல, தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தங்கிப் படிக்கின்ற விடுதிகளுக்கு 400 ரூபாய் விடுதிக் கட்டணமாக உயர்த்தி இருக்கிறீர்கள். ஆனால், கல்லூரி விடுதிக் கட்டணம் என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. எங்கள் கிராமத்திலே இருக்கின்ற அந்த விடுதிகளுக்கும் அந்த 400 ரூபாய் பொருந்துமாறு உரிய மாற்றம் கொண்டுவர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, 40 ஆரம்பச் சுகாதார நிலையங்களின் பராமரிப்பைத் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்க இந்த அரசு முயற்சி மேற்கொண்டிருக்கிறது. அதிலே ஒன்றிரண்டை எனது தொகுதியிலிருந்து எடுத்துக் கொள்வதற்கும் இந்த அரசு வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் குறிப்பாக, இந்த ஆண்டு 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற பள்ளி மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும் என்று அறிவித்திருப்பது கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய அனைவருடைய மனமும் மகிழ்கின்ற வகையிலே அமைந்த திட்டம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

இந்த ஆண்டு நம்முடைய தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களுடைய 75-வது ஆண்டு பிறந்தநாள் விழா வருகின்ற காரணத்தால், இந்த ஆண்டு, பள்ளி மாணவர்களுக்கு, வருகின்ற ஜூன் 3-ம் தேதியே, புத்தகங்களை எல்லாம் வழங்க சிறப்பான





ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தொடக்கப் பள்ளிகள் இல்லாத கிராமங்களே இல்லை என்ற நிலைமையை உருவாக்க இன்றைக்கு நம்முடைய அரசு முயற்சி செய்து ஆணை பிறப்பித்திருக்கிறது. இது நம்முடைய அரசு கல்வி மீது கொண்டுள்ள தீராத அக்கறையை வெளிப்படுத்துகிறது. தொழில் துறையிலே பலவகையான திட்டங்களைத் தீட்டி, பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் நியாயவிலைக் கடைகளின் செயல்பாடுகளைச் சுட்டிக்காட்டினால், அவை களையப்படும் என்று அரசு இங்கே திட்டம் தீட்டியிருக்கிறது. தவறு செய்பவர்களை உடனடியாகத் தண்டிக்கின்ற வகையிலே சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய கலைஞர் அவர்கள்—முதல்வர் அவர்கள்—இந்த ஆண்டு ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும், வளர்ச்சி நிதியாக 30 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். தன்னுடைய 75-வது பவளவிழா ஆண்டை முன்னிட்டு ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும், பவளவிழாவை உணர்த்துகின்ற வகையிலே 75 இலட்சம் ரூபாயை தொகுதியின் வளர்ச்சி நிதிக்கு ஒதுக்க வேண்டுமென்று நான் மனதாரக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையை தட்டும் ஒலி)

அடுத்து, இந்தப் பேரூராட்சியில் வாழுகின்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஏழை மக்களுக்கு.....(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, 75-ஐக் குறிக்கின்ற அளவுக்கு, கண்டிப்பாக 75 இலட்சம் ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று உறுப்பினர் குறிப்பிட்டார்கள். நிச்சயமாக 75 என்ற எண்ணிக்கைதான் வரவேண்டுமென்று விரும்புவாரேயானால், 75 ஆயிரமாக அதைக் குறைக்கலாம் என்று நான் கருதுகிறேன். (சிரிப்பு)

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கேட்டேன் என்பதற்காகக் குறைத்து விடாமல், தாங்கள் தொகுதியினுடைய வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு

[திரு. வீ. தமிழ்மணி] [1998 ஏப்ரல் 3

தயவுசெய்து 75 இலட்சம் ரூபாயை வழங்க வேண்டுமென்று வேண்டி, விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

பேரூராட்சியிலே வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஏழை மக்கள் இலவசத் தொகுப்பு வீடுகள் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எப்போதும் சொல்வார்கள் 'பேரூராட்சிகள் எல்லாம் ஊராட்சிகளிலே பெரிய ஊராட்சிகள்' என்று. இந்த ஊராட்சிகளுக்கும் வீடு கட்டும் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். அவர்களுக்கு ஐ.ஆர்.டி.பி. திட்டத்திலே கடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதேபோல, நகரத்திலே வீடுகட்டி 10 ஆண்டுகள் வாழ்கின்றவர்களுக்கு, சென்ற ஆண்டு மின்சார இணைப்பை வழங்கினீர்கள். இந்த ஆண்டு அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு தாங்கள் அவசியம் உத்தரவு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்களுடைய 75-வது பவளவிழா ஆண்டில், ஜூன் 3-ம் தேதி வருவாய்த் துறை அமைச்சரவர்கள் சுமார் 3 இலட்சம் மக்களுக்கு இலவசப் பட்டா வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் போடப்படுகிற சாலைகள் எல்லாம் உறுதி வாய்ந்ததாக இல்லை. காரணம், அதற்கு ஒரு கிலோ மீட்டருக்கு இவ்வளவு தொகை என்றுதான் ஒதுக்குகிறார்கள். அந்தத் தொகை மூலமாக அந்தச் சாலைகளைச் சரியான முறையிலே, திடம் வாய்ந்ததாகக் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால், குறைந்த நீளம் போட்டாலும், உறுதி வாய்ந்ததாகப் போடுவதற்கு அரசு உத்தரவு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இருபதாயிரம் தெருவிளக்குகளை இந்த ஆண்டு அமைக்க இருப்பதாக இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். ஊராட்சி மன்றங்களுக்குத் தேவையான அனைத்து தெருவிளக்குகளுக்கான செலவை அரசே ஏற்றுக்கொண்டு, அதைப் பராமரிக்கின்ற செலவை மட்டும் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்குவதற்கு முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவதில் பல சிக்கல்கள் ஏற்பட்டு



1998 ஏப்ரல் 3 ] [திரு. வீ. தமிழ்மணி]

இருக்கின்றன. இப்போது டெண்டர் கோரினால்கூட யாருமே இந்த டெண்டரை எடுக்க முன்வருவதில்லை. காரணம், அதிலே விலைப்புள்ளிகளை இரண்டு ஆண்டுகளாகக் குறைத்திருக்கிறார்கள். அதைச் சரி செய்தால்தான், அந்த வேலைகள் உடனடியாக நடப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றிய டெண்டர் பற்றி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஏற்கெனவே ஒருமுறை எல்லோரும் சேர்ந்து இதை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கவேண்டும் என்று கட்டுமுறையாக இருந்து பார்த்தார்கள் சில நாட்கள். நாமும் அதை ஒத்துக்கொள்ளாமல் இருந்து, எல்லோரும் இப்போது ஒப்பந்தத்திறகு வந்திருக்கிறார்கள். ஒப்பந்தம் தாராளமாகக் கொடுக்கப்பட்டு, வேலைகள் எல்லாம் சரியாக நடந்து கொண்டிருக்கின்றன. இதிலே எந்தவிதமான திருத்தமும் தேவையில்லை, என்று அரசு முடிவு எடுத்திருக்கிறது. நிச்சயமாக அதை அமல்படுத்தி, அதிலேயே செய்து விடமுடியும் என்று அரசு நம்புகிறது.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக தேசிய நெடுஞ்சாலைகளை 4 வழிச் சாலைகளாக மாற்றினால் விபத்துக்களைக் குறைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. உதாரணமாக, செங்கற்பட்டிலிருந்து சென்னைக்கு வருகிற சாலையை 4 வழிச்சாலையாக மாற்றிய பிறகு, இன்றைக்கு விபத்துக்கள் வெகுவாகக் குறைந்து இருக்கின்றன. விபத்துக்களே இல்லை என்று சொல்கிற அளவுக்குக் குறைந்து இருக்கின்றன. எனவே தேசிய நெடுஞ்சாலைகளை எல்லாம், கூடிய விரைவில் 4 வழிச் சாலைகளாக மாற்றவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் அடங்கியது செங்கற்பட்டு நகரம். கொசு நகரம் என்றே அதற்குப் பெயர் சொல்லலாம். அந்த

முற்பகல் 11-45

அடுத்து சமூகப் பணிகள். அதாவது **Social Services** என்கிறபோது இதிலே பொதுக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, மருத்துவம், பொதுச் சுகாதாரம், குடும்பநலம், குடிநீர் வழங்கல், துப்புரவு, வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி, ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலன், பிற்படுத்தப்பட்டோர் நலன், சத்துணவு இதுபோன்ற பிற பணிகள் இந்தச் சமூகப் பணிகளின்கீழ் வருகின்றன. ஒப்பீட்டிற்காக இதை ஒப்பிட்டுப் பார்த்தால் 1996-97-லே ஏறக்குறைய 43.3 சதவீதம். 1997-98-லே 42 சதவீதம். இது குறைவு. ஆனால் 1998-99-லே அதாவது இப்போது 43 சதவீதமாக இருக்கிறது. ஒரு சதவீதம் அதிகரித்திருக்கின்றது. சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு.

இதுபோன்று, பொருளாதாரப் பணிகள் என்று எடுத்துக்கொண்டால், ஆகிற செலவு என்பது, உதாரணமாக பயிர் வளர்ப்பு, மண் வளப் பாதுகாப்பு, கால்நடைப் பராமரிப்பு, சாலைகள், பாலங்கள், எரிசக்தி, சிறிய நீர்ப்பாசனம், பெரு நீர்ப்பாசனம், தொழிலும், கனிம வளங்களும், ஊரக வளர்ச்சி, கூட்டுறவு, மீன்வளம், காடு வளர்ப்பு இதுபோன்ற பல இலாக்காக்கள் இதன் கீழ் வருகின்றன. இதற்கு ஆகிற செலவை நீங்கள் பார்த்தால்—நான் ஏற்கெனவே சொன்னது எல்லாம் பொதுப் பணிகள்—7, 8 ஆண்டுகளுக்கு முன்னாலே 57 சதவீதமாக இருந்தது. அதற்குப் பிறகு இது ஆண்டுதோறும் குறைந்து, குறைந்து 1996-97-லே 28.5 சதவீதம். சென்ற ஆண்டு 1997-98-லே ஒதுக்கீடு ரூ.3,118 கோடி. அதாவது 25 சதவீதம். இந்த ஆண்டு 1998-99-லே ரூ.3,540 கோடி இது ஏறக்குறைய 23.5 சதவீதம். பொதுவாக, பெரும்பாலான மக்கள் பயனடையக் கூடிய, கிராமத்திலிருந்து, நகர்ப்புறத்திலிருந்து அனைத்துத் தரப்பு மக்களும் பயனடையக் கூடிய இந்தத் துறைகளுக்குப் போகிற பணம் ஏறக்குறைய 57 சதவீதமாக இருந்தது, ஆண்டுதோறும் குறைந்து, குறைந்து இப்போது 23.5 சதவீதம் என்ற நிலைக்கு வந்து சேர்ந்திருக்கிறது.

அடுத்து உதவி மானியங்கள். அதுகூட ஏறக்குறைய ரூ.120 கோடியாக இருந்தது; ரூ.190 கோடியாக இருந்தது. இப்போது பார்த்தால் ரூ.105.5 கோடி, வேறு வழியில்லை. நீங்களே பட்ஜெட்டிலே அறிவிக்கிறபோது சொல்லியிருக்கிறீர்கள். முன்னுரிமை என்பது சமூக நலத்திட்டங்களுக்குத் தரப்படும் என்று சொல்லியிருப்பதன் அடிப்படையில் தரப்பட்டிருக்கின்ற சலுகைகளை எண்ணிப்பார்க்கிறபோது அதனுடைய அளவும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இவற்றை நான் ஒப்பிட்டுக் காட்டக் காரணம், இதிலே நான் சொன்னமாதிரி முதலில் அந்தப்





பொதுப் பணிகளைத் தவிர்த்து மற்றப் பிரிவுகளிலே, அதிகமாக நிதி ஒதுக்கம் செய்கிற அளவிற்கு நிலைமைகள் வளரவேண்டும். அதுதான் ஒரு நல்ல சமுதாயம் உருவாக, நீங்கள் அன்று சுட்டிக்காட்டியது போல, ஒரு புதிய தமிழகம், நல்ல தமிழகம், வளமான தமிழகம் உருவாக நிச்சயமாக உதவிசெய்யும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-50

அதேபோல, ஆண்டுத் திட்டம் என்று எடுத்துக் கொண்டால்கூட, **Annual Plan** ஒவ்வோர் ஆண்டும் போடப்படுகிறது, சென்ற ஆண்டுத் திட்டத்திலே ரூ. 4,029 கோடியாக இருந்தது. இந்த ஆண்டு, 1998-99-க்கு ரூ. 4,,500 கோடி என்று நம்முடைய மாநில Planning Commission தோராயமாகக் கணக்கிட்டிருக்கிறது. இனிமேல் மத்திய Planning Commission-உடன் பேசி அது முடிவு செய்யப்படவேண்டும். ஏறக்குறைய, நீங்கள் கேட்ட இந்த அளவு தரப்படும் என்று எடுத்துக் கொண்டால்கூட, அது ரூ. 4,500 கோடி. சென்ற ஆண்டு ஒதுக்கிய அந்த ஆண்டுத் திட்டத்திலே, எந்தெந்தத் துறையிலே செலவினங்கள் செய்யப்படாமல் இருந்திருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். குறிப்பாக, மின்சாரம். இப்போது மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. இதிலே 1998-99-என்ற இந்த ஆண்டுக்கு ஏறக்குறைய ரூ. 903 கோடி ஒதுக்கி, இந்த ஆண்டு செலவு செய்யப்படும், முதலீடு செய்யப்படும், இந்த இலாக்காவிலே என்று அறிவித்திருக்கிறீர்கள். அதுபோல், சென்ற ஆண்டு Annual Plan-லே, ஆண்டுத் திட்டத்திலே 1997-98-க்கு ரூ. 871 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது, மாநில Planning Commission-உடைய அப்ரூவலோடு. அதிலே செலவாகயிருப்பது ரூ. 793 கோடி. சென்ற ஆண்டு **Annual Plan**-லே ஆண்டுத் திட்டத்திலே, ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்திலே ஏறக்குறைய ரூ. 78 கோடி செலவு செய்யப்படவில்லை மின்சாரத் துறையிலே என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல, மின்சாரத் திட்டங்களுக்காகப் பணம் ஒதுக்கிய நேரத்தில், நீலகிரி மாவட்டத்திலே மின்சாரத் திட்டங்களை அமல்படுத்துவதற்காக அனுமதி கேட்டபோது, ஃபாரஸ்ட் டிபார்ட்மென்ட் அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள். அங்கே கால்வாய் வெட்டி, அதிலேயிருந்து தண்ணீர்

அளவிற்குக் கொசுக்கள் நிறைந்து இருக்கின்ற நகரமாக இருக்கிறது. அந்தக் கொசுக்களை ஒழிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, செங்கற்பட்டு நகரத்தில் 2 நாட்களுக்கு ஒரு முறைதான் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது. அதுவும் ஒரு நபருக்கு 10 லிட்டர் தண்ணீர்கூடக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. எனவே, உடனடியாக அதை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, திருக்கழுக்குன்றம் நகரத்திற்குப் பேருந்து நிலையம் அவசியம் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது கருத்துக்கள் சொல்கிற வாய்ப்பைத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 1998-99-ஆம் ஆண்டிலே வருவாய்க் கணக்கிலே வரவு சுமார் 15,039 கோடி என்றும், வருவாய்க் கணக்கிலே செலவு 18,048 கோடி என்றும், இதனால் ஏற்படுகிற பற்றாக்குறை 3,008 கோடியாக இருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டிற்கு நிகரப் பற்றாக்குறை என்பது 876 கோடியாக இருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலே, இந்த ஆண்டு சுமார் 340 கோடி ரூபாய்க்குப் புதிய வரிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்மூலம் கூடுதலாக வருவாய் கிடைக்கும். அது நீங்கலாக இறுதிப் பற்றாக்குறை சுமார் 536 கோடி ரூபாயாக இருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 536 கோடி ரூபாய்ப் பற்றாக்குறையை எப்படிச் சரிக்கட்டுவது என்கிறபோது, நிலுவையில் இருக்கிற வரியை முனைப்புடன் வசூலித்தல் மற்றும் சிக்கன நடவடிக்கை மூலம் ஈடுகட்டக் கருதப்பட்டுள்ளது என்று பக்கம் 48-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏறக்குறைய இந்த 540 கோடி ரூபாயை, பழைய பாக்கிகளை வசூல் செய்வதிலேயும், சிக்கன நடவடிக்கைகளின் மூலமாகச் சரிக்கட்டுவதிலேயும், சேமிக்க முடியுமா என்பது நிச்சயமாகக் கேள்விக்குறிதான், சந்தேகம்தான்.

பொதுவாக, அதிகமான பற்றாக்குறை பட்ஜெட் என்பது இந்த மாநிலத்திலேயும் சரி, மத்தியிலேயும் சரி, தொடர்ந்து தரப்பட்டாலும், இப்படி அதிகமான பற்றாக்குறை பட்ஜெட் என்பது, விலைவாசி உயர்வுக்கு வழிவகுக்கும் என்பதுதான் பொருளாதார நிபுணர்களுடைய





கருத்தாகும். கொள்கையாகும். எனவே, கூடியவரை இந்தப் பற்றாக்குறையைக் குறைந்த அளவிலே வைத்திருப்பதற்கு ஒவ்வோர் ஆண்டும், அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

பொதுவாக அரசினுடைய பணத்தைப் பிரித்துச் செலவு செய்கிறபோது, 3, 4 தலைப்புகளில் பிரித்துச் செலவினங்கள் ஒதுக்கப்படுகின்றன. அதிலே பொதுவான பணிகள்—General Services— என்று எடுக்கிறபோது, அதிலே வருபவை, அரசினுடைய அமைப்புகள், வரிவிதிப்புப் பணிகள், நிர்வாகப் பணிகள், ஓய்வு ஊதியம், வட்டி, கடன் போன்ற பணிகள் இதைத் தவிர்க்கவும் முடியாது. அதே நேரத்தில் இந்த trend இப்படிப் போவதும் நல்லதல்ல. உதாரணத்திற்கு, 10 ஆண்டுகளுக்கு முன்னால் ஒப்பிட்டுப் பார்த்தால், இதற்காக இருந்த ஒதுக்கீடு ஏறக்குறைய 25 சதவீதம். அந்த ரேஞ்சில் 8, 10 ஆண்டுகள் பின் நோக்கி நீங்கள் போனால் இந்தப் பொதுவான பணிகள் என்கிற தலைப்பின்கீழ் வந்த ஒதுக்கீடு என்பது அதாவது ஏறக்குறைய 1700 கோடி வெறும் 25 சதவீதமாக இருந்தது. இதுவே 1995-96-லே 35 சதவீதமாகியது. 1996-97-லேயும் ஏறக்குறைய அதே 35 சதவீதம்தான் சென்ற ஆண்டு, 1997-98-ல் ஒதுக்கீடு சுமார் 5076 கோடியாகும். இது சுமார் 40 சதவீதம். இந்த ஆண்டு 1998-99-லே நீங்கள், மத்திய அரசிற்கு இணையான சம்பளம் மாநில அரசு ஊழியர்களுக்கும் வழங்குவது என்ற நிலை வருகிறபோது அதனாலே அது ஏறக்குறைய ரூ. 69,38 கோடியாகி, 46 சதவீதம் ஆகிறது.

ஏறக்குறைய 1990-91-லே அதாவது 8 ஆண்டுகளுக்கு முன்னாலே மொத்த வருவாயிலே நான்கிலே ஒரு பங்கு இந்தப் பொதுப் பணிகளுக்குப் போனது போக சென்ற ஆண்டு—இந்த ஆண்டிற்குமே—6 சதவீதம் அதிகமாகி, மொத்தத்திலே ஏறக்குறைய 15,000 கோடி ரூபாய் என்றால், அதிலே ரூ.7,000 கோடி அளவிற்கு, சுமார் 46 சதவீதம் அளவிற்கு இந்தப் பொதுவான பணிகளுக்கு, சிலரே பயன் அடையக் கூடிய இந்தத் தலைப்பின் கீழே செலவாகிறது. நான் ஏற்கெனவே சொன்னேன் இது தவிர்க்க முடியாதது என்றாலும் ஆண்டுதோறும் இந்த உயர்வு அதிகமாகாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்பதிலே நிதித் துறைச் செயலாளர் மற்றும் அந்தத் துறையின் அதிகாரிகள் கவனமாகப் பரிசீலிக்கவேண்டும். அரசு இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1998 ஏப்ரல் 3

எடுத்து, நீர் மின் திட்டத்தை அதிகப்படுத்த வேண்டும். இன்னும் கூடுதலாக மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டும் என்பது அரசாங்கத்தினுடைய கொள்கை. ஆனால், இடையிலே வன இலாக்கா— ஃபாரஸ்ட் டிபார்ட்மென்ட் வருகின்ற காரணத்தினாலே தடை ஏற்படுகிறது. கால்வாய் வெட்டுவதற்கு அனுமதி கேட்டால் மறுக்கிறார்கள். அவர்கள் சொல்கின்ற காரணம், அங்கே இருக்கக்கூடிய வன விலங்குகளுக்கு எந்தக் காரணத்தை கொண்டும் தீங்கு விளைவிக்கக் கூடாது, அவற்றிற்குத் தொந்தரவு கொடுக்கக்கூடாது. அப்படி ஒரு திட்டம் தீட்டுங்கள் என்கிறார்கள். நாங்கள் படிப்படியாக முதலிலே ஒரு கிலோ மீட்டர் அண்டர்கிரௌண்டிலே தண்ணீர் கொண்டு போகிறோம், அதற்குப்பிறகு அதைத் தூர்த்துவிட்டு, மறுபடியும் இன்னொரு கிலோ மீட்டர் வெட்டுகிறோம் என்று படிப்படியாக அனுமதி கேட்டாலும், நீங்கள் கீழே கால்வாய் வெட்டியும் தண்ணீர் கொண்டு போகக்கூடாது என்று சொல்கிறார்கள். சரி, நாங்கள் எங்கேயோ ஒரு குறிப்பிட்ட இடத்திலே, கால்வாய் வெட்டிக் கொள்கிறோம், அதற்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டால், அதையும் மத்திய அரசாங்கம் மறுத்துக் கொண்டிருக்கிறது. வன இலாக்கா, அதிகபட்சமாக அதற்கு அப்ஜெக்ஷன் செய்கிறது. எனவேதான், அதைமட்டும் இந்த ஆண்டுத் திட்டத்திலே நிறைவேற்ற முடியாமல் இருக்கிறோமே தவிர, நிறைவேற்றக்கூடாது என்பதல்ல. வன இலாக்காவினுடைய சட்ட திட்டங்கள் நம்முடைய திட்டத்தை, கால்வாய் வெட்டுவதை நிறைவேற்றுவதற்கு இடையூறாக இருக்கிறது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தப் புள்ளிவிவரங்களைச் சொல்வதினுடைய நோக்கமே, அமைச்சர்கள் ஒன்றும் செய்ய முடியாது, அமைச்சர்கள் மேற்பார்வைதான் செய்ய முடியும். நீங்கள் அமைச்சராக இருந்தாலும் சரி, யார் அமைச்சராக இருந்தாலும் சரி, ஆண்டவனே அமைச்சராக இருந்தாலும் சரி, சூப்பர்வைஸ்தான் பண்ண முடியும். ஆனால், சம்பந்தப்பட்ட ஒவ்வொரு துறையினுடைய அதிகாரிகளும் ஒதுக்கீடுகளைச் செலவு செய்வதிலே முழுமையாகக் கவனம் செலுத்த வேண்டும் என்று, அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத்தான் இந்தப் புள்ளிவிவரங்களைச் சொல்கிறேன் என்பதை......

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும்.



1998 ஏப்ரல் 3] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

முதலமைச்சர் அவர்கள் அமைச்சர்களுக்கு கடந்த ஆண்டு முதல் என்ன உத்தரவிட்டிருக்கிறார்கள் என்றால், ஒதுக்கிய பணம் முறையாக மாதந்தோறும் விகிதாச்சார அடிப்படையில் செலவழிக்கப்படுகிறதா என்பதை நாங்கள் கவனிக்க வேண்டும்; Review meeting நடத்தவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஏதோ அமைச்சர்கள் சூப்பர்வைஸ் செய்வது மட்டுமல்ல, ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு இலாக்காவிலும், மின்சார இலாக்காவில் மட்டும் நான் சொல்லவில்லை, எல்லா இலாக்காக்களிலும் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றி எல்லாம் நீங்கள் முதலமைச்சருக்கு அறிக்கை தர வேண்டும் என்று சொல்லி, முதலமைச்சர் அலுவலகத்திலே அதை ஆய்வு செய்து, அப்படித் தரப்பட்டு அதில் ஏதாவது குறைபாடு இருக்குமேயானால், சம்பந்தப்பட்ட இலாக்காவைக் கேள்வி கேட்கிறார்கள். இந்த முறையை முதன்முதலாக இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே, அதிகாரிகள் ஏதோ அவர்கள் செலவு செய்யாமல் இருக்கிறார்கள் என்பதல்ல. அமைச்சருக்குத் தெரிந்துதான் ஒவ்வொரு வேலையும் நடைபெறுகிறது. சில அமைச்சர்கள் ஒவ்வொரு முறையும் கேள்வி கேட்டு, விளக்கங்கள் கேட்டும், முடியாத சூழ்நிலையிலேதான் அதை ஒத்திப்போடுகிறோமே தவிர, செலவு செய்யக்கூடாது என்பது அதிகாரியினுடைய நோக்கமும் அல்ல, இந்த அரசாங்கத்தினுடைய நோக்கமும் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன முறை நல்ல முறைதான். நல்ல முறை மட்டும் அல்ல; நல்ல அணுகுமுறையும் கூட; அதை நான் வரவேற்கிறேன். அது இன்னும் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கருத்துக்களைச் சொல்கிறேன். அதேமாதிரி, நடுத்தர, பெரிய தொழில்கள் என்று எடுத்துக்கொண்டால் 1997-98-லே ஒதுக்கீடு—அதாவது நான் சொல்வது ஆண்டுத் திட்டத்திலே—Annual Plan-லே ஒதுக்கீடு ஏறக்குறைய 86 கோடி ரூபாய். அதிலே செலவு செய்யப்பட்டது 75 கோடி ரூபாய். இப்போது 1998-99-லே Tentative-ஆக ஒதுக்கீடு வெறும் 11 கோடி ரூபாய்தான். இது மிகவும் குறைவு என்பதை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1998 ஏப்ரல் 3

அதுபோலச் சில திட்டங்களை, மாநில அரசு, மாநில அரசின் பணத்திலேயே செய்ய வேண்டியிருக்கிறது. சில திட்டங்களை மத்திய அரசு நிறைவேற்றுகின்றது. சில திட்டங்கள் மத்திய அரசு பாதி, மாநில அரசு பாதி என்று, அதாவது 50:50 என்ற அடிப்படையில் நிறைவேற்றப்படுகின்றன. அதிலே மத்திய • அரசும், மாநில அரசும் 50:50 என்று செலவு செய்கின்ற இந்தத் திட்டங்களிலே மாநில அரசு அதிக முன்னுரிமை தந்து, மத்திய அரசினுடைய பணத்தை அதிகமாகப் பெற முயற்சிக்க வேண்டும். ஏனென்றால், நாம் பாதி போடுகிறோம். மீதியை மத்திய அரசுதான் போடுகிறது. எனவே, அதிலே கூடுதலான தொகையை, கூடுதலான திட்டங்கள் மூலமாகப் பெறுவதற்கு மாநில அரசு முயற்சிக்க வேண்டும். ஏனென்றால், இங்கேயே வரிபோட்டு அதிகமான நிதியாதாரங்களைத் திரட்ட முடியாத சூழ்நிலையில் மத்திய அரசிடமிருந்து எவ்வளவு கூடுதலாக நிதியைப் பெறமுடியும், மத்தியத் திட்டங்கள் எவ்வளவு இங்கே நடைமுறைப்படுத்தப்படும் என்பதிலேயும், மத்திய, மாநில அரசுகள் சேர்ந்து செய்கின்ற திட்டங்களிலே எவ்வளவு கூடுதலானவற்றை நாம் பெறமுடியும் என்பதிலேயும் அரசு கவனம் செலுத்த வேண்டும். இதிலே உதாரணத்திற்கு நாம் சொல்ல வேண்டுமென்று சொன்னால் 1997-98-லே ஒதுக்கீடு 22 கோடி ரூபாய் என்றால், செலவு 19 கோடி ரூபாய். பொதுக் கல்வித் தலைப்பின் கீழே ஒதுக்கீடு 23 கோடி என்றால், செலவு 16 கோடி. இது 50:50. மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து செய்கின்ற அந்தத் திட்டத்தின் கீழே வருகின்ற தலைப்பின் கீழே அந்தச் செலவினங்கள் முழுமையாகச் செய்யப்படவில்லை என்பதைத்தான் நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக இவற்றையெல்லாம் இங்கே சுட்டிக்காட்டினேன்.

இன்னொன்று. இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரைக்கும் நான் பத்திரிகையாளர்கள் கேட்டபோதே சொன்னேன். என்னுடைய Criticism என்பது Constructive Criticism-ஆக நல்லவற்றைப் பாராட்டி அல்லது அரசு செய்ய வேண்டிய காரியங்களை எடுத்துச் சொல்லக்கூடிய அந்தப் பணியாக இருக்க வேண்டும் என்று நான் கருதுகிற காரணத்தாலே சொன்னேன். இப்போதும், இந்த பட்ஜெட்டின் மூலயாக, கல்வியிலே, சமூக நலனிலே, சாலைகள் மேம்பாட்டிலே இப்படிப் பலவற்றிலே முன்னுரிமை கொடுத்திருக்கிறீர்கள். இன்னும் சொல்லப் போனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நல்லெண்ணம், அதாவது மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்கிற அந்த நல்லெண்ணம் இருப்பதை, பட்ஜெட்டின் ஒவ்வொரு பக்கத்திலேயும்



1998 ஏப்ரல் 3] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

நான் காண முடிகிறது. ஒவ்வொரு திட்டத்திலேயும் நான் காண முடிகிறது. அதை நான் சொல்வதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

சத்துணவுத் திட்டத்தின் கீழே, குழந்தைகளுக்கு வாரத்திற்கு ஒரு முட்டை வழங்கப்படும் என்று அறிவித்திருப்பதை நான் உள்ளபடியே வரவேற்கிறேன். இதனாலே மாணவர்களும் பயன் அடைகிறார்கள். ஒரு தொழிலும் வளர்கிறது. கோழி வளர்ப்பு, அதை நம்பி வாழ்பவர்கள் என்று இப்படிப் பல்வேறு வகைகளிலே, அதாவது Multi-purpose என்பார்களே, அதுபோல, பல நோக்கு நன்மைகள் அதனாலே ஏற்படுகின்றன. இப்படியெல்லாம் கவனம் செலுத்தி இருக்கிறீர்கள்.

அதிலே ஒன்றே ஒன்று. சென்ற ஆண்டு, அதற்கு முதல் ஆண்டு எல்லாம் சத்துணவுத் திட்டம் என்று வருகின்றபோது, முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம் என்ற வாசகங்கள் இருந்தன. அதற்கு முன்னாலே, இந்தத் திட்டத்திற்கே, 'முதலமைச்சர் சத்துணவுத் திட்டம்' என்று பெயர். அதற்குப் பிறகு செல்வி ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்' என்று கொண்டு வந்தார். கடந்த 5 ஆண்டுகளிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருக்காக அறிவித்த ஒரே ஒரு திட்டம் அதுதான். மற்றபடி ஜெ.ஜெ. நெல்லிலேயிருந்து, சினிமா நகரம் வரை எல்லாவற்றிற்கும் அவர் பெயரைத்தான் அமைச்சர்கள் போட்டி போட்டுக்கொண்டு வைத்தார்கள் அந்தக் காலத்திலே. நாங்கள் சொன்னபோதெல்லாம் யாரும் கேட்கவில்லை. மிகப் பெருந்தன்மையோடு, அதை மாற்ற முடியாத காரணத்தினாலே, அந்த ஒன்றே ஒன்றிற்கு மட்டும், போனால் போகிறார் எம்.ஜி.ஆர். என்று சொல்லி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பெயரை அதற்கு வைத்தார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளிலேயும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டுவரப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டம் என்று அந்த வாசகம் தொடங்கியது. இந்த ஆண்டு பார்த்தால், அது 'சத்துணவுத் திட்டம்' அது என்று மட்டும் இருக்கிறது. எனவே அதிகாரிகள் விட்டிருக்கலாம். எனவே அடுத்த தடவை சேர்க்கிறபோது அதிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருடைய பெயரை இணைத்து, 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருடைய சத்துணவுத் திட்டம்' என்ற அறிவிக்கப்பட வேண்டும் என்று என்னுடைய வேண்டுகோளை நான் இந்த நேரத்திலே வற்புறுத்துகிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. அது காமராஜர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட திட்டம்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது மதிய உணவுத் திட்டம்: இது சத்துணவுத் திட்டம். பெருந்தலைவர் காமராஜர் கொண்டு வந்தது மதிய உணவுத் திட்டம்.

நண்பகல் 12-00

அறந்தாங்கி தொகுதியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சர்க்கரை ஆலை அடுத்த ஆண்டு உற்பத்தியைத் தொடங்கும் என்று அறிவித்ததற்கு நான் என்னுடைய பாராட்டுதல்களையும், வரவேற்புகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த ஆண்டு தொடங்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், மூடிக் கிடக்கின்ற பஞ்சாலைகளைத் திறக்க இந்த ஆண்டு ஒருசில மாதங்களில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் இதுபற்றிச் சொல்லியிருக்கிறேன்.

ஜெகதாப்பட்டினத்தில் சமீபத்தில் தீப்பிடித்து எரிந்து, ஆயிரம் வீடுகள் சாம்பல் ஆகிவிட்டன. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கருணை அடிப்படையில், கூடுதலாக ஒவ்வொரு குடும்பத்திற்கும்—ஏன் என்றால் பலதடவை தீப்பிடித்து எரிந்து மிகப்பெரிய சேதம் ஏற்பட்டிருக்கிறது—ஆயிரம், ஆயிரம் ரூபாய் கருணை அடிப்படையில் தந்தால் ஆயிரம் வீடுகளுக்கும் 10 லட்சம் ரூபாய் தான் வரும். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால், நான் சென்று பார்த்தபோது மிகவும் பரிதாபமான நிலையில் அந்த மீனவக் குடும்பங்கள் எல்லாம் தங்களுடைய உடைமைகளை எல்லாம் இழந்து கஷ்டப்படுகிறார்கள். அங்கே மீன் பிடிக்கிற அந்தத் தொழிலில் ஈடுபட்டு இருக்கிற அந்த மீனவப் பெருமக்களின் குடியிருப்புகளில் இதுபோல் அடிக்கடி தீ விபத்து ஏற்படுகிற காரணத்தால், தீப்பிடிக்காத ஆயிரம் வீடுகள்—ஒரே ஆண்டில் கட்டவில்லை என்றாலும், ஆண்டுக்கு



200, 200 என்கிற மாதிரி எடுத்துக்கொண்டு கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், என் தொகுதியைப் பொறுத்தவரையில் மீமிசையில் ஒரு சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸ் இருக்கிறது. அதற்கு ஒரு கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமையலுக்குப் பயன்படுத்தக்கூடிய எண்ணெய்களுக்கு எல்லாம் வரி நீக்கம் செய்திருக்கிறீர்கள். பாராட்டுகிறேன். வரவேற்கிறேன்.

அதேபோல் கம்ப்யூட்டர். இது கம்ப்யூட்டர் யுகம். இதிலே கணினி மென் பொருட்களுக்கு விற்பனை வரி விலக்குக் கொடுத்திருப்பது மாணவர்களுக்கு உதவும்; கல்வி வளர்ச்சிக்கு உதவும், தொழில் வளர்ச்சிக்கு உதவும். எனவே, காலத்தினுடைய தேவையை அறிந்து வரி விலக்குத் தந்திருக்கிறீர்கள். அதற்காக நான் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புது வரி என்கிறபோது, பூங்காக்களுக்கு செல்பவர்களிடம் 20 சதவீதம் கேளிக்கை வரி வசூலிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைக் கைவிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால், அங்கே போகிறவர்கள் திட்டுவார்கள். காற்று வாங்க பீச்சிற்கு வந்தால் அல்லது பார்க்குக்கு வந்தால் அவர்களுக்கு வரி போடுகிறார்கள் என்று திட்டுவார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கேளிக்கை வரி என்பது, அப்படிப்பட்ட இடங்களில் அவர்களே 10 ரூபாய், 20 ரூபாய் என்று கட்டணம் வைத்து வசூலிக்கிறார்கள். அந்த வசூலின் மீதுதான் வரியே தவிர. அவர்கள் இனாமாக எல்லோரையும் உள்ளே விடுவார்களானால், அவர்கள் யாருக்கும் வரி கிடையாது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, நீங்கள் வரி போடுகிறபோது அவர்கள் என்ன செய்வார்கள் என்றால், ஏற்கெனவே 10 ரூபாய் வாங்கிக்கொண்டு இருந்தவர்கள் இந்த வரியைச் சேர்த்து 12 ரூபாயாகப் போடுவார்கள். நீங்கள் ஓர் உத்தரவு போட்டு ஏற்கனவே எவ்வளவு பணம் வாங்கிக் கொண்டு இருந்தார்களோ, அதைக் கூட்டக் கூடாது என்று அறிவித்தால்

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1998 ஏப்ரல் 3

போதும். ஏன் என்றால், பொதுமக்களிடமிருந்து மேலும் வாங்கக்கூடாது. அவ்வளவுதான். ஏற்கெனவே வாங்கிக் கொண்டு இருக்கிற பணத்தைத்தான் வாங்க வேண்டும். இந்த வரியைச் சேர்த்துக் கூடுதலாக வாங்க ஆரம்பித்தால் பொதுமக்களுக்கு வித்தியாசம் தெரியும், போன தடவை 10 ரூபாய் கொடுத்துவிட்டுப் போனோம், இப்போது 15 ரூபாய் கேட்கிறார்கள், பார்க்குக்கு வந்தால்கூடக் காசு கேட்கிறார்கள் என்று சத்தம் போடுவார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது நல்ல யோசனை, ஏற்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல் ஒன்றிரண்டு பொதுவான பிரச்சினைகள். இப்போது பெற்றோர்கள் எல்லாம் தங்களுடைய குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கிற ஏப்ரல், மே, ஜூன் மாதங்கள் வரப்போகின்றன. இதிலே, தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில், ஆண்டுதோறும் அவர்கள் வாங்குகிற பணத்துக்கு அளவே கிடையாது. அதற்கு ஒரு முறையும் கிடையாது. போன தடவை 3 ஆயிரம் ரூபாய் என்றால், அடுத்த தடவை 5 ஆயிரம் ரூபாய். காலேஜ் ஃபீஸ், ஸ்கூல் ஃபீஸ், இதர ஃபீஸ் என்று போட்டு, 2 ஆயிரம் ரூபாய், 3 ஆயிரம் ரூபாய், 4 ஆயிரம் ரூபாய் என்று சொல்லி, எல்.கே.ஜி.யில் ஆரம்பித்து தனியார் பள்ளிகளில் ஏராளமான பணத்தை வாங்குகிறார்கள். அதிலே ஒரு சீலிங், வரம்பு, கட்டுப்பாடு விதிக்கவேண்டும். ஏற்கெனவே இருந்த பிரைவேட் காலேஜ்களில் எல்லாம் இன்ஜினியரிங் காலேஜ், மெடிக்கல் காலேஜ், இவைகளைப் பொறுத்தவரையில் எல்லாம், கோர்ட்டு வரை போய் ஒரு சிஸ்டம் அதிலே வந்திருக்கிறது. நான் சொல்லுவது சாதாரணப் பள்ளியாக இருக்கிற, பிரைவேட் ஸ்கூலில் வாங்குகிற ஃபீஸ்—அதிலே ஒரு ஒழுங்கு, கட்டுப்பாடு கொண்டு வரவேண்டும். அதிலே அரசு கவனம் செலுத்தவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன் (மணி அடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன்.

அரசாங்கத்தினுடைய வருவாய்க்காக ஒன்றிரண்டு யோசனைகளைச் சொல்லுகிறேன். சினிமா தியேட்டர்களைப் பொறுத்தவரையில், அதிலே எல்லாத் தியேட்டர்களிலும் என்ன செய்கிறார்கள் என்றால் பெரும்பாலும் ஒன்றிரண்டைத் தவிர, 20 ரூபாய் டிக்கட் என்று வைத்துக்கொண்டால், டிக்கட் புக்கில் 20 ரூபாய் என்று அடித்து இருக்கும்; அதை வெளியே 40 ரூபாய்க்கு விற்கிறார்கள். இது எல்லாத் தியேட்டர்களிலும் visible ஆகப் பார்க்கக்கூடியது. இதை நீங்கள் நீங்களே உயர்த்தினால் கூட, அரசாங்கத்திற்கு வருமானமாவது வரும். இது என்ன என்றால் கணக்கில் இல்லாமல், 2 கணக்கு மாதிரி, 20 ரூபாய் டிக்கட்டை 40 ரூபாய்க்கு விற்கிறார்கள் பெரும்பாலான தியேட்டர்களில். இதிலே ஒரு சீலிங் கொண்டு வர வேண்டும், வரம்பு கொண்டு வர வேண்டும், அப்போது அரசாங்கத்திற்கும் வருமானம் கிடைக்கும்.



1998 ஏப்ரல் 3] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

தியேட்டர்களிலும் visible ஆகப் பார்க்கக்கூடியது. இதை நீங்கள் தியேட்டர்களில் அந்த டிக்கட் கட்டணத்தை கட்டுப்படுத்த வேண்டும். தியேட்டர்களில் அந்த டிக்கட் கட்டணத்தை நீங்களே உயர்த்தினால் கூட, அரசாங்கத்திற்கு வருமானமாவது வரும். இது என்ன என்றால் கணக்கில் இல்லாமல், 2 கணக்கு மாதிரி, 20 ரூபாய் டிக்கட்டை 40 ரூபாய்க்கு விற்கிறார்கள் பெரும்பாலான தியேட்டர்களில். இதிலே ஒரு சீலிங் கொண்டு வர வேண்டும், வரம்பு கொண்டு வர வேண்டும், அப்போது அரசாங்கத்திற்கும் வருமானம் கிடைக்கும்.

பிற்பகல் 12-05

இரண்டாவது, பிராந்திக் கடைகளின் ஏலம்—வருடத்திற்கு வருடம் கூடிக்கொண்டே போகிறார்கள். ஏறக்குறைய 1,500 கோடி ரூபாய் அளவிற்கு அதிலே வருமானம் வருகிறது. ஆனால், அரசாங்கத்திற்கு இன்னும் 1,000 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் அதிலேகூட. எப்படியென்றால், எனக்குத் தெரிய, பல பிராந்திக் கடைகளிலே 2 ஏலம் விடுகிறார்கள். ஒன்று, அரசாங்கம் விடுகிற ஏலம். இன்னொன்று, இந்த வியாபாரிகளெல்லாம் சேர்ந்து விடுகிற உள் கூட்டு ஏலம். அதாவது உள் ஏலம். ஒரு சிண்டிகேட் பார்ம் பண்ணிக் கொண்டு செய்கிறார்கள். இதிலே என்ன நடக்கிறது என்றால், எனக்குத் தெரிந்த ஒரு யூனியனிலே 10 பேர் உட்கார்ந்து கொண்டு, இராத்திரியிலே ஏலம் போட்டு, 1 கோடியே 40 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. ஆனால், அரசாங்கத்திற்கு வருவது எவ்வளவு என்றால் 40 இலட்சம் ரூபாய்தான் ஒரு பிராந்திக் கடையிலே.

உதாரணத்திற்கு ஏதாவதொரு பிராந்திக் கடை என்று வைத்துக் கொள்ளுங்களேன்—எனக்குத் தெரிய ஒரு தொகுதியிலே, உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஜெகதாப்பட்டினம் என்று ஒரு இடம் என வைத்துக் கொள்ளுங்கள். அதிகமாக வியாபாரம் நடக்கிற இடம். ஓர் ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு அங்கே கொள்முதல் நடக்கிறது. ஒரு கோடி ரூபாய்க்கு நடக்கிறது. கவர்ன்மெண்ட் ஏலம் அங்கே எவ்வளவு என்றால் 9 இலட்சம் ரூபாய். ஆனால் உள் ஏலம் எவ்வளவுக்கு விடப்பட்டது என்றால், இன்னும் ஒரு 40 இலட்சம் ரூபாய் சேர்த்து 49 இலட்சம் ரூபாய்க்கு இந்த 40 இலட்சத்தை யார், யார் பிரித்துக் கொள்கிறார்கள் என்றால், 10,000 ரூபாய் கட்டி அந்த ஏலம் கேட்பதற்கு—அவர்கள் அப்பொழுதுதான் ஏலம் கேட்கவே உள்ளே விடுவார்கள், ஷெட்யூல் வாங்குவதற்கு; அப்படி 100 பேர் உள்ளே போகிறார்கள். சுமார் 10 பேர்தான் அதிலே புரோக்கர்ஸ்

[திரு. எஸ். திருநாவுக்கரசு]    [1998 ஏப்ரல் 3

மாதிரி—பெரிய ஆட்கள்தான் உட்கார்ந்து கொள்வார்கள். உட்கார்ந்து என்ன பண்ணுகிறார்கள் என்றால், அரசாங்கத்திடம் ஏலம் கேட்க 2 பேரை உள்ளே அனுப்புவார்கள். அதிலே குறைந்தபட்சம் வைத்திருப்பார்கள் அந்த upset price இருக்கிறது அல்லவா. அதிலேயிருந்து கேட்டு மேலே போவார்கள். 1¼ கோடி, 21/2 கோடி என்று இரண்டு பேர் முடிந்துவிட்டு வெளியே வந்துவிடுவார்கள். அதற்கு முதல் நாள் இராத்திரி என்ன நடந்திருக்கும்? அந்தக் கடையில் 12½ இலட்சம் ரூபாய் கிடைக்கும் என்றால் 2½ இலட்சம் ரூபாய் கவர்ன்மெண்ட்டுக்கு; 10 இலட்சம் ரூபாயை அந்த 7 பேர்களும் வாங்கி, யார் யார் எல்லாம் 10,000 ரூபாய் கட்டிப் போய் இருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் பிரித்துக் கொடுத்து விடுகிறார்கள். சில ஊர்களிலே பிரித்துக் கொடுக்கிறார்கள். சில ஊர்களிலே பிரித்தும் கொடுப்பது இல்லை. அந்த 7 பேரும் எடுத்துக் கொள்கிறார்கள், மீதம் ஒரு கோடியை. இப்படி நீங்கள் கணக்குப் பார்த்தால், எனக்குத் தெரிந்து ஏறக்குறைய குறைந்தது 500 கோடி ரூபாய். கலெக்டராக மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஒவ்வொரு இடத்திலேயும் ஏலம் வைத்து, உள்ளே போய்க் கேட்க வேண்டும். இந்த மாதிரி நைட் கூட்டம் இருந்தால் அடித்து விரட்டுங்கள் என்கிறேன். நைட் கூட்டமே போட விடாதீர்கள். அதற்கு மேலே இந்த உள் கூட்டமே, சிண்டிகேட் கூட்டமே நடக்கக் கூடாது. அப்படிச் செய்வீர்கள் என்று சொன்னால், ஏறக்குறைய 1,000 கோடி ரூபாய், குறைந்தது 500 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வருமானம் வரும். ஏனென்றால், இந்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களிலே மீண்டும் டெண்டர் வரப்போகிறது, ஏலம் வரப்போகிறது என்கிற காரணத்தினாலே, முன்கூட்டியே இந்த ஆக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக அதை நான் உங்களிடத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையடிக்கப்பெற்றது)

ஒன்றிரண்டு பாயின்ட்டுகளை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். தொகுதி வளர்ச்சி நிதியைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள்—இது மிக, பெரிய திட்டம். நீங்கள்தான் முதன்முதலாக அறிவித்தீர்கள். அந்த Credit உங்களுக்குத்தான். நாங்கள் எல்லாம் கேட்டால்கூட, கொடுக்க வேண்டுமல்லவா? கேட்பது. எல்லோரும் கேட்கலாம். நீங்கள் கொடுத்தீர்கள். 25 இலட்சம் ரூபாய் கொடுத்தீர்கள். இந்த ஆண்டு 30 இலட்சம் ரூபாய் என்று ஆக்கியிருக்கிறீர்கள். அந்த 30 இலட்சம் என்பதே—அந்த காஸ்ட்டே இன்க்ரீஸ் ஆகியிருக்கும். போன தடவை 25 இலட்சம் ரூபாய்க்கு



1998 ஏப்ரல் 3]    [திரு. எஸ். திருநாவுக்கரசு]

என்ன கட்டினார்களோ, அதைத்தான் 30 இலட்சம் ரூபாய்க்குக் கட்ட முடியும். அதனாலே, தயவுசெய்து முதலமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வேன், 50 இலட்சம் அல்லது 40 இலட்சமாவது, அதாவது குறைந்தது 10 இலட்சமாவது இன்க்ரீஸ் பண்ணிக் கொடுத்தால், அதனால் இன்னுமொரு பத்து ஊர்களுக்கு அதிகமாகச் செய்ய முடியும். 50 இலட்சம் கொடுத்தால்கூடத் தப்பு இல்லை. என்ன நடக்கப் போகிறது? வேலைதானே நடக்கப் போகிறது? எம்.எல்.ஏ.க்கள் போகப் போகிறார்கள்; மனுக்களை வாங்கிக்கொண்டு வந்து, அதிலே என்னவென்று பார்த்து, எந்தெந்த ஊர்களுக்கு, என்னென்ன வேலை என்று கலெக்டரிடத்திலே கொடுக்கப் போகிறார்கள். எம்.எல்.ஏ.வுக்கும் நல்ல பெயர். எல்லா எம்.எல்.ஏ.க்களுக்கும் நல்ல பெயர் வந்தால் அரசாங்கத்திற்கும் நல்ல பெயர். அதனாலே பொதுமக்களும் திருப்தியடைவார்கள். எனவே, 50 இலட்சமாக ஆக்கினால்கூட அதிலே ஒன்றும் தவறு கிடையாது. எனவே, 50 இலட்சமாக உயர்த்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டு பிரச்சினைகள் இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரைக்கும் விடுபட்டுப்போய் இருக்கின்றன. அதிலே முக்கியமானது, விவசாயிகளுடைய நலன். விவசாயிகளைப் பொறுத்தவரையிலும், பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் என்று கிடையாது. எல்லாமே சீலிங்தான். 15 ஏக்கருக்கு மேலே யாரும் வைத்துக்கொள்ள முடியாது. அப்படியிருக்கும்போது, விவசாயிகளைப் பொறுத்தவரைக்கும், விவசாயிகளுடைய நீண்ட காலக் கடன்களைப் பொறுத்தவரையில், ஒன்று சொல்ல விரும்புகிறேன். உற்பத்திச் செலவு, உரம், பூச்சி மருந்து, தொழிலாளர்களுடைய சம்பளம், இவற்றையெல்லாம் கூட்டிப் பார்த்தால், இப்பொழுது பல பேர் கிராமத்திலே சும்மாவே நிலத்தைப் போட்டுவிடுகிறார்கள் விவசாயம் பண்ணாமல். ஆனால் அதை விட்டால் அவர்களுக்கு வேறு பிழைப்பும் கிடையாது. அதனாலே என்ன செய்கிறார்கள் என்றால், எதையாவது உழுதுதான் ஆக வேண்டும்; விதைத்துத்தான் ஆக வேண்டும்; அறுவடை பண்ணித்தான் ஆக வேண்டும். ஆண்டுக்காண்டு கொள்முதல் கூடுகிறது; உற்பத்தி கூடுகிறது; 70 இலட்சம் மெட்ரிக் டன் இருந்தது, இப்பொழுது 90 இலட்சம் மெட்ரிக் டன் ஆனது. அதெல்லாம் உண்மைதான். ஆனாலும்கூட, விவசாயிகள் கடனிலேயும், கஷ்டத்திலேயும் இருக்கிறார்கள் என்பது உண்மை. எனவே, அவர்களுடைய நீண்ட காலக் கடன்களை—யார், யாருக்கோ ரத்துச் செய்கிறோம்,

விவசாயிகளுக்கு ஒரு லிமிட்கூட வைத்துக் கொள்ளுங்கள், 5 ஏக்கர், 10 ஏக்கர், என்ற வகையில் எடுத்துக்கொண்டு இந்த விவசாயிகளுடைய நீண்ட காலக் கடன்களையெல்லாம் ரத்துச் செய்ய வேண்டும்; அதிலே ஒன்றும் தவறு கிடையாது. வருடா வருடம் 10 கோடி, 5 கோடி போனால், அதனாலே பெரிய பாதிப்பு ஒன்றும் அரசாங்கத்திற்கு வந்துவிடாது. ஆகவே, அவர்களுடைய கஷ்டத்தைப் போக்க வேண்டும். அதேபோல, நெல்லுக்குத் தருகின்ற விலையைக் கொஞ்சம் உயர்த்தித் தரவேண்டும். மற்ற விலைகளைக் கட்டுப்படுத்தி, உரம், பூச்சி மருந்து போன்றவற்றின் விலையைக் கட்டுப்படுத்தி, இப்படிச் செய்தால்தான் விவசாயிகள் நிச்சயமாக நல்ல முறையிலே வாழ முடியும். இதிலே அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

அதுபோல, பொது விநியோகத் துறையைப் பற்றிச் சொன்னேன். பொது விநியோகத் துறையிலே, நான் சொன்ன மாதிரி, கூட்டுறவுத் துறை, சிவில் சப்ளைஸ் என்று இப்படிப் பல்வேறு துறைகள் இருப்பதற்குப் பதிலாக தயவுசெய்து ஒரே இலாக்காவாக ஆக்க வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன். திரு. நேரு, இளைஞர். நன்றாக வேலை பார்க்கிறார். அவரிடம் கொடுங்கள். யாரிடம் வேண்டுமானாலும் கொடுக்கலாம். 'Minister for Public Distribution' என்று போட்டு, பொது விநியோகத் துறைக்கு என்று தனி அமைச்சர், தனிச் செயலாளர், தனி இலாக்கா, இப்படிப் போட்டால், இதிலே இருக்கின்ற குறைபாடுகளைக் களைந்து, பொதுமக்கள் அன்பைப் பெறுவதற்கு, பொதுமக்களுக்குத் திருப்தி ஏற்படுத்தக்கூடிய முறையிலே பணியாற்றுவதற்கு வசதியாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, நெசவாளர்கள் பிரச்சினையிலே குழு ஒன்றைப் போட்டிருக்கிறீர்கள். நெசவாளர்கள் போராட்டம் நடக்கிறது. அவர்களுடைய பிரச்சினைக்கும் தீர்வுகாண முயல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை, வேலைவாய்ப்பு. அதையும் நான் வலியுறுத்துகிறேன். 35 இலட்சம் பேர் Employment Exchange-ல் பதிவு செய்திருக்கிறார்கள். இவர்களுக்கு அரசாங்கத்தின் மூலமாக வேலைவாய்ப்புத் தருவதற்கு முடியாது. எந்த அரசாங்கம் வந்தாலும் தர முடியாது. எனவே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம்,



Youth Employment Development Corporation—இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு தருகிற வேலைவாய்ப்பு உதவி நிறுவனம் என்று இப்படி ஏதாவது ஒரு கார்ப்பரேஷன் ஆரம்பியுங்கள். ஆரம்பித்து என்ன செய்யலாம் என்று சொன்னால், ரூ. 10 கோடி, ரூ. 20 கோடி, ரூ. 50 கோடி ரூபாய் ஒதுக்கலாம். 15 ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் இருக்கின்றபோது, ஆண்டுக்கு 50 கோடி ரூபாய் கொடுத்தால் தப்பில்லை. ஆதிதிராவிடர்களுக்குத் தனியாக ஒதுக்கியிருக்கிறீர்கள். அந்தக் கார்ப்பரேஷன் மூலமாகக் கடன் தரப்படும். வங்கிகள் போல் செயல்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். அதை வரவேற்கிறேன். அதேநேரத்தில் பொதுவாக இந்தக் கார்ப்பரேஷனிலிருந்து கடன் பெற்று, தொழில் செய்வதற்கு, ஒரு வருடத்திற்கு 2 இலட்சம் பேரோ, 3 இலட்சம் பேரோ பயன்பெறுவதற்கு, 50 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும். அதில் பல பேர் திரும்பக் கட்டுவார்கள், பல பேர் கட்டாமல்கூடப் போகலாம். இருந்தாலும்கூடப் பரவாயில்லை, நீங்கள் Social Welfare Activities-க்குச் செய்ய வேண்டியதுதான். இல்லையென்றால், வேலையில்லாத பட்டதாரிகள் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகும். படித்தவர்கள் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகும். வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்தவர்களுடைய எண்ணிக்கை கூடிக்கொண்டே போகும். உங்களுக்கே தெரியும், பேரறிஞர் அண்ணா சொன்ன மாதிரி—இது வெடிகுண்டு சீசன். 'படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்கள், மடியிலே கட்டப்பட்ட வெடிகுண்டுகள்' என்று அண்ணா சொன்னார். அந்தமாதிரி, வேலையில்லாமல் இருக்கிறபோது frustration ஏற்படும். தீவிரவாதம் மற்றும் பலவற்றுக்கும் அடிப்படைத் தாயாக இருப்பது வேலைவாய்ப்பு இல்லாத சூழ்நிலை. எனவே, அதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

மின்சாரத் தட்டுப்பாட்டைப் பொறுத்தவரைக்கும் நான் கேள்விப்பட்டது உண்மையா, பொய்யா என்று அமைச்சர்தான் சொல்ல வேண்டும். Real shortage ஏறக்குறைய 700 மெகாவாட் இருக்குமென்று சொல்கிறார்கள். உண்மையான பற்றாக்குறை என்று அறிவிக்கப்பட்டிருப்பது 500 மெகாவாட். ஏற்கெனவே மகாராஷ்டிரத்திலேயிருந்து வாங்குவதைப் பாராட்டுகிறேன். 100 மெகாவாட் வாங்கியிருக்கிறீர்கள். இன்னும் 100 மெகாவாட் வரப்போகிறது. மத்திய அரசிலிருந்து 300 மெகாவாட் தருவதாகச் சொல்லியிருந்தார்கள், இப்போது 95 மெகாவாட் வருகிறது. பாக்கி

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1998 ஏப்ரல் 3

கிட்டத்தட்ட 200 மெகாவாட் வரவில்லை. அதற்குள்ளே போட்டி. நான்தான் வாங்கித் தந்தேன், நான்தான் வாங்கித் தந்தேன் என்று. அதற்குள்ளே போட்டி. வந்து சேருவதற்குள்ளே. அந்தக் Credit-ஐ எடுத்துக் கொள்வதற்காக, நான்தான் தொலைபேசியிலே முதலில் பேசினேன் என்று இது ஒரு பக்கத்திலே நடந்து கொண்டிருந்தது. இதையும் மீறி, இன்றைக்கு ஏறக்குறைய அதிலே அறிவிக்கப்பட்டதிலே, அதாவது 300-லே 100 தான் வருகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. இதிலே இந்த அரசை மட்டும் நான் குறை சொல்லமாட்டேன். நீங்கள் அறிவிக்கிறபோது, 'செயல்படுத்துவதற்குப் பல ஆண்டுகள் ஆகக்கூடிய பெருமிதப் பகட்டான திட்டங்கள் மேற்கொள்ளுவதற்கு முன்னுரிமை தருவதை விடுத்து' என்று பட்ஜெட்டிலே போட்டிருக்கிறீர்கள். அந்த attitude சரியல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். அரசாங்கம் இரண்டிலும் கவனம் செலுத்த வேண்டும். Social Welfare Activities-லும் கவனம் செலுத்த வேண்டும், நீண்ட காலத் திட்டங்களிலும் கவனம் செலுத்த வேண்டும். இரண்டையும் இரண்டு கண்களாகப் பாவிக்க வேண்டும்.

இன்றைக்கு மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதற்கு இந்த அரசு மட்டும் காரணமல்ல. கடந்த 7, 8 ஆண்டுகளாக, நீங்களே சொல்லியிருப்பதைப்போல, 1990-91-க்குப் பின்னாலே, 6, 7 ஆண்டுகளிலே எந்தப் புதிய திட்டமும் தமிழகத்திலே தொடங்கப்படவில்லை. உற்பத்தியைத் தருகிற அளவுக்கு. அதனுடைய பலனை நீங்கள் இப்போது அனுபவிக்கிறீர்கள். மின்சாரப் பற்றாக்குறை உடனடியாக வருவதில்லை. 500 மெகாவாட் பற்றாக்குறை உடனடியாக வருமா? வராது. ஒரு அரசாங்கம் திட்டமிடுகிறபோது, அடுத்த ஆண்டு எவ்வளவு மின்சாரம் தேவை, இன்டஸ்ட்ரியல் சைடாக இருந்தாலும் சரி, டொமஸ்டிக் சைடாக இருந்தாலும் சரி, எவ்வளவு தேவை வரலாம் என்பதை கம்ப்யூட்டரில் கால்குலேட் பண்ணிச் சொல்லிவிடுவார்கள். இவ்வளவு total consumption இருக்கிறது, அடுத்த வருடம் எவ்வளவு தேவைப்படும் என்பதைக் கணக்கிட்டுவிட முடியும். எனவே, இரண்டு ஆண்டு காலம் கழித்து, 3 ஆண்டு காலம் கழித்து, 5 ஆண்டு காலம் கழித்து மின்சாரத் தேவை தமிழகத்திலே எவ்வளவு இருக்கும், அதற்கு நாம் இப்போது திட்டமிட்டால், எப்போது உற்பத்தியைத் தொடங்க முடியும், எப்போது மக்களுக்குப் போய்ச் சேரும் என்று, இதையெல்லாம் ஒரு Long term Planning ஆகப் போட்டால்தான் மின்சாரத் தட்டுப்பாடு, பற்றாக்குறை என்பது இல்லாமல் இருக்குமே தவிர, இதை, சத்துணவில் கோழி முட்டை



1998 ஏப்ரல் 3] [திரு. எஸ். திருநாவுக்கரசு

போடுகிற மாதிரியோ அல்லது வேஷ்டி, சேலை கொடுக்கிற மாதிரியோ பண்ண முடியாது.

பிற்பகல் 12-15

இதிலே கடந்த 5 ஆண்டுகளிலே எந்த முயற்சியுமே நடக்கவில்லை என்பதை ஒத்துக்கொள்கிறேன். இப்போதாவது தொடங்கியிருக்கிறீர்கள். இந்த ஆண்டு 903 கோடி ரூபாய்க்கு திட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள். எனவே, அந்தத் திட்டங்களையெல்லாம் இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள், சீக்கிரமாக முடித்தால் நன்றாக இருக்கும். இன்னும் சொல்லப் போனால், பெரிய ப்ராஜக்ட் என்று இல்லாமல்—20 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்கிற மாதிரி, இப்போது தனியார் எல்லாம் நிறையப் பேர் கேட்கிறார்கள். அவர்களிடம் கொடுத்தால், அவர்கள் லோன் வாங்கி, சீக்கிரம் ஆரம்பித்து விடுவார்கள். 10 பேருக்குக் கொடுத்தோம் என்றால், 200 மெகாவாட் ஆயிற்று. எனவே இந்த மாதிரி, சிறிய தொழிலதிபர்களுக்கு நீங்கள் கொடுத்து, மின்சார உற்பத்திக்கு வாய்ப்பளிக்கலாம் என்பது என்னுடைய கருத்தாகும். (மணியடிக்கப்பெற்றது) ஓரேயொரு நிமிடம்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் கையிலே வைத்துள்ள பேப்பரிலே இருப்பதையெல்லாம் பேசிவிட்டீர்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவை எல்லாவற்றையும் ஒதுக்கிவிடுகிறேன். நேரம் இல்லாமல் போனதாலே இவை எல்லாவற்றையும் ஒதுக்கிவிடுகிறேன். இவை எல்லாவற்றையும் வேண்டாம் என்று விட்டுவிடுகிறேன்.

சத்துணவுத் திட்டத்திலே பணிபுரிகின்ற பணியாளர்களுடைய நீண்ட காலக் கோரிக்கை உள்ளது. அதுபோன்று Village Administrative Officer களெல்லாம் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அவர்களுடைய பிரச்சினை என்னவென்றால், அவர்களுக்கெல்லாம் Promotion-க்கு வாய்ப்பே இல்லாமல் இருக்கிறது. அவர்களுக்கு என்ன செய்யலாம் என்பது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து போர்டைப் பொறுத்தவரையிலே, சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். பஞ்சாயத்து போர்டிலே பிரசிடென்ட், வைஸ்-பிரசிடென்ட் ஆகிய இரண்டு பேர்களுக்கும் Cheque signing power கொடுத்திருக்கிறீர்கள்.

இவைகளையெல்லாம் தயவுசெய்து எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே என்ன பிரச்சினை என்றால், பிரசிடென்ட் ஒரு கட்சி; வைஸ்-பிரசிடென்ட் ஒரு கட்சியாக இருக்கிறார். இப்போதெல்லாம் ஜாதியும் வந்துவிடுகிறது. எதற்கெடுத்தாலும் ஜாதி ஆகிவிட்டது. இது தமிழ்நாட்டினுடைய கொடுமையாகும். தந்தை பெரியார் அவர்கள் எவ்வளவோ போராடியும், இப்போது தமிழ்நாட்டிலே ஜாதி வெறி கூடிப் போய்விட்டது. பிரசிடென்ட் ஒரு ஜாதி; வைஸ்-பிரசிடென்ட் ஒரு ஜாதியாக இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த மாதிரிப் பல்வேறு சூழ்நிலைகளிலே அந்தப் பஞ்சாயத்தில் activities எதுவும் இல்லாமல், அங்கு சண்டை நடந்துகொண்டிருக்கிறது. பிரசிடென்ட் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். பிரசிடென்ட்டுக்கு Cheque signing power கொடுங்கள். அதை சூப்பர் செக் பண்ண வேண்டுமென்றால் பி.டி.ஓ. அல்லது. Extension Officer என—அங்கே பஞ்சாயத்து யூனியனிலே இருப்பவர்களுக்கு அந்தப் பொறுப்பைப் பிரித்துப் பிரித்துக் கொடுங்கள். அதிலே அவர்களும் செயல்படட்டும். வைஸ்—பிரசிடென்ட் யாராலே தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்றால், அந்தக் கமிட்டி மெம்பர்களாலே. நான்கு. ஐந்து பேர் சேர்ந்து வைஸ்–பிரசிடென்டைத் தேர்ந்தெடுப்பார்கள். பிரசிடென்ட் மக்களாலே தேர்ந்தெடுக்கப்படுபவர். அதனாலே பிரசிடென்ட்க்கு Cheque signing power-ஐக் கொடுத்துவிட்டு. அதை சூப்பர் செக் பண்ணும் பொறுப்பை பி.டி.ஓ.. அதாவது. Block Development Officer அளவிலே இருப்பவர்களுக்கு கொடுக்க வேண்டும். இந்த மாதிரி ஏற்பாடு செய்தால்தான் பஞ்சாயத்து (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதிக நேரம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மற்படி முக்கியமான பிரச்சினைகளிலே ஒன்றாக இருப்பது. வெடிகுண்டுகளால் வந்த பாதிப்பு. அது வேறு. இப்போது காவல் துறையை முடுக்கிவிட்டு, தமிழ்நாடு முழுவதும் வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இதை நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். அதிலேயும், தீவிரவாதிகள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், எந்த extremist group ஆக இருந்தாலும் சரி, அவர்களைத் தயவுதாட்சண்யம் இல்லாமல் கைது செய்ய





வேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி எடுத்திருக்கிறீர்கள், வரவேற்கிறேன். அப்படி எடுக்கிறபோது, சில பேர், அப்பாவி மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். அப்படிப் பார்த்தீர்கள் என்றால் யாரையுமே அரெஸ்ட் செய்ய முடியாது. அதிலே இருக்கிற கஷ்டத்தையும் நான் அறிவேன். சந்தேகப்பட்டுக் கைது செய்யக் கூடாது, ஊர்ஜிதமானால்தான் கைது செய்யப்பட வேண்டுமென்றால், யாரையுமே பிடிக்கவே முடியாது. ஆனால், பிடித்துக்கொண்டு வந்ததற்குப் பின்னாலே, அவர்கள் நிரபராதிகள் என்று தெரிந்தால், அவர்களை விட்டுவிடுவதிலே ஒன்றும் தப்புக் கிடையாது.

உதாரணத்திற்கு, எனக்கு 9 பேர் திருச்சி ஜெயிலிலிருந்து எழுதியிருக்கிறார்கள். ஆட்டோ சித்திக், ஜாங்கூர் அலி, ஃபாரூக், நூர் முகம்மது இவர்களெல்லாம் அறந்தாங்கி டவுனிலே உள்ளவர்கள் எங்கள் தொகுதியிலே. அம்மாபேட்டையை சேர்ந்தவர்கள் எம்.எல்.சி. சுஜாவுதீன், ஜாகீர் உசேன், அன்சாரி, இந்த மாதிரி 7, 8 பேர்களை, வாஜ்பாய் பதவியேற்றவுடனே விட்டுவிடுவதாகச் சொல்லி சும்மா கூப்பிட்டுப் போயிருக்கிறார்கள். அவர்களை விட்டு விடாமல் திரும்பக் கொண்டு போய், வெடிகுண்டு வைக்க முயற்சித்தவர்கள் என்று சொல்லி திருச்சி சிறையிலே போட்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் அப்பாவிகள். எனக்கே அவர்களை நன்றாகத் தெரியும். சில பேர் தி.மு.க., சில பேர் எம்.ஜி.ஆர். அண்ணா தி.மு.க. அவர்கள் அனைவரும் தேர்தலில் வேலை பார்த்த ஆட்கள். அவர்கள், "அண்ணா, உங்களுக்கு வேலை பார்த்ததைத் தவிர ஒரு பாவமும் பண்ணவில்லை, நாங்கள் எல்லாம் உள்ளே கிடக்கிறோம். காப்பாற்றுங்கள்", என்று லெட்டர் போட்டிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தருகிறேன். அதை விசாரித்து அவர்களையெல்லாம் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் அனைவரும் இஸ்லாமியத் தோழர்கள், இளைஞர்கள். காழ்ப்புணர்ச்சி காரணமாகவோ அல்லது வேறு மோட்டிவ் காரணமாகவோ, வேறு யாருடைய தூண்டுதல் பேரிலோ, வேறு யாராவது இதுபோன்று கைது செய்யப்பட்டிருந்தால் அவற்றையெல்லாம் விசாரித்து, நிரபராதிகளை நீங்கள் விடுதலை செய்ய முன் வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

முன்னாள் முதலமைச்சர் ஒரு அறிக்கையினைக் கொடுத்திருந்தார், பார்த்தேன். எல்லாப் பத்திரிகைகளிலேயும் வந்திருக்கிறது. தினம்,

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1998 ஏப்ரல் 3

தினம் அறிக்கை. காலை. மதியம். மாலை. இரவு என இந்த மாதிரி ஒரு நாளைக்கு நான்கு முறை தொடர்ந்து அறிக்கைகளையே கொடுத்துக்கொண்டு இருக்கிறார். சாப்பாடு மூன்று வேளை. அறிக்கை ஆறு வேளை என்று இப்படி அறிக்கைகள் விட்டாலும் பாவாயில்லை என்று நாட்டு மக்களும் ஓட்டுப் போடுகிறார்கள். என்ன செய்வது. இது மாதிரி ஆகிவிட்டது. எனவே, இந்த நிலை இருக்கிறது. அவர் ஓர் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார். அது என்னவென்றால், 'சிறையில் இருந்தபடியே செல்ஃபோனில் வெடிகுண்டுத் தீவிரவாதிகளுக்குக் கட்டளை. சிறையில் கூட்டு ஆலோசனை நடத்த அனுமதி.' அது தவறுதான். அவர் சொல்வதும் சரிதான். முன்னாள் முதல்வர் சொல்வது சரிதான். அதையெல்லாம் சிறையில் அனுமதிக்கக் கூடாது. அவர் கண்டித்திருக்கிறார். ஆனால் கண்டித்த பிறகு என்ன சொல்கிறார் என்றால், 'ஒருபக்கம் குண்டுகளைக் கண்டுபிடித்த போலீஸுக்குப் பரிசு, இன்னொரு பக்கம் வெடிகுண்டு ஆசாமிகளுக்குத் துணை போவதாக சிறை அதிகாரிகள் இடமாற்றம். அமைதியை ஏற்படுத்த முதல்வர் அவர்களால் முடியவில்லை. இந்தக் கொடுமை இனியும் தொடர மைய அரசு அனுமதிக்கக் கூடாது' என்று சொல்கிறார். இதிலே அவர் என்ன சொல்கிறார் என்றே எனக்குப் புரியவில்லை. 'ஒரு பக்கம் குண்டுகளைக் கண்டுபிடித்த போலீஸுக்குப் பரிசு. இது தவறு' என்பது முன்னாள் முதல்வருடைய வாதம். 'இன்னொரு பக்கம் வெடிகுண்டு ஆசாமிகளுக்குத் துணை போகிறார்கள்' என்று அவர் சொல்கிறார். 'ஜெயிலில் உட்கார்ந்துகொண்டு செல்ஃபோனில் பேசுகிறார்கள்' என்று அவரே சொல்கிறார். சொல்கிறபோது அவர்களை இட மாற்றம் செய்தால், அந்த இட மாற்றம் செய்வதும் தவறு என்று இன்னொரு பக்கம் சொல்கிறார்.

ஒரு வேளை, குண்டுகளைக் கண்டுபிடித்த போலீஸுக்குச் சிறை. இட மாற்றம், இன்னொரு பக்கம் வெடிகுண்டு ஆசாமிகளுக்குத் துணை போகிறவர்களுக்கு ரொக்கப் பரிசு என்று இப்படிக் கொடுக்க வேண்டுமென்று முன்னாள் முதல்வர் யோசிக்கிறாரா (சிரிப்பு). அவர் அறிக்கையின் மூலமாக என்ன சொல்ல வருகிறார் என்று எனக்குத் தெரியவில்லை.

ஆனால் ஒன்றே ஒன்று தெரிகிறது. வெடிகுண்டுகளைக் கண்டுபிடிப்பதில் ஒரு சிலருக்கு வருத்தம் இருக்கிறது. வெடிக்காமலே கண்டுபிடிக்கிறார்களே, (மேசையைத் தட்டும் ஒலி) ஆங்காங்கே தமிழ்நாட்டில் குண்டுகள் வெடித்து, குழப்பங்கள் வந்தால், எதையாவது



1998 ஏப்ரல் 3] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

சொல்லி இந்த ஆட்சியைக் கலைக்கலாம் என்றும், தமிழ்நாட்டில் பொதுமக்கள் வாழ்வில் அமைதியில்லை என்றும் சொல்லி, மீண்டும் ஆட்சிக்கு வந்து. தன் மேலே, தோழி மேலே இருக்கிற வழக்குகளைத் திரும்பப் பெற்றுகொண்டு விடலாம் என்று நினைக்கிறார்.

ஏனென்றால், இப்பொழுது இருக்கிற எலக்ஷன் கமிஷன் சட்டப்படி, கோர்ட்டில் ஒரு கன்விஷன் வந்தாலே, ஒரு கேஸில் கன்விஷன் வந்தாலே தேர்தலில் நிற்க முடியாது. அதனாலே தேர்தல் வேண்டுமென்ற அவசரம். பிறகு நாள் ஆகிவிட்டால், 3 மாதமோ, 6 மாதமோ ஆகிவிட்டால், 15 கேஸ்களில் 1 கேஸில் கன்விக்ஷன் வந்து விடுமே என்ற பயம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்த பயத்தின் காரணமாக, உடனடியாக சூட்டோடு சூடாகத் தேர்தல் வந்தால், ஜெயித்து வந்து ஒரே ஜி.ஓ.விலே ஸ்பெஷல் கோர்ட்டுகளையெல்லாம் கலைத்து விடலாம். Politically motivated, political vendetta என்று சொல்லி, இந்த கேஸ்களையெல்லாம் ரத்துச் செய்து விடலாம் என்பது அவருடைய ஆசை, கனவு, அதனால் வெடிகுண்டைப் பற்றிச் சில பேர் இப்படி வருத்தப்படுகிறார்கள். எதற்கெடுத்தாலும் அறிக்கை விடுகிறார்கள். ஆகவே, அரசைப் பொறுத்த வரையில் நான் கேட்டுக்கொள்வது, அறிக்கையைப் பற்றியெல்லாம் கவலைப்படாதீர்கள். மத்திய அமைச்சர்கள் வருகிறார்கள். வரட்டும். நல்லது. மத்தியிலே அமைச்சர்களாக இருக்கிறார்கள், பாராட்டுகிறோம். தமிழ்நாட்டுக்கு நல்லது செய்யட்டும். மக்களுக்கு நன்மை செய்யட்டும். அதற்குப் பதிலாக ஜோசியர்களாக வருகிறார்கள். ஜாதகம் கணித்துக் கொண்டு ஜாதகம் பார்ப்பவர்களாக வருகிறார்கள். (சிரிப்பு) ஜாதகம் கணிப்பதை விட்டு, தமிழ்நாட்டு மக்களுக்கு அவர்கள் நன்மை செய்ய முன் வர வேண்டும். எனவே, இவற்றைப் பற்றியெல்லாம் நீங்கள் கவலைப்படாமல், ஏற்கெனவே நான் சொன்ன மாதிரி, வெடிகுண்டுப் பிரச்சினையிலே யார் சம்பந்தப்பட்டிருந்தாலும் சரி, அவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள். நிரபராதிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறி வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

## 4. விதி 110-ன்கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்—தொடர்ச்சி

### தமிழகத்தில் பூண்டி நீர்த்தேக்கத்திற்கு கிருஷ்ணா நதி நீர் வரத்து பற்றிய பொதுப்பணித் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அனுமதி வழங்கப்படுகின்றது. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

*** மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக, ஆந்திர மாநில அரசுகளுக்கிடையே 18-4-1983 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, ஆந்திர அரசினரால் ஸ்ரீசைலம் அணையிலிருந்து ஆண்டுதோறும் 15 டி.எம்.சி. தண்ணீர் எடுக்கப்பட்டு, அதில் 3 டி.எம்.சி. இழப்புப் போக, ஜூலை மாதம் முதல் அக்டோபர் மாதம் முடிய 4 மாதங்களில் 8 டி.எம்.சி.யும் அடுத்த ஜனவரி முதல் ஏப்ரல் முடிய 4 மாதங்களில் 4 டி.எம்.சி.யும், ஆக மொத்தம் 12 டி.எம்.சி. கிருஷ்ணா நீர் தமிழக எல்லையில் தரப்பட வேண்டும்.

அதன்படி, கண்டலேறு பூண்டிக் கால்வாயில் வேலைகள் முடிக்கப்பட்டு, 1996 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 ஆம் நாள் முதல் அக்டோபர் 16ஆம் நாள் வரை மொத்தம் 76.37 மில்லியன் கன அடித் தண்ணீர் வந்து சேர்ந்தது. அதன்பின், பெருமழை, வெள்ளத்தால் ஏற்பட்ட பெரும் சேதங்களைச் சரி செய்து, 1997 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4 ஆம் நாள் மீண்டும் கிருஷ்ணா நீர் தமிழக எல்லைக்கு வந்தது.

ஆந்திர—தமிழக எல்லையில் உள்ள தாமரைக்குப்பம் கிராமத்திலிருந்து கிருஷ்ணா நீர், பூண்டி நீர்த்தேக்கத்திற்கு வந்தடைந்ததை, 16-7-1997 அன்று என்னுடன் பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சி நிறுவனத்தினர் ஆகியோர் வந்து பார்வையிட்டனர்.

4-7-1997 முதல் 23-11-1997 வரை பூண்டி நீர்த்தேக்கத்திற்கு 2.09 டி.எம்.சி. கிருஷ்ணா நீர் வந்து சேர்ந்தது. 1997-ல் பெய்த பருவமழை காரணமாக, பூண்டி, புழலேரி மற்றும் சோழவரம் ஆகிய ஏரிகள் முழு மட்ட அளவிற்கு நிரம்பியதால் கிருஷ்ணா நீர் வரத்து நிறுத்தப்பட்டது.





பிற்பகல் 12-25

இதற்கிடையில் 18-11-1997 அன்று ஐதராபாத்தில் நடைபெற்ற 35ஆவது உயர்மட்டத் தொடர்புக் குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, கண்டலேறு பூண்டிக் கால்வாயில் ஏற்பட்டுள்ள பெரும நீர்க் கசிவினைத் தடுப்பதற்காக ரூ.44.21 கோடி செலவில் Concrete Lining வேலைகள் மற்றும் சீரமைப்புப் பணிகளைச் செய்து முடித்து, ஜூலை 1998-ல் கிருஷ்ணா நீர் சென்னைக்கு மறுபடியும் அனுப்பப்பட முடிவு செய்யப்பட்டது. அதன்படி பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, கண்டலேறு பூண்டிக் கால்வாயில் பல இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

10-3-1998 ஆம் தேதி ஆந்திர மாநிலத் தலைமைச் செயலாளர் கடிதத்தின்படி, ரூ.44.21 கோடி செலவில் கண்டலேறு பூண்டிக் கால்வாயில் நடைபெறும் சீரமைப்பு வேலைகளின் முன்னேற்றம், மேல் மட்ட ஆய்வு செய்யப்பட்டு, கண்டலேறுக் கால்வாயில் முக்கியமான பணிகள் முடிக்கப்பட்டு, ஏற்கெனவே அனுப்பப்பட்ட வினாடிக்கு 300 கன அடி என்பதற்கு மாறாக சீரமைப்புக்குப் பின், வினாடிக்கு 500 கன அடி அளவில் உயர்த்தி, இவ்வாண்டு ஜூலை முதல் வாரத்தில் கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஃதன்னியில், கிருஷ்ணா நதிநீர்க் கால்வாயில் Concrete Lining பணிகளுக்கான ஒப்பந்தங்கள் கோருவதில், சில நடைமுறை மாற்றங்கள் செய்யப்பட்டபோது ஏற்பட்ட காலதாமதத்தினால் வேலைகள் உரிய நேரத்தில் துவங்கப்பட முடியவில்லை. இவ்வேலைகளை முழுவதுமாகச் செய்து முடிக்க 5 மாதங்கள் பிடிக்கும் என்கின்ற காரணத்தினால், அவ்வேலைகள் அடுத்த ஆண்டு நீர் வரத்து அனுப்பப்படாத காலத்தில் செய்யப்படும்.

சென்னைப் பெருநகருக்குக் குடிநீர் வழங்கும் 3 ஏரிகளில் தற்போதைய, 2-4-1998 அன்றைய நிலவரப்படி நீர் இருப்பு விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| பூண்டி | - | 2,006 மி.கன அடி |
| புழலேரி | - | 2,277 மி.கன அடி |
| சோழவரம் | - | 412 மி.கன அடி |

மொத்தம் 4,695 மி. கன அடி [illegible] எம்.சி.

28453.

[திரு. துரைமுருகன்] [1998 ஏப்ரல் 3

இதில் பயன்படுத்த இயலாத அடிமட்ட அளவான 0.7 டி.எம்.சி போக, மீதம் சுமார் 4 டி.எம்.சி. தண்ணீர் விநியோகத்திற்கு உள்ளது. சென்னைக் குடிநீருக்காக புழலேரியிலிருந்து வினாடிக்கு 115 கன அடி தண்ணீர் எடுக்கப்படுகிறது. இந்த அளவின்படி, ஒரு மாதத்திற்கு 376 மி. கன அடி செலவாகும். இத்துடன் ஆவியாதலால் ஏற்படும் இழப்பைச் சேர்த்து 730 மி. கன அடி ஒரு மாதத்திற்கு மொத்தத் தேவையாகும். ஆகவே, இன்றையதினம் இருப்பில் உள்ள 1.00 டி.எம்.சி. நீரைக் கொண்டு 100 நாட்களுக்குக் குடிநீரை வழங்க முடியும். அதாவது, இருக்கின்ற தண்ணீர் ஆகஸ்டு திங்கள் இறுதி வரை வரும்.

போதிய அளவு தண்ணீர் கண்டலேறு நீர்த்தேக்கத்தில் இருக்கின்ற படியால் கிருஷ்ணா நதி நீர் ஒப்பந்தப்படி 1998 ஜூலை முதல் வாரத்தில் தண்ணீர் வழங்க ஆந்திர அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதனையும், நம்மிடம் உள்ள இருப்பையும் கணக்கிட்டுப் பார்த்தால் சென்னை மாநகருக்குக் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை.

**திரு. வி.கே. லட்சுமணன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு Clarification Sir.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: Clarification எதுவும் கிடையாது. விதி 110-ன் கீழான அறிக்கையில் எந்த விவாதமும் கிடையாது.

## 5. வரவு-செலவுத் திட்டம், 1998-99, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. த. பூவேந்தன்.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் நடைபெறும் விவாதத்தில் கலந்து கொண்டு இங்கே பேச வாய்ப்பளித்தற்காக நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-30

இந்த வரவு-செலவுத் திட்டத்தை, 14 வயதில் இருந்து தமிழ்ச் சமுதாயத்திற்காக, தமிழ் மொழிக்காகப் பாடுபடுகின்ற, நாடு முழுக்க பட்டிதொட்டிகளிலும், பட்டணத்திலும் உள்ள அத்தனை மக்களுக்காக அல்லும், பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கின்ற மூதறிஞர் முதலமைச்சர் அவர்கள் 49 ஆவது நிதிநிலை அறிக்கையாக இங்கே



1998 ஏப்ரல் 3] [திரு. த. பூவேந்தன்]

சமர்ப்பித்துள்ளார்கள். இன்றைக்கு, இங்கே இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களும் இந்த நிதிநிலை அறிக்கையின், இந்த 49 பக்க அறிக்கையின் ஒவ்வொரு பக்கத்திலுமுள்ள கருத்துக்களையும் வரவேற்றுப்பேசி அமர்ந்திருக்கிறார்கள். இன்றைக்கு எங்களைப் போன்ற புதியவர்கள் இந்த மாமன்றத்திலே பேசினாலும்கூட, இந்த இயக்கத்தின் ஆரம்பத்திலிருந்து, என்னைப் பெற்றெடுத்த தந்தையும் ஆறு மாதம் தலைவரோடு சிறைத்தண்டனை பெற்றவர். ஆக, கழகத்தில் எங்களை வளர்த்தவர் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள். அந்த அடிப்படையிலே, இந்த மன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தமிழகத்திலே தமிழ் இளைஞர்களின் நெஞ்சங்களிலே வீற்றிருக்கின்ற எங்களுடைய ஆருயிர் அண்ணன், தளபதி அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில், தமிழ்ச் சமுதாயத்திற்காக, 75 ஆண்டு காலம் தன்னையே ஒப்படைத்த, ஒட்டுமொத்தமாக நான் சுமக்கின்றேன் தமிழ் மக்களை, என்ற உயர்ந்த நோக்கங்கொண்ட தமிழக முதல்வர் அவர்கள், பல்வேறு நலத் திட்டங்களை, மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்கின்ற வகையிலே அளித்துள்ளார்கள். அதேபோன்று, கழக அரசில்தான் 1974-ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித்தரப்பட்டன. அதேபோல, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் கல்லூரிகளிலும், தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் சேர்ந்து பயிலுகின்ற ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்.

எனவே, இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்ற ஒட்டுமொத்த தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் அனைவரும், உணர்வுப்பூர்வமாக, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறார்கள். இந்த அரசைப்போல, எந்தவொரு அரசும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்குச் செய்திருக்க முடியாத அளவிற்கு, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக, தமிழக முதல்வர் அவர்கள் திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போலவே, அனைத்துத் தரப்பு மக்களுடைய மேம்பாட்டிற்காகவும் பல்வேறு நலத் திட்டங்களை, குடிநீர் வசதியானாலும் சரி, சாலை வசதியானாலும் சரி, வேலைவாய்ப்பானாலும் சரி, வழங்கியிருக்கிறார்கள். அவற்றைப்பற்றி இங்கே உறுப்பினர்கள் மிகத் தெளிவாகப் பேசியிருக்கிறார்கள். நான்

[திரு. த. பூவேந்தன்] [1998 ஏப்ரல் 3

புதிய கருத்துகளைச் சொல்வதற்கு ஒன்றுமில்லை என்றாலும்கூட. இன்றைக்குத் தமிழகத்திலேயிருக்கின்ற தாய்மார்களெல்லாம் மகிழ்கின்ற வகையிலே அனைத்து எண்ணெய் வகைகளுக்கும் முழுமையாக வரி விலக்கு அளித்திருக்கின்றீர்கள்.

எங்கள் பகுதியிலே கொம்புத் தேன் கிடைக்கும். இன்றைக்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சித்த வைத்தியத்தையும் தெரிந்து வைத்திருப்பார்கள். அந்தக் கொம்புத் தேனிலே பேரீச்சம்பழத்தைப் போட்டு, மார்கழி, தை மாதங்களிலே சீமை ஓட்டின் மேலே வைத்து, பின்பு காலையிலே 6 மணிக்குச் சாப்பிட்டால், அதைவிடச் சத்தான பொருள் இல்லை. அதாவது, கொம்புத் தேனிலே பேரீச்சம்பழத்தை நனைத்து சீமை ஓட்டிலே வைத்தால், அந்தப் பனி நாட்களில், அதில் பனி இறங்கி விடும். அதைச் சாப்பிட்டால், வாய்வு, ஆஸ்துமா போன்ற எல்லாவிதமான நோய்களையும் கட்டுப்படுத்திவிடும். சித்த வைத்தியத்திற்குத் தேவையான மூலிகைப் பொருட்களெல்லாம் எங்கள் பகுதியிலேதான், பழனி பகுதியிலேதான் அதிகமாகக் கிடைக்கின்றன. அங்கேயிருக்கின்ற சாமியார்களெல்லாம் என்னை அடிக்கடி வரச்சொல்லி அதையெல்லாம் எனக்குக் கொடுப்பார்கள். அந்த அடிப்படையிலேதான், நான் சொல்கிறேன். தமிழக மக்களுக்குச் சுவைமிக்க கொம்புத் தேனாக, இந்த வரவு செலவுத் திட்டத்தை தமிழக முதல்வர் அவர்கள் தந்திருக்கிறார்கள்.

அதேபோன்று, எங்கள் தொகுதியைப்பற்றி நான் சொல்ல விரும்புவது —மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், எங்களுக்கெல்லாம் பேசுவதற்கு 10 நிமிடங்கள் கொடுப்பதே மிகவும் கடினம்—பழனி தொகுதியில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழனி தொகுதியில் இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. ஒன்று, பழனி ஊராட்சி ஒன்றியம். இன்னொன்று, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம். அந்தத் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலே 10 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அந்த 10 பஞ்சாயத்துக்களிலே ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் 10 கிராமங்கள், 12 கிராமங்கள் இருக்கின்றன. அங்கே, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலே, பசுவதிபுத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அது ஆரம்பிக்கப்பட்டு, ஊராட்சி ஒன்றியத்திடம்



1998 ஏப்ரல் 3] [திரு. த. பூவேந்தன்]

ஒப்படைத்துவிட்டார்கள். அன்றிலிருந்து இன்று வரை அந்தத் திட்டம் முழுமையாகச் செயல்படவில்லை. அந்த ஒன்றியத்திற்கு கட்டுப்பட்ட 9 ஊர்கள் இருக்கின்றன. இந்த ஆண்டு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதைமாற்றி, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டுகோளாக வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-35

அதேபோல், பழனி பகுதியில் ஆயிரக்கணக்கான வாகனங்கள் வந்து செல்கின்றன. அது புண்ணியஸ்தலமாக இருக்கின்ற பகுதி. ஆண்டுக்கு மூன்று முறை, பேருந்து நிலையத்தை மாற்றி மாற்றி, அதுவும் பங்குனி உத்தரத் திருவிழா நடைபெறுகின்ற இந்தக் காலகட்டத்திலேகூட பேருந்து நிலையத்தை மாற்றி விட்டார்கள். இந்த நிலையைப் போக்குவதற்கும் இந்த ஆண்டு பேருந்து நிலையத்தை விரிவாக்க வேண்டுமென்றும் அதேபோல் பழனியில் புறவழிச் சாலைத் திட்டத்தை இந்த ஆண்டு நிறைவேற்ற வேண்டுமென்றும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிடத்திலே பேசி முடித்து விடுகிறேன். அதேபோல், பழனியில் உள்ள பச்சையாறு ஸ்கீம். முதலமைச்சர் அவர்களுடைய காலத்திலேதான், அந்தத் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு, மதிப்பீடும் தயாரிக்கப்பட்டது. 1989 ஆம் ஆண்டு 13 கோடி ரூபாய் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, கழக அரசு கலைக்கப்பட்டதற்குப் பின்னாலே, அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

இன்றைக்கு, மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தாயுள்ளத்தோடு கேட்பவர்களுக்குக் கொடுக்கின்ற எண்ணம் உள்ள காரணத்தினால், இந்த ஆண்டே, பழனியில், பச்சையாறு அணைக் கட்டைக் கட்டித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அணையைக் கட்டுவதன் மூலம் கிட்டத்தட்ட நெய்க்காரப்பட்டி பேரூராட்சி, காவலப்பட்டி, பாப்பம்பட்டி, லட்சுமணாபுரம், பொந்துக்குளி, தாதநாய்க்கன்பட்டி, கிருஷ்ணாபுரம், சுரடிக்கோட்டம், லட்சரப்பட்டி, சுக்கவனாய்க்கன்பட்டி என்ற பல்வேறு கிராமங்கள் பயன்பெறுகிற வகையிலும் கிட்டத்தட்ட 5,000 ஏக்கர் பயன்பெறும் வகையிலும் இருக்கும், ஆகவே, அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றி கூறி முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட்டில் பேச வாய்ப்புக் கொடுத்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன்.

தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, தொகுதி மேம்பாட்டிற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ரூ.30 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். இது போதாது. ஏனென்றால், சில தொகுதிகளிலே, 2 ஒன்றியங்கள், 3 ஒன்றியங்கள், நகராட்சிகள் எல்லாம் வருகின்றன. ஓர் இடத்திலே கொடுத்துவிட்டு, இன்னோர் இடத்திலே கொடுக்கவில்லை என்றால், எதிர்க்கட்சிக்காரர்களோ, நமக்கு வேண்டாதவர்களோ தூண்டிவிட்டு, 'பார், அந்த ஒன்றியம்தான் பிடிக்கிறது, இந்த நகராட்சிதான் பிடிக்கிறது' என்று இழுத்துவிட்டு வேடிக்கை பார்த்திருப்பார்கள். முழுவதும் சண்டைக்காடாக ஆகிவிடும். ஆகையினால், நீங்கள் இதைக் கொடுத்தும் உங்களுக்குக் கெட்ட பெயர்தான் வருகிறது. ஒன்று, முழுவதையும் எடுத்து விடுங்கள்; கொடுக்கவே வேண்டாம்; கொடுப்பதாக இருந்தால், தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல; அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் அடிப்படையில், நீங்கள் தொகுதிக்கு ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு நிதி ஒதுக்குகிறீர்கள்; அதை ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒதுக்கினால்தான், அதன்மூலம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அங்குள்ள பொதுமக்களுக்கும் நல்லது செய்ய முடியும். சென்னை கார்ப்பரேஷன் பகுதியிலே அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை எடுத்திருக்கிறீர்கள். மற்ற கார்ப்பரேஷன் பகுதிகளிலேயும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை எடுத்திருக்கிறீர்களா என்பது தெரியவில்லை. அந்தமாதிரி, சென்னைக் கார்ப்பரேஷன்...

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் எடுத்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நிச்சயமாக, அரசின் சார்பில் அதுபோன்ற ஒரு திட்டத்தை எடுக்கவில்லை. மாநகராட்சியேதான் அந்தப் பணியை எடுத்துக்



கொண்டு செயலாற்றுகிறது என்பதை அவருடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அதற்கென்று அரசிடமிருந்து, நீங்கள் முதல்வருடைய மகனாக இருக்கிற காரணத்தினால், விசேஷமாக ஏதாவது நிதி ஒதுக்கீடு செய்வார்கள். அதேமாதிரி மற்ற மாநகராட்சிகளிலும்...

**திரு. மு. க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதல்வருடைய மகனாக அல்ல; மாநகராட்சியினுடைய மேயராக இருந்து அந்தப் பணியை ஆற்றிக்கொண்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-40

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனவே, நகராட்சி மற்றும் கார்ப்பரேஷன் பகுதிகளிலேயும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை அரசு கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, இன்னொன்று. சாதிக் கலவரங்கள் நடந்த காரணத்தால் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மதிப்பிற்குரிய பெரியவர் ஐயா திரு. கருப்பையா மூப்பனார் அவர்களும், சேர்ந்து, சாதிப் பெயரிலுள்ளதும், தேசியத் தலைவர்கள் பெயரிலுள்ளதுமான மாவட்டங்களின் பெயர்களை எல்லாம் எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். தேசியத் தலைவர்கள் எல்லாம் சாதிக்கு அப்பாற்பட்டவர்கள். நம் நாட்டுக்காகப் பாடுபட்ட தேசியத் தலைவர்களையும், சுதந்திரப் போராட்டத் தியாகிகளையும் நாம் மதிக்க வேண்டும். அவர்கள் பெயரிலுள்ள மாவட்டங்களின் பெயர்களை எடுத்துவிட்டீர்கள். மீண்டும் அவற்றை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல அறிஞர் அண்ணா, தந்தை பெரியார், காயிதே மில்லத், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் போன்றவர்கள் எல்லாம் புகழ்பெற்ற தலைவர்களாக இருந்தார்கள். மாவட்டத்திற்கு அவர்கள் பெயர்களை மீண்டும் வைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும். எங்களுடைய காமராசர் மாவட்டம் இப்போது விருதுநகர் மாவட்டம் என்ற பெயரில் இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

[திரு. இரா. தாமரைக்கனி] [1998 ஏப்ரல் 3

அந்த மாவட்டத்தின் தலைநகராக விருதுநகர் இருக்கிறது. அந்தத் தலைநகரத்தை அந்த மாவட்டத்தின் மத்திய பகுதியான திருவில்லிப்புத்தூருக்கு மாற்ற வேண்டும். ஏனென்றால், விருதுநகர் கடைக்கோடியாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீதிமன்றமே கொடுத்த பிறகு, தலைநகரத்தை மாற்ற வேண்டும் என்று பேசுகிறீர்களே, நீங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே சாப்பாட்டு வசதியே இல்லை. Bus Stand ஒன்று கட்டியும் செயல்படாமல் இருக்கிறது. அரசு ஊழியர்கள் குடிதண்ணீர் வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். திருவில்லிபுத்தூரில் அரசு முத்திரைச் சின்னம் மாடலாகக் கொண்ட கோபுரம் இருக்கிறது. அனைத்து வசதிகளும் இருக்கின்றன. தண்ணீர் வசதி இருக்கிறது. மாவட்டத்தின் மையப்பகுதியிலே அமைந்திருக்கிறது. அதனால் திருவில்லிபுத்தூரைத் தலைநகராக ஆக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும். ஆனால், பெருந்தலைவர் காமராசர் பெயரிலேயே மாவட்டம் இருக்கட்டும். காமராசர் மாவட்டம் என்று, நாங்கள் வந்தால்கூட அதை வைக்கத்தான் போகிறோம். நாங்கள் உங்களுக்கு யோசனைதான் சொல்கிறோம். அதேமாதிரி நாங்கள் வந்தால் மதுரைக்கு மதுரை மீனாட்சியம்மன் பெயரைக்கூட வைப்போம் (சிரிப்பு) என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த பட்ஜெட் ஓட்டுப்போட்ட மக்களுக்காக இருக்கிற மாதிரி எனக்குத் தெரியவில்லை. மொத்த வருவாய் 15,039.45 கோடி ரூபாய். அதில் 50 சதவிகிதம் அரசு ஊழியர்களுக்கு நாங்கள் சம்பளமாகக் கொடுக்கிறோம் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். தமிழ்நாட்டிலே அரசு ஊழியர்கள் மிஞ்சி, மிஞ்சிப் போனால் 15, 25 இலட்சத்திற்கு உள்ளேதானே இருப்பார்கள்? (குறுக்கீடு) 13 இலட்சமா? கூடவே சேர்த்து சொல்லிவிட்டுப்போவோமே, அதனால் என்ன ஆகப்போகிறது? மீதி 6 1/2 கோடி மக்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு யார் பட்ஜெட் போடுவது? அவர்களுக்கு என்ன திட்டம் போடுவது? விவசாயிகள், வேலையில்லாத இளைஞர்களுக்கு எந்தத் தொழில் திட்டங்களும் இல்லை. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள், ஆதரவற்றவர்கள் ஆகியவர்களுக்கு நல்ல திட்டங்கள் இல்லை. விவசாய மேம்பாட்டிற்கு எந்தத் திட்டமும் கிடையாது. ஓட்டுப் போட்டதற்காக அவர்களுக்கு நீங்கள் தரும் தண்டனையா இது என்று கேட்க விரும்புகிறேன். அரசு ஊழியர்கள் அரசாங்கத்தைக் காப்பாற்றுவார்களா?



1998 ஏப்ரல் 3] [திரு. இரா. தாமரைக்கனி]

இதை அனுமதிக்க முதுபெரும் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முன்வரலாமா? தி.மு.க.-விற்குக் காலம் காலமாக ஒரு கெட்ட பெயர் உண்டு. என்ன கெட்ட பெயர் என்றால் அரசு ஊழியர்களுக்கு மட்டும் கலைஞர் அள்ளி அள்ளித் தருவார் என்று. அதை இந்த பட்ஜெட் நிரூபித்து விட்டது. ஆகவே, இது ஒரு வழக்கம்போல இந்த பட்ஜெட் நிரூபித்து விட்டது. ஆகவே, இது ஒரு பாரபட்சமான பட்ஜெட் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்போது சட்டம், ஒழுங்கு தமிழ்நாட்டில் சரியாகவே இல்லை. 1997ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சாதிக் கலவரம் நடந்தது. 1998 பிப்ரவரி 14ஆம் தேதி நடைபெற்ற குண்டுவெடிப்புக்கும் அதற்கும் தொடர்பு உண்டு என்று நீங்கள் ஆளுநர் உரையில் சொல்லியிருக்கிறீர்கள். கடந்த நவம்பர் மாதம் தொடங்கிய கலவரத்தை, உரிய முறையில் அடக்காத, இந்த அரசினால்தான், பிப்ரவரி மாதம் குண்டு வெடிப்பு நிகழ்ச்சிகள் நடந்தன என்று நான் இந்த நேரத்தில் கோடிட்டுக்காட்ட ஆசைப்படுகிறேன். இது தி.மு.க அரசினுடைய கையாலாகாத்தனம் என்று சொல்லக்கூட நான் நினைக்கிறேன். சென்னையிலேயிருந்து புறப்படுகிற பாண்டியன், சேரன், ஆலப்புழை போன்ற விரைவு இரயில்களில்கூட குண்டு வைக்கிறார்கள். அது மட்டும் அல்ல, சென்னைக்கு வரவே முடியவில்லை. சூட்கேஸுடன் வந்தால் சூட்கேஸில் ஏதேனும் குண்டு வைத்திருக்கிறானோ, டிபன் கேரியரில் குண்டு வைத்திருக்கிறானோ, சைக்கிளில் குண்டு வைத்திருக்கிறானோ, மோட்டார் பைக்கில் குண்டு வைத்திருக்கிறானோ என்று மனிதன் தினம், தினம், செத்து, செத்துப் பிழைக்கக்கூடிய சூழ்நிலைதான் தமிழ்நாட்டில் இன்றைக்கு இருக்கிறது. அதற்கு முற்றுப்புள்ளி வைக்கிற அளவிலே, இன்றைக்குக் காவல் துறையை டாக்டர் கலைஞர் அவர்கள் முடுக்கிவிட்டிருக்கிறார்கள். இதை முன்கூட்டியே செய்திருந்தால் எப்படி இருந்திருக்கும்? டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்னால், காவல் துறையினர் குண்டுகளை எடுக்கிறார்கள். டாக்டர் கலைஞர் அவர்கள் ஒன்றும் சொல்லவில்லையென்றால், குண்டுகள் வெடித்துக் கொண்டே இருக்கின்றன. இந்த நிலையில் எப்போதுமே போலீசுக்கு நல்ல அதிகாரத்தைக் கொடுத்து, எப்போதும் அவர்கள் Straight Forward ஆக இருந்து, தவறு செய்பவர்கள் எந்தச் சாதியாக இருந்தாலும், எந்த மதமாக இருந்தாலும் அவர்கள் மீது சுதந்திரமாக நடவடிக்கை எடுத்தால்தான் நன்றாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[திரு. இரா. தாமரைக்கனி] [1998 ஏப்ரல் 3

பிற்பகல் 12-45

அடுத்து, இப்போது தமிழ்நாடு வெடிகுண்டு மாநிலமாக இருக்கிறது. பயங்கரவாத நாட்டில் இல்லாத அளவில்கூட தமிழ்நாட்டில் வகை வகையான வெடிகுண்டுகள் எல்லாம் கிடைக்கின்றன. லைசென்சுகள் இல்லாத துப்பாக்கிகள் கிடைக்கின்றன, ஆயுதங்கள் எல்லாம் கிடைக்கின்றன. வேறு எந்த மாநிலத்திலும் இப்படிக் கிடையாது. ஆகவே தேச நலன் கருதி—பட்ஜெட். கூட்டம் முடிந்த உடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மந்திரி சபையை விஸ்தரிக்கப்போவதாகச் சொல்லுகிறார்கள்—திடகாத்திரமுள்ள, வீரம் உள்ள, குண்டுக்குப் பயப்படாத, வெடிகுண்டு ஒழிப்பு அமைச்சர் என்று ஒருவரை நியமித்தால், வெடிகுண்டுகளைத் தமிழ்நாட்டில் ஒழிப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெடிகுண்டுகளை ஒழிப்பதற்காக டி.ஜி.பி. என்று தனியாக ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். அதேபோல் இதற்கும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வெடிகுண்டுப் புதையல் தமிழ்நாட்டில் புதைக்கப்படாத இடமே இல்லை என்ற நிலைக்கு அரசினுடைய மெத்தனப் போக்குதான் காரணம். வன்முறையைத் தடுக்க அரசிடம் எச்சரிக்கையோடுகூடிய எதிர்காலத் திட்டம் எதுவுமே இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, கோவை பயங்கரவாதத்திற்கு மூலகாரணம் போலீஸ்காரர் செல்வராஜ் படுகொலைதான். அந்தக் குற்றவாளிகளை இன்னும் ஏன் கண்டுபிடிக்கவில்லை? அதனால்தான் பொதுமக்கள் இந்த அரசின்மீது சந்தேகப்படுகிறார்கள். ஏன் கண்டுபிடிக்கவில்லை? ஆனால், அந்த மாவட்டத்தில் உள்ள உயர் போலீஸ் அதிகாரிகள் அனைவரையும் பந்தாடியிருக்கிறீர்கள். மத்திய உளவுத்துறை, மாநில உளவுத் துறை, போலீஸ், இவற்றின் ஆலோசனைகள் எதையுமே இந்த அரசு பொருட்படுத்தாததுதான், கோவையின் சீரழிவிற்குக் காரணமாகும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மைக்கு மாறான செய்திகளைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டே போவதை, ஒரு கட்டத்திலாவது தடுத்து நிறுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இப்போது விளக்கம் அளிக்க விரும்புகிறேன். ஏதோ, மத்தியிலே இருந்து வந்த தாக்கீதுகளையோ அல்லது மாநில உளவுத் துறையினுடைய தாக்கீதுகளையோ, இந்த அரசு பொருட்படுத்தவில்லை என்பதுபோல் மாண்புமிகு உறுப்பினர்



1998 ஏப்ரல் 3 ] [கலைஞர் மு. கருணாநிதி]

பேசுகிறார். இதுபோல்தான், மத்திய அமைச்சர் ஒருவர்கூட நேற்றையதினம் ஒரு பொதுக் கூட்டத்திலோ, அல்லது பேட்டியிலோகூட இதையே கூறியிருக்கிறார். பிப்ரவரி 1ஆம் தேதி முதல் 13ஆம் தேதி வரையில் அல்லது அதற்கு முன்பும் மத்திய உளவுத் துறை மூலமும், மாநில உளவுத் துறை மூலமும் கிடைத்த தகவல்கள் எல்லாம் மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள போலீஸ் அதிகாரிகளுக்கும், கலெக்டர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு, உடனடியாகக் கண்காணிப்புடன் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடுங்கள் என்று அவர்களுக்கெல்லாம் ஆணையிடப்பட்டது. இதை இந்த அவையிலேகூட நான் படித்துக் காட்டினேன். கோயம்புத்தூர் ஒன்றைத் தவிர, மற்ற எல்லாப் பகுதிகளிலே இருந்தும் ஏறத்தாழ நாற்பதுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு, வெடிகுண்டுப் பொருட்கள், ஜெலட்டின் குச்சிகள் போன்ற பயங்கரக் கருவிகள் எல்லாம் கைப்பற்றப்பட்டு, அந்தப் பட்டியலையும் நான் இங்கே கொடுத்திருக்கிறேன். ஆனால், கோவையில் மாத்திரம்தான், 'நாங்கள் தேடிப் பார்த்தோம், ஒன்றும் கிடைக்கவில்லை' என்ற தகவல் எங்களுக்கு எழுத்து மூலமாக அங்கே இருந்த போலீஸ் அதிகாரியால் கொடுக்கப்பட்டது. எனவே, போலீஸ் அதிகாரியினுடைய குற்றம், கோவையில் இருந்த அதிகாரியினுடைய குற்றமாகும். அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுப்பது குற்றம் அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டனை என்ற பெயரில் இந்த உயர் போலீஸ் அதிகாரிகளுக்குத் கொடுத்திருக்கிறது. கோவை கமிஷனர் அரசு பதவி உயர்வுதான் எடுத்துக்கொண்டால் அவருக்குப் பதவி நாஞ்சில் மனோகரனை கொடுத்திருக்கிறீர்கள். (சிரிப்பு). கிரைம் பிராஞ்ச் நாஞ்சில் உயர்வு கொடுத்திருக்கிறீர்கள். (சிரிப்பு). கிரைம் பிராஞ்ச் டி.ஐ.ஜி. குமரனுக்குப் பதவி உயர்வு கொடுத்து, அதேபோல் ஏ.டி.ஜி.பி. என்ற பதவி கொடுத்திருக்கிறீர்கள், அப்படித்தான் செல்லமாகக் அலெக்ஸ்—போலீசில் வந்து செய்த சாதனை வெடிகுண்டுப் கூப்பிடுவார்கள்—அவர்கள் புதையலைக் கண்டுபிடிக்காததுதான். அவருக்குப் பரிசாகக் கடலோரக் காவல் படை ஏ.டி.ஜி.பி. என்று பதவி உயர்வு கொடுத்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் அன்றைக்கே இங்கே குறிப்பிட்டிருக்கிறேன். அவர்கள் மீதெல்லாம் விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தருகின்ற விளக்கத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

[1998 ஏப்ரல் 3

**திரு. இரா. தாமரைக்கனி:** மூன்று ஐ.ஜி.-க்கள் இப்போது உள்ளனர். தனிக்காட்டு ராஜா மாதிரி அலெக்ஸ் இருக்கிறார். ஒன்று ஐ.ஜி கடலோரப் பாதுகாப்பு, இரண்டாவது ஐ.ஜி. கமெண்டோ ஃபோர்ஸ், மூன்றாவது ஐ.ஜி. போலீஸ் திட்டம் ஒருங்கிணைப்பு என்று இதுபோன்ற பதவி உயர்வுகளை நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள்.

பிற்பகல் 12-50

அடுத்து, இந்த அரசு பொதுமக்களுக்கு எந்தச் சலுகையும் கொடுக்கவில்லை. முதலில் பட்ஜெட்டிலே வியாபாரிகளுக்கு 1000 கோடி ரூபாய்க்கு வரிச் சலுகை கொடுத்தீர்கள். ஆனால் வியாபாரிகள் விலைவாசியைக் குறைத்தார்களா? விலைவாசி ஏறிக்கொண்டே போனது. ஓட்டலில் பண்டங்களின் விலையைக் குறைத்தீர்களா? நாட்டிலே விலைவாசியைக் குறைத்தீர்களா? இப்பவும் நீங்கள் வரிச் சலுகையைக் கொடுத்திருப்பது என்பது விலைவாசியைத்தான் உயர்த்தும். வியாபாரிகளுக்குத்தான் நன்மை தரும், இந்த பட்ஜெட்.

இன்னொன்று, தென்குமரி முனையிலே வள்ளுவர் சிலை அமைக்கப்படும் என்று இந்த ஆண்டு பட்ஜெட்டிலே சொல்லி இருக்கின்றீர்கள். 1975ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. போன பட்ஜெட்டிலேயும் தென்குமரியிலே வள்ளுவர் சிலை அமைப்பது குறித்து வருகிறது. இந்த பட்ஜெட்டிலேயும் வருகிறது. ஆகவே, இந்த ஆண்டாவது வள்ளுவர் சிலை அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையினை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரூராட்சிகளின் அதிகாரத்தைப் பறித்து இருக்கிறீர்கள். 38 ஆண்டுகளாக இருக்கிற பேரூராட்சிகளை, மேஜர் பஞ்சாயத்துக்களாக ஆக்க வேண்டுமென்று சொல்லி ஒவ்வொரு பேரூராட்சியிலும் தீர்மானம் போட்டு அனுப்பினீர்கள். ஆனால், பாராளுமன்றத்திலே மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி இல்லாததால் திரும்பி வந்து விட்டது. பழையபடியும், பேரூராட்சிகளில் தீர்மானம் போட்டு வந்திருக்கிறது. ஆகவே நகர்பாலிகா திட்டத்தின் கீழ நகரப் பேரூராட்சிகளுக்கு நீங்கள் அதிகாரம் வழங்க வேண்டும், அங்கே முன்பு போல பேரூராட்சிகளாகச் செயல்படுவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசு ஊழியர்களுக்கு நிலுவைத் தொகையினை 100 சதவிகிதத்தினை ரொக்கமாக வழங்க வேண்டும். மத்திய அரசு ஊழியர்களுக்கு நிலுவைத் தொகையை 100 சதவிகிதத்தை... (பலத்த சிரிப்பு)



1998 ஏப்ரல் 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அவரைப் பேசவிடுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** நீங்கள் எல்லோரும் ஏன் சிரிக்கிறீர்கள். அதற்குக் காரணம் சொல்லுங்கள். பிறகு நானும் நீங்கள் பேசும்போது சிரித்துக்கொண்டேயிருப்பேன். தப்போ, ரைட்டோ நான் என்னுடைய பாணியிலே, கிராமத்துப் பாணியிலே எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன். அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். அல்லது சம்பந்தப்பட்ட மந்திரிகள் சொல்வார்கள் அல்லது சபாநாயகர் என்னை உட்காரச் சொன்னால் நான் உட்கார்ந்துவிட்டுப் போகிறேன். நீங்கள் சிரித்துக் கொண்டேயிருந்தால், நானும் சிரித்துக் கொண்டேயிருப்பேன். நீங்களும் பைத்தியக்காரன் ஆவீர்கள். நானும் பைத்தியக்காரன் ஆவேன். பைத்தியம்தான் பைத்தியத்தைப் பார்த்து சிரித்துக் கொண்டேயிருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இந்த அரசாங்கமே அரசாங்க ஊழியர்களுக்குத்தான்; வேறு யாருக்குமேயில்லை என்று சொல்லிவிட்டு இப்போது அவர்களுக்குக் கொடுத்தது போதாது என்று சொல்கிறீர்களே, அதற்காகத்தான் சொன்னார்கள். நீங்கள் அதற்கு விளக்கம் சொல்லுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே. அதையும் சொல்கிறேன், இதையும் சொல்கிறேன். (பலத்த சிரிப்பு) அதாவது அரசு ஊழயர்களுக்கு நிலுவைத் தொகை 100 சதவிகிதத்தை ரொக்கமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறேன். பிறகு நான் ஏதாவது சொல்லிவிட்டு, அரசு ஊழியர்களுக்கு எதிராக இந்த எம்.எல்.ஏ. பேசுகின்றார் என்ற பிரச்சாரம் வந்துவிடும் இல்லையா? நான் மனதிலே பட்டதை வஞ்சகம் இல்லாமல் பேசுகிறேன். நீங்கள், இப்படிப்பட்ட அரசியல்வாதிகளாக இருப்பீர்கள் என எனக்குத் தெரியுமா? வினையின், சூதின் மொத்த உருவமே, எல்லாமே இங்கேதான் இருக்கிறது. என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?

தென் மாவட்டங்களிலே சாதிக் கலவரங்கள் நடக்கின்றன என்று சொல்லி சாதிக் கலவரங்களுக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய போலீஸ் எல்லோரையும் நீங்கள் டிரான்ஸ்ஃபர் செய்தீர்கள். ஆனால், மாவட்டச் செயலாளர்களையும் மற்றவர்களையும் பிடித்து, பழையபடி இந்த சாதிக் கலவரங்களுக்கு உடந்தையாக இருந்த போலீஸ் எல்லாம் வந்திருக்கிறார்கள். எனவே, பழையபடி சாதிக் கலவரங்கள் வந்து

[திரு. இரா. தாமரைக்கனி] [1998 ஏப்ரல் 3

விடாமல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தடுத்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று, இந்த ஆட்சி வந்த பிறகு, முதலமைச்சர் அவர்கள் இதே சட்டசபையிலே கள்ளச்சாராயப் பானை மீது குண்டு பாயும் என்று சொன்னீர்கள். ஆனால், பாருங்கள், கோடம்பாக்கத்திலே 8-1-1998 லே விஷச்சாராயம் காய்ச்சிய நான்கு பெண்கள் கைது. சென்னையில் பாக்கெட் சார்ராயம் விற்ற மூன்று பேர் கைது. 7885 பேர் மீது வழக்குகள் என்று விகடன் பத்திரிகையிலே வந்திருக்கிறது: விஷச்சாராயம் குடித்து 6 பேர் கவலைக்கிடம், இது குடியாத்தம் பி.கே. புரத்தில் 25-3-1998ல் நடந்திருக்கிறது: மணலியில் சாந்தன்காடு பகுதியிலே 15 மூட்டை கள்ளச் சாராயத்தை அழித்திருக்கிறார்கள்; திருநீர்மலை என்ற கிராமத்தில் கள்ளச் சாராயம் விற்ற பெண் கைது; விழுப்புரத்திலே பயங்கர கள்ளச்சாராயப் பிரச்சினையில் இதுவரை 7 பேர் வெட்டிக்கொலை; சென்னையிலே 26-3-1998ல் சாராயப் பாக்கெட்டுகளைச் சாக்குமூட்டையில் பிடித்திருக்கிறார்கள்; சாத்தூரில் 10 நாட்களுக்கு முன்பாக விஷச்சாராயத்தாலே மூன்று பேர் செத்திருக்கிறார்கள்.

திண்டுக்கல்லில் ரௌடி ராஜேந்திரன் என்ற கள்ளச் சாராயப் பேர்வழிக்கு அங்குள்ள போலீசே ஆதாவாக இருப்பதாகச் சொல்கிறார்கள். இப்படியெல்லாம் இருக்கின்றன. இதுவரை ஒருவரை வெட்டிக் கொன்று விட்டார்கள். இதுவரை 40 காலி பேரல்களை உடைத்ததாக டி.வி.யில் காட்டுகிறார்கள் அவர்களுக்கு போலீஸ் உதவியாக இருப்பதாகச் சொல்கிறார்கள். இதெல்லாம் என்ன நாடகம்? நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். சட்டப் பேரவையில் தவறான தகவல் சொன்னதற்காக. நேற்று டி.வி.யிலே சொல்கிறார்கள், 40 பேரல்களை வீராதிவீரர்கள் உடைத்தார்கள் என்று அப்படி டி.வி-யில் காட்டுகிறார்கள். பெரிய அநியாயமாக இருக்கிறது. வெற்று டின்னைத்தான் உடைத்தார்கள்.

பிற்பகல் 12-55

இன்னொரு விஷயம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ. கள்ளச்சாராய வியாபாரிகள் ஆங்காங்கே ஆளுங்கட்சிக்காரர்களைக் கையிலே வைத்துக்கொண்டு, போலீஸ்காரர்களைக் கையிலே வைத்துக்கொண்டு இந்த ஆட்சிக்குக் கெட்ட பெயர் வருகின்ற மாதிரி நடந்து கொள்கிறார்கள். நாங்கள்



1998 ஏப்ரல் 3] [திரு. இரா. தாமரைக்கனி]

சொல்லத்தான் செய்யலாம். இதை நான் அரசியல் அடிப்படையிலே பேசுகிறேன் என்று நீங்கள் நினைத்தால், நினைத்துக் கொள்ளுங்கள்.

காமராசர் மாவட்டம், சிவகாசியிலே கள்ளச்சாராய வியாபாரி, பாக்கெட் சாராயத்தை கவர்ன்மெண்ட் லேபிள் இல்லாமல் விற்றதாகச் சொல்லி, கிட்டத்தட்ட 17½ லட்சம் ரூபாய் மதிப்புள்ள கள்ளச் சாராயப் பாக்கெட்டுகளைப் பிடித்தார்கள். சன் டி.வி.யிலே காட்டினார்கள். பேப்பரிலே செய்தி எல்லாம் வந்தது. அதனுடைய உரிமையாளர் யார் என்று பார்த்தபோது, அவர் யாரென்றால் எங்கள் ஊருக்குப் பக்கத்தில் உள்ள கிருஷ்ணன்கோவில் பஞ்சாயத்துத் தலைவர், கணேசன் என்பவர்தான். அவரை, குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப் பார்த்தார்கள். முடியவில்லை. குண்டர் தடுப்புச் சட்டத்திலே போடவேண்டுமென்று எஸ்.பி. பரிந்துரை செய்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஃபோன் பண்ணிக் கேட்டபோது, எடுத்த சாமான்களை எல்லாம் கொடுத்துவிட வேண்டுமென்று சொல்லப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள மூன்று மந்திரிகள் கலெக்டருக்கு ஃபோன் போட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அவரைக் குண்டர் தடுப்புச் சட்டத்திலும் கைது செய்யவில்லை. பின்னர் தேர்தல் வந்து விட்டது. உடனே அவரை வெளியிலே விட்டு, பாராளுமன்றத் தேர்தலுக்கு, அந்தச் சாராய வியாபாரியை தி.மு.க. வுக்கு வேலை செய்யச் சொன்னார்கள். இப்படியெல்லாம் நடந்தால் எப்படி? உங்களுக்குத்தானே கெட்ட பெயர் வரும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்கள் ஆட்சியிலே இருக்கும்போது, மதுவிலக்குப் பிரிவிற்கு என்று தனியான அமைப்பை ஏற்படுத்தியிருந்தார்கள். அதை நீங்கள் கலைத்து விட்டீர்கள். எனவே, அதற்கென்று தனியாக ஐ.ஜி.யை நியமித்து, அதற்குப் பின்னாலே ஏ.டி.எஸ்.பி., எஸ்.பி., காவலர்கள் என்று நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம். என்னுடைய ஊரை எதிர்க்கட்சித் தொகுதி என்று சிறுமைப்படுத்த வேண்டாம். எங்களுக்கு நீங்கள் நல்லதும் செய்ய வேண்டாம், தீமையும் செய்ய வேண்டாம். எங்களை ஃப்ரியாக விட்டு விடுங்கள். இந்த ஆட்சி வருவதற்கு முன்னால், எங்கள் ஊரிலே மாவட்ட நீதிமன்றம் இருந்தது.

[திரு. இரா. தாமரைக்கனி] [1998 ஏப்ரல் 3

அதை எடுக்க முயற்சித்தார்கள். தயவுசெய்து எங்கள் ஊரைச் சிறுமைப்படுத்தாதீர்கள்.

இன்னொன்று: சங்கரன்கோவில் எம்.எல்.ஏ. ஊர்; வறட்சியான பகுதி; குடிநீருக்காக மக்கள் துன்பப்படுகிறார்கள்; ஏழை எளிய. அரிசன மக்கள்தான் அதிகமாக வாழ்கின்றார்கள். அங்குள்ள குடிநீர்த் திட்டம் அந்த ஊருக்கே போதாது. அங்கே இன்னொரு கிணற்றைத் தோண்டி, இன்னும் 60 கிராமங்களுக்குக் கிடைக்கின்ற அளவிலே திட்டம் போடப்பட்டுள்ளது. இந்தச் சபையிலே முதலமைச்சர் அவர்களே சொன்னார்கள்..

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒருமுறைக்கு இருமுறைகள் சொல்லியாகிவிட்டது. இந்தத் திட்டம் வேறு. அவர் சொல்லும் ஊர் வேறு. அந்தத் திட்டத்திலே இருக்கிற தண்ணீருக்கும், இந்தத் தண்ணீருக்கும் சம்பந்தமே கிடையாது. ஒருமுறைக்கு இருமுறைகள் ஆராய்ச்சி செய்து, சம்பந்தப்பட்ட வல்லுநர்கள் அறிக்கையே கொடுத்திருக்கிறார்கள். அங்கே உள்ள மக்கள் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். உங்களுக்காக அதைத் தடுத்து நிறுத்த முடியுமா?

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் சாலை மறியல், ஊர்வலம், கடையடைப்பு, பந்த் எல்லாம் நடத்தினார்கள். அங்கே உள்ள பதட்ட நிலை அது. முதலமைச்சர் அவர்களுக்கும் தெரியும். **இதனால் ஆட்சிக்குத்தான் கெட்ட பெயர் வருகிறது...

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இது என்ன மாமன்றமா, சந்தைக் கடையா? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! ** என்ற வார்த்தைகள் எல்லாம் பதிவேட்டில் இருக்கலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, நீங்கள் ஐந்து தடவை சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியவில்லை என்றால் நான் என்ன செய்யமுடியும்? நீங்கள் பேசும்போது, ** என்று சொன்னதை வாபஸ் பெற்றுக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் நானே அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிடுவேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1998 ஏப்ரல் 3]

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன் கோவிலுக்குப் பாதிப்பு ஏற்படாத அளவுக்குப் பார்த்துக் கொள்கிறேன்; என்னிடம்தான் ஃபைல் வரும் என்று சொன்னார்கள். ** நான் ஒன்றும் தவறாகப் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குத்தான் மாண்புமிகு அமைச்சர் காரணங்களைச் சொல்லிவிட்டாரே!

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, அப்போது அந்த ஊருக்குப் பாதிப்பு இல்லாமல் இருக்க வேண்டுமல்லவா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவிலுக்குப் பாதிப்பு வராமல்தான் இந்தத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், நேற்று இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்களுடைய தொகுதியிலே உள்ள கிராமங்களுக்கும் பயன்படக்கூடிய அளவுக்குத்தான் மற்றொரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக, எந்தவிதமான பாதிப்பும் ஏற்கெனவே பயன்பெற்றுக் கொண்டிருக்கிற சங்கரன்கோவிலுக்கு வராது என்பதையும் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, இன்னும் இரண்டு நிமிடங்களில் உங்களுடைய பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிபுத்தூரில் மாவட்ட நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது. அதுசம்பந்தமான பிரச்சினையை சட்டசபையிலே நான் கிளப்பினேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற வார்த்தைகளை வாபஸ் பெறுங்கள் என்று சொன்னேன். அதை இன்னும் நீங்கள் செய்யாமல் இருக்கிறீர்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** சரி நீக்கிவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுமாறு உத்தரவிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிபுத்தூரில் வக்கீல்கள் போராட்டம் செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு இதை நான் கொண்டுவந்தேன். முதலமைச்சர் அவர்கள் போராட்டத்தைக் கைவிட்டு விடவேண்டும் என்று சொன்னார்கள். அந்தக் கோர்ட்டை மாற்றமாட்டோம் என்கிற அளவிலே அப்படிச் சொன்னார்கள். அதை நம்பி நான் எல்லோருக்கும் ஃபோன் போட்டேன். முதல்வர் அவர்கள் மாற்றமாட்டோம் என்று சொல்லவில்லையே, எப்படிப் போராட்டத்தை நிறுத்துவது என்று சொன்னார்கள். பிறகு சட்டத் துறை அமைச்சர் திரு. ஆலடி அருணா அவர்களைப் பார்த்தேன். அவர்களைப் பார்க்கும்போது, உங்கள் ஊரிலே நிறைய கோர்ட்டுகள் இருக்கின்றன. அந்தக் கோர்ட்டுகளில் ஒன்றை விருதுநகருக்கு எடுத்துக் கொண்டுபோனால் என்ன என்று கேட்டார்கள். முதலமைச்சர் எவ்வளவு 'இக்கன்னா' வைத்துப் பேசுகிறார் என்று எனக்கல்லவா தெரியும். உள்நோக்கம் வைத்துப் பேசுகிறார். இந்த மாதிரி எல்லாம் எங்கள் ஊரில், கோர்ட்டை மாற்றுகிற அளவில் சொல்கிறார்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எதிர்க்கட்சி, உங்கள் கடமையைச் செய்கிறீர்கள். அதிலே நான் குறுக்கிடவில்லை. நீங்கள் முதலமைச்சரிடத்திலே பேசும்போது தெரிந்தோ தெரியாமலோ நான் சாட்சியாக இருந்தேன். முதலமைச்சர் அவர்கள் தெளிவாகப் பேசிவிட்டார்கள். ஆகையினால், இதில் மேலும் பிரச்சினையை வளர்க்க வேண்டாம். வேறு ஏதாவது இருந்தால் பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோர்ட்டை மாற்ற மாட்டோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். அதுமட்டுமல்லாமல் 12 ஏக்கர் அளவுக்கு நிலம் இருக்கிறது. நிரந்தரமான கட்டடம் கட்டித்தர நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். முதலமைச்சர் அவர்களை நேரடியாகப் பார்த்துச் சொன்னேன். Bar Association சார்பாக வந்துப் பார்த்தார்கள். சட்டத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு ஆலடி அருணா அவர்களைப் பார்த்து மனு கொடுத்திருக்கிறேன். எங்கள் ஊருக்கும்கூட நல்லமுறையிலே வரவேற்று மாலையெல்லாம் போட்டு, இதையெல்லாம் செய்து பார்த்தேன். நடக்கவில்லை. எதிர்க்கட்சித் தலைவர், திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்களிடம் சொல்லி, எங்கள் ஊருக்கு வந்து



பாருங்கள் என்று சொல்லியிருக்கிறேன். ஐயா பெரியவர் கருப்பையா மூப்பனார் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். நிதி ஒதுக்க பரிந்துரை செய்யச் சொல்லி பேரவைத் தலைவர் அவர்களையும் சிபாரிசு பண்ணும்படி சொல்லிப் பார்த்தும் நிதி ஒதுக்காமல் இருக்கிறார்கள். நாங்கள் என்ன பாவம் செய்தோம்.? எதிர்க்கட்சியாக இருப்பதாலே அப்படிச் செய்கிறார்களா? எனவே இந்த பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் தேச நலன் கருதி, நாட்டின் நலன் கருதித்தான் சொல்கிறேனே தவிர, அரசியல் நோக்கத்தோடு கிடையாது. தீவிரவாதிகளைப் பிடிக்கிறபோது, உண்மையான தீவிரவாதிகளைப் பிடிக்காமல், சில அப்பாவிகளைப் பிடிப்பது என்பது வருத்தப்பட வேண்டியதாகும். ஆயிஷா என்ற பெண் எங்கள் ஊர்ப் பெண். மம்சாபுரத்துப் பெண்தான். அந்தக் குடும்பம் தி.மு.க. பாரம்பரியம் என்று முதலமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அவருடைய அப்பா செல்லத்துரை. அவரும் தி.மு.க.வைச் சேர்ந்தவர். சங்கீதா என்கிற ஆயிஷா தி.மு.க. உறுப்பினர் கார்டு வைத்திருக்கிறார். வீட்டில் தி.மு.க. கொடி பறக்கிறது. ஆனால் போலீஸ் அதிகாரிகள் வந்து—தீவிரவாதிகள் என்ன செய்கிறார்கள் என்றால், எந்தச் சாதியாக இருந்தாலும், எந்த மதமாக இருந்தாலும் கட்சியை விட்டுவிடுகிறார்கள். கட்சியை விட்டுவிட்டு சாதிக்குப் போய்விடுகிறார்கள். மதத்திற்குப் போய்விடுகிறார்கள். இதில் கட்சிக்கு இடமில்லை. தீவிரவாதிகள் தப்பிப்பதற்குக் கட்சியைப் பயன்படுத்துகிறார்கள். பாத்திமா மெட்ராசில் அ.இ.அ.தி.மு.க. என்று உறுப்பினர் கார்டையும், கொடியையும் போலீஸ் கமிஷனர் காட்டுகிறார். செய்தி போடுகிறார்கள். காமராசர் மாவட்டத்தில் மாவட்ட எஸ்.பி. வந்து விசாரணை நடத்தாமல், சாதாரண போலீஸ் வந்து விசாரித்து, விடுதலைப் பத்திரம், என்றெல்லாம் சொல்லி நாடகம் ஆடுகிறார்கள். வீட்டுக்கு வந்தால் வெட்டுவோம் என்று சொல்வதாக நாடகம் ஆடுகிறார்கள். இது எல்லாம் அங்கே கிடையாது. கோயம்புத்தூர் குண்டு வெடிப்புக்குப் பிறகு, மம்சாபுரத்திற்கு ஆயிஷா வந்திருக்கிறார்? அவருடைய தாய் சுப்புலட்சுமி—தாய்மேல் அவ்வளவு பாசம் - அவர்களிடத்தில் 10 இலட்சம் ரூபாய் ஆயிஷா கொடுத்து இருக்கிறார். பேங்கில் பணத்தைப் போட்டிருக்கிறார்கள். தி.மு.க. கார்டு இருக்கிறது என்று சொல்லி, அங்கேபோய் ஏன் இதை எஸ்.பி. பார்க்கக்கூடாது? ஏன் சோதனை செய்திருக்கக்கூடாது? நான்கூட முதலமைச்சருக்கு ஒரு ஃபேக்ஸ் செய்தி கொடுத்தேன். கோயம்புத்தூர் குண்டு வெடிப்பு முடிந்தவுடனே, தீவிரவாதிகள் எங்கள் பகுதியில், காமராசர்

[திரு. இரா. தாமரைக்கனி] [1998 ஏப்ரல் 3

மாவட்டத்தில் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று ஃபோக்ஸ் செய்தி கொடுத்தேன். ஆனால் போலீஸ் அஜாக்கிரதையாக இருக்கிறது. போலீஸ் உடந்தையாக இருக்கிறது. ஏனென்றால் சாதி மதத்தோடு...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தி.மு.க.விலே இருந்தவர் அல்லது குடும்பத்தார் தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக, குறிப்பிடப்பட்டிருக்கின்ற ஆயிஷா என்கிற அந்தப் பெண்மணியை இந்த அரசு மன்னிக்கத் தயாராக இல்லை. அவரைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதற்காக. என்ன என்ன மாறு வேடத்திலே அந்தப் பெண்மணி உலவக்கூடும் என்றெல்லாம்—அந்த மாறு வேடங்கள் எல்லாம்கூட—வெளியிடப்பட்டிருக்கின்றன. அப்படி அந்த வேடங்களை, படங்களைப் பத்திரிகைகளிலே வெளியிட்டதற்காகக்கூட முஸ்லீம் சமுதாயத்துப் பெருமக்கள் பலபேர் மனம் நொந்து அந்தப் படங்களை வெளியிட வேண்டாம் என்றுகூடக் கேட்டிருக்கிறார்கள். அதையும் மீறித்தான். எப்படியும் குற்றவாளி கண்டுபிடிக்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் அந்தப் படங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தி.மு.க. என்று சொன்னார்கள். அதை யாரும் மறுக்கவில்லை. தி.மு.க. என்பதற்காக அவர்கள் யாரும் விட்டுவிடப்படவில்லை என்பதிலிருந்து இந்த அரசினுடைய நியாயம் எல்லோருக்கும் தெரியும் என்று கருதுகின்றேன். அவர்கள் வீட்டிலும் போலீஸ் விசாரித்து இருக்கிறார்கள். பத்திரிகை நிருபர்களும் சென்று விசாரித்து இருக்கிறார்கள். அந்தப் பெண்ண இந்துப் பெண்ணாக இருந்து ஒரு முஸ்லீமைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்ட பிறகு. வீட்டைவிட்டு. அவர்கள் ஒதுக்கி விட்டதாகவும். வந்தால் வெட்டி விடுவோம் என்று அவர்கள் வீட்டார் சொன்னதாகவும் ஏடுகளிலே செய்திகள் வந்து இருக்கின்றன. இப்பொழுது ஒரு புதிய செய்தியைச் சொல்கிறார்: அந்தப் பெண்மணி கோயம்புத்தூரிலிருந்து திரும்பி வந்து. 10 லட்ச ரூபாயை அவருடைய தாயாரிடத்திலே கொடுத்து. வங்கியிலே போட்டு இருப்பதாகச் சொல்கிறார். அதை உடனடியாக விசாரித்து. அது உண்மையாக இருக்குமேயானால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

அன்றைக்கே இந்த அவையிலே சொல்லி இருக்கின்றேன். தீவிரவாதிகள் எந்தக் கட்சியிலே இருந்தாலும், இப்படிப்பட்ட சமுதாய



1998 ஏப்ரல் 3] [கலைஞர் மு. கருணாநிதி]

ஆபத்தை உருவாக்குகின்றவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை அந்தக் கட்சியினுடைய தலைமை மன்னிக்கக் கூடாது. அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். அதைப்போல, திராவிட முன்னேற்றக் கழகமும் அந்த ஒத்துழைப்பைச் சமுதாயத்திற்கு, நாட்டிற்கு அளிக்கும் என்று நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, உரையை முடியுங்கள். இதுவரை 30 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, அது மட்டுமல்லாமல். செண்பகத் தோப்பு அருகே அருணாச்சல நாடார் மகன் கோவிந்தசாமி என்பவருக்குச் சொந்தமான ஒரு கிணறு இருக்கிறது. வெடி குண்டை பயந்து போய் போட்டு அந்த கிணறே மூடிவிட்டது. ஆனால், அது போலீசுக்கெல்லாம் தெரியும். சம்பந்தப்பட்ட கிணற்றின் சொந்தக்காரர் பெட்டிஷன் கொடுக்கவே பயப்படுகிறார். இது எல்லாம் போலீசுக்குத் தெரியும். அங்கே தோப்பிலே 15 நாள் இருந்தார்கள், — அந்தத் தோப்பு ஒருவருடைய தோப்பு; தோப்புக்காரரின் பெயரைச் சொன்னால், அதுவேறு மதப் பிரச்சினையாக வரும்: நூருல்லா என்று பெயர்: அவருடைய தோப்பிலே தங்கி இருந்தார்கள்.—இது எல்லோருக்கும் தெரியும். ஆகவே, காவல் துறை ஒத்துழைப்போடுதான் அந்த ஆயிஷா நடமாடிக் கொண்டிருக்கிறார். அதனாலே, வெளியிலே என்ன பேசுகிறார்கள். தி.மு.க.வாக இருப்பதனாலே, தி.மு.க. அரசு இந்த ஆயிஷாவை இன்னும் பிடிக்கவில்லை; அவரைக் காப்பாற்ற முயற்சி பண்ணிக்கொண்டு இருக்கிறார்கள் என்று வெளியே சொல்லுகிறார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும். வெளி மாநிலத்துக்கு எல்லாம் போலீசை அனுப்பி இருக்கிறீர்கள். அது கோட்டைக்கு வந்து விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். கோட்டையிலே வால்-போஸ்டர் எல்லாம் ஒட்டி விடுங்கள். டிரெயின், பஸ்ஸிலே எல்லாம் ஒட்டுவதற்கு ஆர்டர் போட்டு இருக்கிறீர்கள். கோட்டையிலும் ஒட்டி வையுங்கள். இதுவேற இங்கே வந்து எதுவும் பண்ணிவிடக்கூடாது. ஏற்கெனவே கோட்டையிலே வெடிகுண்டு என்று சொல்லி ஒரே புரளியாக இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இதையெல்லாம் நீக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

[1998 ஏப்ரல் 3

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை ஆதரித்து இந்தக் குறுகிய நேரத்தில் ஒருசில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். பொதுவாக ஒவ்வொரு நிதிநிலை அறிக்கைக்குப் பிறகும், பொருளாதாரத்தில் சில விளைவுகள் ஏற்படும். அந்த விளைவுகள் நல்விளைவுகளா, பொருளாதாரத்தை மேலும் செம்மைப்படுத்துகிற விளைவுகளா அல்லது பொருளாதாரத்தில் சிக்கல்களை, சீர்கேடுகளை, விலையேற்றத்தை, பண வீக்கத்தை ஏற்படுத்துகிற நிதிநிலை அறிக்கையா என்பதைப் பொறுத்து நிதிநிலை அறிக்கையினுடைய பயன் விளக்கிச் சொல்லப்படும். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த ஆழமாகச் சிந்தித்து, அதிகமான நல்விளைவுகள் ஏற்படும் வகையிலே இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கிற திட்டங்கள் அனைத்தும் முறையாக நிறைவேற்றப்பட்டு, பொதுவாக, எல்லாத் தரப்பு மக்களுக்கும் பயன் கிடைக்க எப்படி வரி விதிக்க வேண்டும், செலவினங்களை எப்படி அமைத்துக்கொள்ள வேண்டும் என்பது குறித்து, மிகவும் நுணுக்கத்தோடு இதைத் தயார் செய்து இருக்கிறார்கள் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. எனவே, இந்த நிதிநிலை அறிக்கையை நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன். வரி மூலமாக மக்களிடத்திலே இருந்து அரசாங்க கஜானாவுக்குக் கொண்டுவருகிற பணத்தைவிட, செலவினங்கள் வாயிலாக மக்களுக்குச் சென்று அடைவதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த அக்கறை காட்டி இருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-10*

எனவே, இது ஒரு நல்விளைவை ஏற்படுத்தக்கூடிய நல்ல பட்ஜெட். மக்களை மையமாக வைத்தே தயாரிக்கப்பட்டிருக்கிற ஒரு நல்ல நிதிநிலை அறிக்கை என்பதை நான் இந்த இடத்தில் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமையென்று கருதுகிறேன். பொதுவாக எந்த நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும் அது முழு மனதோடு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதற்குச் சூழ்நிலைகள் சாதகமாக அமைந்திடல் வேண்டும். நிதிநிலையைத் தயார் செய்கிற அமைச்சர் மட்டுமல்லாமல் அதை நடைமுறைப்படுத்துகிற அதிகாரிகளும் அரசாங்கத்தினுடைய எண்ணம் என்ன, நிதிநிலை அறிக்கை எந்தத் திசையில் நம்மை அழைத்துச் செல்கிறது என்பதைப் புரிந்துகொண்டு முழு மனதுடன் அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற



1998 ஏப்ரல் 3 ] [திரு. ம. அப்துல் லத்தீப்]

அர்ப்பணிப்போடு செயல்பட வேண்டும். அதற்கு மாறாகச் சில சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டால் முழுப் பயனும் நாட்டுக்குக் கிடைக்காமல் போய்விடும். உதாரணமாக, ஓர் அரசாங்கத்தினுடைய ஸ்திரத் தன்மையில் நம்பிக்கை இருக்க வேண்டும். மக்களுக்கு இருக்கின்ற நம்பிக்கையைவிட அதிகாரிகளுக்கு இருக்க வேண்டும். இந்த அரசு நீடிக்கும் என்பதிலே அவர்களுக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். அதற்கு மாறான சூழ்நிலை உருவாவது அல்லது உருவாக்கப்படுவது, நாட்டுக்குச் செய்யப்படுகிற மிகப் பெரிய துரோகம் என்பதை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

இன்றைக்கு மத்தியிலே திரு. வாஜ்பாய் அரசு பொறுப்பேற்று இருக்கிறது. திரு. வாஜ்பாய் அரசு பொறுப்பேற்பதற்கு முந்தி, அதனை எதிர்த்தவர்கள் பலருண்டு. அதிலே இந்திய தேசிய லீக்கும் இடம் பெற்றிருக்கிறது. ஆனால், அப்படி எதிர்த்த நாம், வாஜ்பாய் அரசுதான் வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறதென்ற நிலையில், அதை நாம் ஆதரித்து இருக்கிறோம். வரவேற்றிருக்கிறோம். அவர்கள் பொறுப்பேற்ற பிறகு மனதார வாழ்த்தும் சொல்லியிருக்கிறோம். 5 ஆண்டுகள் அந்த ஆட்சி தொடர்ந்து இருக்க வேண்டும் என்றும் நம்முடைய விருப்பத்தை மக்கள் மன்றத்தில் மட்டும் அல்ல இந்த மன்றத்திலேயும் சொல்லியிருக்கிறோம். அதனுடைய நோக்கம் என்னவெனில், ஒரு ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு அது நிரந்தரமான ஆட்சி என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டு அதற்கு வழி வகுத்துத் தர வேண்டும். இல்லையெனில்——சாதாரணமாக நடைபெறுவது என்னவென்றால் மக்களிடத்தில் எந்த நிலை இருந்தாலும் அது பாதகமாக அமையாது. ஆனால், ஓர்—ஆட்சி அமைந்த பிறகு, அதிகாரிகளிடத்திலே இந்த ஆட்சி இன்றைக்கோ, நாளைக்கோ என்ற ஒரு உணர்வு வந்துவிட்டால், பொதுவாக ஓர் அர்ப்பணிப்பு அவர்களிடத்தில் இல்லாமல் போய்விடும். அதனால் அதிகாரிகள் with a sense of greater commitment உடன் செயல்பட வேண்டும். இந்த ஆட்சி நிரந்தரமான ஆட்சி, சில நாட்களுக்கு இருக்கும் என்ற எண்ணத்தை உருவாக்க வேண்டும். அது மிகமிகத் தேவை. அதைத்தான் நம்முடைய மூத்த அரசியல்வாதி மரியாதைக்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் செய்திருக்கிறார்கள். அவர்கள் தெலுங்கு தேசத்தை ஆதரிக்கிறாரா அல்லது எதிர்க்கிறாரா, அல்லது பி.ஜே.பி. அரசு வரவேண்டுமென்று விரும்பினாரா, இல்லையா என்பதெல்லாம் பிரச்சினையில்லை. ஆனால் இப்போது தெலுங்கு தேசம், பி.ஜே.பி. ஆட்சி நிலையாக இருப்பதற்காக ஆதரவு தெரிவித்திருப்பது ஒரு

[திரு. ம. அப்துல் லத்தீப்] [1998 ஏப்ரல் 3

தேசிய சேவை என்று நம்முடைய மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கள் சொல்லியிருப்பதற்குக் காரணம், உண்மையில் இது ஒரு தேசிய சேவை. ஏனென்றால், ஒரு நிரந்தரமான ஆட்சி இருக்க வேண்டும். நிரந்தரமான ஆட்சி இருந்தால் நாட்டுக்குச் செய்ய வேண்டிய பணிகளை நாம் தொடர்ந்து செய்ய முடியும். ஏனென்றால் அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நிலை எந்த வகையிலும் பயன்படாது. எப்படியாவது ஒரு ஸ்திரமான ஆட்சி நாட்டில் ஏற்பட வேண்டும். அதற்கு வழி வகுத்தது ஒரு தேசிய சேவை என்ற அடிப்படையில் தேசிய உணர்வு கொண்ட நம்முடைய சி. சுப்பிரமணியம் அவர்கள்கூடக் கூறியிருக்கிறார்கள். இது அங்கே நடைபெறுகிறது.

*பிற்பகல் 1-15*

மாண்புமிகு திரு. வாஜ்பாய் அரசிற்குப் பெரும்பான்மை இல்லை, அது ஒரு தொங்கு பாராளுமன்றம், அதற்குரிய பெரும்பான்மை இல்லை என்பது நாடறிந்த உண்மை. அவர்கள், அவர்களுடைய ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்குப் பல வகையிலும் முயற்சி செய்யக் கூடிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டார்கள் என்பது நாடறிந்த உண்மை. ஆனால், தமிழகத்திலே ஒரு நிலையான ஆட்சி இருக்கிறது. ஒரு அறுதிப் பெரும்பான்மை பெற்ற சட்டமன்றம் இருக்கிறது. ஆனால், இந்தச் சட்டமன்றம் பெற்றிருக்கக்கூடிய, பெரும்பான்மையான தமிழ் மக்களுடைய ஆதரவைப் பெற்று அறுதிப் பெரும்பான்மையோடு இன்னும் சொல்லப்போனால், ஆங்கிலத்திலே சொல்லப்போனால், brutal majority என்றுகூடச் சொல்லக்கூடிய அளவுக்கு, ஒரு மிகப் பெரிய பெரும்பான்மையைப் பெற்றிருக்கக்கூடிய இந்த ஆட்சி வெகு விரைவில் இல்லாமல் ஆகிவிடும் என்று சொல்வதற்காக, யார் ஒரு ஆட்சியை ஏற்படுத்துவதற்காக, பலரைப் பிடித்து, முயன்று, இன்றைக்கு அமைச்சர்களாக ஆகியிருக்கிறார்களோ, அப்பேர்ப்பட்ட அமைச்சர்கள் இன்றைக்குத் தமிழகத்திற்கு வந்து ".. very soon the people of Tamil Nadu will get relief " என்று சொல்கிறார்கள். என்ன relief என்று தெரியவில்லை. இவர்களுக்கு relief கிடைத்து விட்டதா? இவர்களாலே அந்த அரசுக்கு relief கிடைக்கிறதா? அல்லது தொந்தரவுகள் ஏற்படுகிறதா? என்பதை வெகு விரைவில் அவர்களே அறிவார்கள். அவர்கள் இங்கே வந்து என்ன பேசுகிறார்கள்? Power Minister என்று சொல்கிறார்கள். What sort of power ? I do not understand. First of all, they must understand what power means என்ன 'பவர்'? நீங்கள் இந்த மாதிரி 'பவர்' செலுத்தத்தான் தமிழ்நாட்டிற்கு வருகிறீர்களா?



1998 ஏப்ரல் 3 ] [திரு. ம. அப்துல் லத்தீப்]

உங்களுடைய தந்தை எங்களுக்குத் தெரியும். அவருடைய உணர்வுகள் நாங்கள் அறிந்த உணர்வுகள். அவர்கள் எந்தக் கொள்கைக்காக வாழ்ந்தார்கள் என்பதை நாங்கள் அறிவோம். தந்தைக்குத் தந்தை, எந்தவொரு கொள்கையை இந்த நாட்டிலே நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காக வாழ்ந்தார் என்பதும் எனக்குத் தெரியும். திடீரென்று தேர்தல் நேரத்திலே, மரத்திற்கு மரம் தாவுவதைப்போல, நீங்கள் தாவினீர்கள். பதவியைப் பெற்றிருக்கிறீர்கள். அதைப்பற்றி யாருக்கும் கவலையில்லை. ஆனால் நான் கேட்கிறேன், என்ன relief கொடுக்கப் போகிறீர்கள்? தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு ஸ்திரமான ஆட்சி வேண்டுமென்று நாங்கள் விரும்பினோம், வாழ்த்துத் தெரிவித்தோம், அதுவும் political majority இல்லாத ஒரு கட்சிக்கு நாங்கள் வாழ்த்துத் தெரிவித்தோம்.

The only intention is to have a stable Government at the Centre. ஆனால், அந்த அரசில் இடம் பெற்றவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்து, they are patently, deliberately, determinedly trying to destabilise a very sustained and stable Government in this country. I can say that the Tamil Nadu Government is the only stable Government and there is no other Government as stable as the Tamil Nadu Government. இவர்கள் வருகிறார்கள் - நான் என்ன செய்வது, தமிழ்க்குடிமகன் ஞாபகத்திற்கு வருகிறார். எனவே தயவுசெய்து மக்கள் உஷாராக இருக்க வேண்டும். அதைவிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு யாரும் சொல்லத் தேவையில்லை. எந்த நேரத்தில் எப்படிப் பணியாற்ற வேண்டும். எப்படிப் பேச வேண்டும் என்பதெல்லாம்கூட எங்களுக்கெல்லாம் கற்றுத்தருகிற ஆசானாக இருக்கக்கூடியவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். ஆனால் ஆளும் கட்சிக்காரர்கள்கூட மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டிய ஒரு காலம். தமிழ் மக்கள்கூட மிக உஷாராக இருக்கக்கூடிய காலம். ஏனென்றால் வாஜ்பாய் சொல்கிறார். "We will not invoke Article 356. That is not our policy" என்று அவர் சொல்கிறார். ஆனால் வேறு சிலர் தமிழ்நாட்டுக்கு வந்து, அங்கே சென்று வந்தபிறகு மட்டுமல்ல, இங்கிருந்து போகும்போதே இதற்காகத்தான் போகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அவர் திரும்பி வந்து சொல்கிறார், "Yes, that will happen, definitely happen at the appropriate time" 'அந்த நேரத்தில் நடக்கும் என்று நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்' என்றார். அவர் என்ன சொல்கிறார், பாராளுமன்றத்திலே நின்றுகொண்டு, நேற்றையதினம் சொல்கிறார். "It is not our policy, it is

[திரு. ம. அப்துல் லத்தீப்] [1998 ஏப்ரல் 3

not our intention to destabilise any State Government and more so we will not commit ourselves to invoke Article 356. Article 356 will not be invoked unless and until there is a grave situation emerging out of foreign aggression, emerging out of internal disturbances which could not be contained by normal procedure of enforcement of law and order" என்று அவர் சொல்கிறார், ராஜ்யசபாவிலே நின்று.

ஆனால் இங்கே இருப்பவர்கள் சொல்கிறார்கள், 'நடக்கும்' என்று. இதனால் என்ன ஆகும் தெரியுமா? நான் உங்களுக்குச் சொல்கிறேன். முதலமைச்சர் அவர்களுக்கு எல்லாம் தெரியும், அமைச்சர் பெருமக்களுக்கு எல்லாம் தெரியும். `Bureaucracy' இருக்கிறதே. அது மேல்மட்டத்திலே இருக்கக்கூடியவர்களுக்குத் தெரியும். ஆனால் சாதாரணமாக, அரசாங்க அலுவலகங்களிலே பணி செய்யக்கூடியவர்கள் என்ன பேசிக் கொள்வார்கள்? எப்படி நடந்து கொள்வார்கள், வேலைகள் எல்லாம் எப்படி கணக்கப்படுத்தப்படும் என்பதெல்லாம் நான் அறிவேன். எனவே நல்ல வேலை நடக்கவேண்டும் என்பதற்காக நாங்கள் மத்திய அரசாங்கத்திற்கு இன்றைக்குச் சொல்கிறோம்.

*பிற்பகல் 1-20*

வாஜ்பாய் அரசு 5 ஆண்டுகள் இருக்கட்டும். எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். Even Mrs. Sonia Gandhi was expected to be the Prime Minister. She also offered her good wishes and expressed her wish that this Government should continue for a period of five years ஆகையினாலே நான் கேட்கிறேன். இதனுடைய நோக்கம் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதனால்தான், இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கிற அதேநேரத்தில், நான் அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்வது, that you must assert yourself உங்களை நீங்கள் நிலைநிறுத்தவேண்டும். இந்த ஆட்சியை, எந்தக்காரணத்தினாலும் 5 ஆண்டுகள் முடிவதற்குள்ளாக அசைத்துப்பார்க்கின்றவர்கள் இந்த நாட்டிலே யாரும் இல்லை என்பதை நாம் நிலைநிறுத்திக் காட்டவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் என்றால், சட்டம் அப்படி இருக்கிறது. நாம் எல்லாம் இன்றைக்கு உறுப்பினர்களாக இங்கே உட்கார்ந்து இருப்பது, சபாநாயகராக பெருமைக்குரிய மாண்புமிகு திரு. பி.டி.ஆர். அவர்கள் உட்கார்ந்து இருப்பது, முதலமைச்சராக நம்முடைய கலைஞர் அவர்கள் உட்கார்ந்து இருப்பது அல்லது பிரதம மந்திரியாக வாஜ்பாய் இருப்பது, எதனால்.



1998 ஏப்ரல் 3] [திரு. ம. அப்துல் லத்தீப்]

நேற்றுவரையில், வாஜ்பாய் only a Leader of the Opposition and sometime before I was an ordinary man and now I am an hon. member of this House and you are all Hon. Ministers என்ற நிலையை அடைந்தது எதனாலே? ஏதாவது அற்புதம் நடந்ததா? சட்டம். மக்கள் நம்மைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். நம்மைத் தேர்ந்தெடுப்பது தமிழ்நாட்டு மக்கள். நம்மைத் தேர்ந்தெடுக்கும்போது தமிழ்நாட்டு மக்கள், தமிழ்நாடு சட்டமன்றத்திற்குத்தான் நம்மைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கும்போது, 5 ஆண்டுகளுக்கு அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதற்கு மாறாக "நான், பவர் மினிஸ்டர்" என்று பவர் இல்லாத ஒன்றை நீங்கள் பவர் என்று நினைத்துக் கொண்டு, அந்தப் பவரிலே கையை வைத்தால், அடுத்த நிமிடமே நீங்கள் இல்லாமல் போய்விடுவீர்கள். எனவே, மின்சாரக் கம்பியிலே கையை வைத்தால் என்ன நடக்குமோ அதுதான் தமிழ்நாட்டிலே நடக்கும். தமிழ்நாட்டிலே நடக்கிற உறுதியான, நிலையான இந்த ஆட்சியின் மீது கையை வைத்தால், பவர் மினிஸ்டர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

Don't touch live current. Otherwise you will be no more. I wish that you live for all time to come for many years to come because you are the son of my senior. மோகன் குமாரமங்கலம் பெற்றெடுத்த, பொதுவுடமைத் தத்துவத்திலே ஊறிய மோகன் குமாரமங்கலத்தினுடைய செல்வம்—குறுக்கீடு இன்றைக்கு அவருடைய தந்தையைச் சொல்கிறேன்

என்னுடைய அருமை மரியாதைக்குரிய மத்திய அமைச்சர் இப்படிப் பேசுவது முறையற்றது, இது நாட்டிற்கு நன்மை பயக்காது, தீமையை விளைவிக்கும் என்பதை அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். மற்றவர்களுக்கும் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, நீங்கள் எதிர்க்கட்சியிலே இருக்கிறீர்கள், ஏற்கெனவே ஆட்சிப் பொறுப்பிலே இருந்தீர்கள். மறுபடியும் வருவோம் என்று நீங்கள் நினைப்பதிலே எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. மக்கள் அத்தகைய தீர்மானத்தைச் செய்தால். உரிய நேரத்தில் உங்களையும் பாராட்ட நாங்கள் தடையாக இருக்கமாட்டோம். தவறமாட்டோம். ஆனால் ஒன்றை நான் சொல்கிறேன், தவறான வழியில் நீங்கள், கொல்லைப்புறத்தில் யாரையோ கொண்டுவர இருப்பவர் உரிய முறையிலே அல்லாமல் சட்டத்திற்குப்புறம்பாக நாட்டிலே குழப்பம் ஏற்படுத்தி, குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கும் முயற்சியாக நீங்கள் இந்த முயற்சியைச் செய்வீர்களானால், அதற்கான அரசியல் தண்டனை

உங்களுக்கு கிடைத்தே தீரும் என்பதை நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தப் பிரச்சினைகள் இன்றைக்கு எடுத்துச் சொல்லப்பட்டன. குழப்பங்கள், நாட்டிலே அமைதியின்மை, பல மக்கள் அலமலந்து நிற்கிறார்கள் என்று எல்லோரும் சொன்னார்கள். அதற்குக் காரணம் என்ன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர். நம்முடைய திரு. படகுமணன் அவர்கள் அன்றைக்குப் பேசும்போது சொன்னார்கள். உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்களும், மற்றவர்களும் இங்கே சுட்டிக்காட்டினார்கள். வேலையில்லாத் திண்டாட்டம், சமுதாயத்திலே இருக்கக்கூடிய, ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திலே மட்டுமல்ல, எல்லாத் தரப்பு இளைஞர்களிடத்திலேயும் ஒருவிதமான அவநம்பிக்கை, அவர்களுடைய எதிர்காலத்தைப் பற்றிய அவநம்பிக்கை இருக்கிறது. அதனால் அவர்கள் எடுப்பார் கைப்பிள்ளையாக, யார் உணர்ச்சியூட்டினாலும், அதற்குத் தன்னை ஆளாக்கிக் கொள்ளக்கூடியவர்களாக இன்றைக்கு மாறி வருகிறார்கள் என்பதை நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன்.

*பிற்பகல் 1-25*

மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். கோவையிலே கல்விச்சாலை ஏற்படுத்த வேண்டுமென்று. அவர்கள் ஊரிலே கல்விச்சாலை ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி ஏதாவது தேவை. அதனால் பிரச்சினைகள் தீரும் என்று சொன்னால், அரசாங்கத்தை நாம் எல்லோரும் கேட்டு, அங்கே முறையான கல்விச்சாலை வேண்டுமென்று கேட்டுக்கொள்வோம். அதற்கு வேறு வகையிலே தனியார் மூலமாகச் செய்யவேண்டுமென்று சொன்னால் நான் கூட என்னுடைய தொண்டினை அர்ப்பணிக்கத் தயாராக இருக்கிறேன். அதற்கு நான் கூடத்தயார். அந்த ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு என்ற நிலையிலே அல்ல.

நீங்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே எல்லா முஸ்லிம்களுக்கும் இடம் அளித்துள்ளீர்கள். அன்றைக்கே நன்றி செலுத்தினோம். இன்றைக்கும் நன்றி கூறுகின்றோம். எப்போதும் நன்றி உடையவர்களாக இருப்போம். ஆனால் செயலில் அதனுடைய முழுப்பயன், அதாவது உரிய பயன், உரிய விகிதாச்சாரத்தில் இந்தச் சமுதாயத்திற்குக் கிடைக்கவில்லை. அதனுடைய நிர்வாக அமைப்பு அப்படியிருக்கிறது.





நம்முடைய தேர்வு அமைப்பு அப்படியிருக்கிறது. அதனால்தான் இப்போது நாட்டில் என்ன நிலைமை இருக்கிறது என்றால், 1947-லே நாடு எந்த நிலையிலே இருந்ததோ, அதே நிலைமையை, அன்றைக்கு இளைஞனாக இருந்து பார்த்த நான் இன்றைக்கு நாட்டினுடைய நிலைமையைப் பார்க்கின்றேன். பெரியார் தோன்றினார், அண்ணா இருந்தார்கள். மிகப் பெரிய நம்முடைய தமிழ் நாட்டில் மாமனிதர்கள் தோன்றி தமிழர்களுடைய பொது எண்ணத்தையும், பெரு எண்ணத்தையும் நாட்டில் பரப்பி, 1947-லே உருவான அந்தச் சூழ்நிலையை மாற்றினார்கள். பெரியார் தோன்றியதனுடைய பயன் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்திய பூபாகத்திற்கே அந்த வகுப்பு உணர்வு, அந்த காழ்ப்புணர்வுகள் நீக்கப்பட்டு, நாம் எல்லோரும் ஒன்று என்ற உணர்வு நாட்டில் நிலைநிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் இப்போது—நான் அன்றைக்கு இளைஞனாக இருந்து பார்த்த நிலைமையே - அன்றைக்கு என்ன நிலைமை இருந்ததோ, அதே நிலைமைதான் 1998-லேயும் இருக்கிறது. எனவே கலைஞர் அவர்களுக்கு ஆளும் பொறுப்பு மட்டுமல்ல, அவர்கள் பெரியார், அண்ணாவின் வழித் தோன்றல் என்ற காரணத்தினால், நாட்டிலே மறுபடியும், பெரியாரும், அண்ணாவும் மற்றவர்களும் இந்த உணர்வையூட்டி, எந்தச் சூழ்நிலையை உருவாக்கினார்களோ, அந்தச் சூழ்நிலையில் ஏற்பட்டிருக்கிற தொய்வை மாற்றி அமைக்கக் கூடிய பொறுப்பு, கலைஞர் போன்ற, பேராசிரியர் போன்ற பெருந்தலைவர்களுக்கு உண்டு என்பதை நான் இன்றைக்கு நிலைமையை ஆய்வு செய்த பிறகு உணர்கிறேன்.

எனவே நான் கேட்டுக்கொள்வது, தயவுசெய்து இந்த அளவிற்கு நீங்கள் கொஞ்சம் ஒதுக்கித்தாருங்கள். 5 சதவீதமாவது ஒதுக்கீடு இருக்கட்டும். நீங்கள் உத்தியோகத்திற்குக் கொடுக்கும்போது இஸ்லாமிய சமுதாயத்திற்கு அல்லது சிறுபான்மைச் சமுதாயத்திற்கு என்று எடுத்துக்கொண்டாலும்—கேசரி அவர்கள் அடிக்கடி சொல்வார்கள், 10 சதவீதம் அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று—நீங்கள் 10 சதவீதம் இல்லையென்றாலும், அப்படிக் கொடுப்பது சாத்தியம் இல்லை என்றாலும், குறைந்தபட்சம் 5 சதவீதமாவது அந்தச் சமுதாயத்திற்குக் கொடுங்கள். ஏனென்றால் நிர்வாக முறையில் எங்களைத் தேர்வு செய்வதற்கான வாய்ப்பில்லை. இல்லாவிட்டால் நான் ஒரு சமுதாயத்திற்காக வாதாட மாட்டேன். எனவே அதை நீங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ம. அப்துல் லத்தீப்] [1998 ஏப்ரல் 3

அதே நேரத்தில் எல்லோருக்கும் ஓர் அமைப்பு இருக்கிறது. நாங்கள் காயிதே மில்லத் பேரில் ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்று. (குறுக்கீடு)

**Hon. Speaker:** Hon. Member, finish your speech within two minutes.

**Thiru M. Abdul Latheef:** Sir, you can extend it please. But this is the time in which I should complete my speech. I will stop my speech today and continue the next day.

**Hon. Speaker:** No, No. I will give one or two more minutes. You should finish your speech. I have given you 23 minutes.

**Thiru M. Abdul Latheef:** Mr. Speaker, that is there...

**Hon. Speaker:** No, No, I will give one or two minutes.

**Thiru M. Abdul Latheef:** Sir, I request you . . .

**Hon. Speaker:** I am telling you. I am also requesting you. I am not passing an order.

**Thiru M. Abdul Latheef:** Sir, I will continue the next day.

**Hon. Speaker:** You are a senior Member. You please listen to me. I have already given you 23 minutes. I will extend it by 2 more minutes.

**Thiru M. Abdul Latheef:** Sir, I understand, I appreciate. But at the same time this is my right to plead with you. I will continue the next day just for ten or fifteen minutes.

**Hon. Speaker:** Another ten minutes! Then it will become an hour!

**Thiru M. Abdul Latheef:** Sir, this is the most dangerous time that you have called me to speak. This is not the time for me to speak. It took some time for me to take-off. You know that for a diabetic patient it will take some time to take-off and then there is the landing difficulty. Everywhere there is a difficulty of take-off and landing. Therefore, Mr. Speaker, I request you that you must give some more time. Please allow me to continue for the next day.



1998 ஏப்ரல் 3 ]

பிற்பகல் 1-30

**Hon. Speaker:** I cannot give you 15 minutes. Let us not have an argument. I want to avoid argument with you at all times.

**Thiru M. Abdul Latheef:** No Sir, I don't want to insist you.

**Hon. Speaker:** Hon'ble Member, please resume your seat. It is 1.30 now. On the specific understanding that you will not exceed 5 to 7 minutes I will allow you to speak day after tomorrow, i.e., on Monday.

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திங்கட்கிழமை இன்னும் சில உறுப்பினர்கள் பேசவிருப்பதாலும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பேசவிருப்பதாலும், திங்கட்கிழமை கேள்வி நேரத்தை ஒத்திவைக்கலாம் என்ற தீர்மானத்தை முன்மொழியுமாறு மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 6-4-1998 (திங்கட்கிழமை) அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [1998 ஏப்ரல் 3

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (6-4-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

105. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சாராவிக் கழகத்தின் எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்].

106. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்].

107. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்].

108. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் முப்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்].

109. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டதின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்].

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

45. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை, 1997-98.



1998 ஏப்ரல் 3]

46. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்தொன்றாவது அறிக்கை, 1997-98.

47. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்திரெண்டாவது அறிக்கை, 1997-98.

48. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்துமூன்றாவது அறிக்கை, 1997-98.

49. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்துநான்காவது அறிக்கை, 1997-98.

50. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்து ஐந்தாவது அறிக்கை, 1997-98.

D
V24,31'N98
N98.43·1
218453

**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 816, Anna Salai, Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.